**சமூக நலம்**
**மற்றும்**
**சத்துணவுத் திட்டத் துறை**

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2020 - 2021

## மானியக் கோரிக்கை எண்.45

**Dr.V. சரோஜா**
**சமூக நலம் மற்றும்**
**சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர்**

©
தமிழ்நாடு அரசு
2020

# பொருளடக்கம்


| வ. எண் | அத்தியாயம் | பக்கம் |
| --- | --- | --- |
| 1 | முன்னுரை | 1 |
| 2 | சமூக நலம் | 6 |
| 2.1 | குழந்தைகள் நலம் | 12 |
| 2.2 | மகளிர் நலம் | 26 |
| 2.3 | மூத்த குடிமக்கள் நலன் | 48 |
| 2.4 | மூன்றாம் பாலினர் நலன் | 57 |
| 2.5 | தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் | 60 |
| 2.6 | தமிழ்நாடு சமூக நல வாரியம் | 61 |
| 2.7 | மாநில விருதுகள் | 64 |
| 3 | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் | 66 |
| 4 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் | 82 |
| 5 | சமூகப் பாதுகாப்பு | 129 |
| 6 | நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள் | 177 |
| 7 | சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்கள் | 188 |
| 8 | இணைப்பு - 1 | 198 |
| 9 | இணைப்பு - 2 | 199 |

**கோரிக்கை எண்.45**

# சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு 2020-2021

## அத்தியாயம்-1

## முன்னுரை

தமிழ்நாடு அரசு நலிவுற்ற பிரிவினரை முன்னேற்றி அவர்களின் நலத்தினை பேண பல்வேறு திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்தி வருகிறது. ஆதரவற்ற பெண்கள், குழந்தைகள், மூத்த குடிமக்கள், மூன்றாம் பாலினத்தவர் ஆகியோரின் சுகாதாரம், ஊட்டச்சத்து, பாதுகாப்பு, கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் முன்னேற்றத்தினை குறிக்கோளாக கொண்ட சமூக நலத்திட்டங்கள் அவர்களின் பாதுகாப்பான மற்றும் கண்ணியமான வாழ்க்கைக்கு உதவுவதோடு அவர்களது முழுத் திறமையினை எட்டவும் வழி வகுக்கிறது.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, சமூக நல ஆணையரகம், சமூக பாதுகாப்பு ஆணையரகம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் இயக்குநரகம் ஆகியவற்றின் வாயிலாக திட்டங்களை செயல்படுத்துகிறது. மேலும், சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்கள், வருவாய் நிர்வாக ஆணையரகத்தின் மூலம் செயல்படுத்திட இத்துறை ஒருங்கிணைப்பு முகமையாகவும் செயல்பட்டு வருகின்றது. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, பெண்கள், குழந்தைகள் ஆகியோர்

மட்டுமல்லாது திருநங்கையருக்கும் பல்வேறு சேவைகளை அளிக்கிறது. மூத்தக் குடிமக்கள், கணவனை இழந்தோர், கணவனால் கைவிடப்பட்டோர், உழைக்கும் திறனற்ற முதிர்கன்னியர், ஆதரவற்ற மாற்றுத்திறனாளிகள் போன்ற சமுதாயத்தில் நலிவுற்றோருக்கான மாதாந்திர ஓய்வூதியத் திட்டங்களை வகுத்து அவர்கள் கண்ணியமாக வாழ இத்துறை உதவி வருகிறது.

திருமண உதவித் திட்டங்களின் கீழ் "திருமாங்கல்யத்திற்கு தங்கம்" வழங்குதல் போன்ற சீரிய திட்டங்கள் ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு உதவுவதோடு மட்டுமல்லாமல், அவர்கள் உயர்கல்வி கற்கவும் ஊக்கமளிக்கிறது. "பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்" பெண் குழந்தைகள் பிறப்பு முதல் உயர்கல்வி பெறுதல் மற்றும் அதைத் தொடர்ந்து அவர்களது திருமணம் வரையிலான நலன்கள் பெறுவதை உறுதி செய்கிறது. தொட்டில் குழந்தை திட்டம் மக்களின் மனநிலையில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதோடு, பெண் சிசுக் கொலை அதிகமாக இருந்த மாவட்டங்களில் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் கணிசமாக உயர்ந்திடவும் வழிவகை செய்துள்ளது.

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட பெண்களுக்கும், வன்முறையினால் பாதிக்கப்பட்ட மற்றும் துயரத்தில் உள்ள பெண்களுக்கும் மறுவாழ்வு அளித்தல், தங்குமிடம், உணவு, உடை, ஆலோசனை, மருத்துவம்,

சட்ட உதவி ஆகியவற்றை அளித்திடும் நோக்கத்துடன் குறுகிய கால தங்கும் இல்லங்கள் (ஸ்வதார் கிரஹ்) மற்றும் சேவை இல்லங்களை செயல்படுத்தி வருகிறது. இச்சேவை இல்லங்களில் பெண்கள் தங்கள் குழந்தைகளுடன் தங்கி கல்வி மற்றும் தொழிற்பயிற்சிகளை பெற்றிட இயலும். தமிழ்நாடு அரசு மேலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய, வேலைக்கு செல்லும் பெண்களின் நலனுக்காக அவர்களுக்கு உகந்த பாதுகாப்பான பணிபுரியும் மகளிர் விடுதிகளையும் நடத்தி வருகிறது. இல்லங்கள், விடுதிகள் மற்றும் நிறுவனங்களில் தங்கும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

பெண்கள், குழந்தைகள் மற்றும் மூத்தகுடிமக்கள் உரிமைக்காக பல்வேறு சட்டங்களை நடைமுறைப்படுத்தியும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் இல்லங்களை முறைப்படுத்தியும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. மகளிர் தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் மூலம் பள்ளி மாணவ மாணவிகளுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டத்தில் சீருடை தைக்கும் பணியினை வழங்குவதன் மூலம் பெண்கள் பொருளாதார மேம்பாடு அடைவது உறுதி செய்யப்பட்டுள்ளது. நவீன ரக தையல் இயந்திரங்கள் மானியத்துடன் வழங்கப்பட்டு, தையல் தொழிற்கூட்டுறவு சங்க பெண் உறுப்பினர்களின் தைக்கும் திறன் மற்றும் தரம் மேம்படுத்தப்பட்டுள்ளது. பிறந்தது முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகள்,

வளரிளம் பெண்கள் மற்றும் மகளிரின் ஊட்டச்சத்து மற்றும் உடல்நலம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

குழந்தைகளின் பள்ளி சேர்க்கை, பள்ளி இடைநிற்றலை குறைத்தல் ஆகிய குறிக்கோளுடன் தமிழ்நாடு அரசு "புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தினை" **1982**-ல் துவக்கி சத்துணவு வழங்கி வருகிறது. இத்திட்டம் பசி, வறுமை மற்றும் சமூக அவலங்களை தீர்ப்பதில் முன்னிலை வகிக்கிறது. ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரையிலான பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் சூடான உணவு, ஊட்டச்சத்து மற்றும் கலோரிச் சத்தினை அதிகரித்து குழந்தைகளின் ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாகவும் அமைந்துள்ளது.

துயருறும் சூழலில் உள்ள குழந்தைகள் மற்றும் பெண்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகளை பாதுகாக்க ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், **1956**, பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம் **2012**, இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் **2015**, ஆகியவற்றினை நடைமுறைப்படுத்திடும் பணியினை சமூக பாதுகாப்புத் துறை செயல்படுத்தி வருகிறது. பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் குழந்தைகளுக்காக

குழந்தைகள் இல்லங்கள், கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள், பிற்காப்பு நிறுவனங்கள், மறுவாழ்வு மற்றும் பாதுகாப்பிற்கான இல்லங்களை நடத்தி வருகின்றது.

மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள், ஆதரவற்ற விதவைகள், ஆதரவற்ற பெண்கள் / கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் திருமணமாகாத, உழைக்கும் திறனற்ற 50 வயதுக்கும் மேற்பட்ட ஏழை பெண்களுக்கு சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியமாக மாதம் ₹1,000/- வீதம் அரசு வழங்கி வருகின்றது. தங்கள் குடும்பத்தினரால் கைவிடப்பட்ட ஆதரவற்ற மூத்த குடிமக்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகள் ஆகியோர் முதியோர் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்களில் வைத்து பராமரிக்கப்படுகின்றனர்.

மூன்றாம் பாலினரின் நிலையினை மேம்படுத்தும் விதமாக அவர்களுக்கு அடையாள அட்டை, கல்வி உதவித்தொகை, குடியிருப்பு வசதி, ஓய்வூதியம், வாழ்வாதாரத்திற்கான பயிற்சிகள் மற்றும் நிதியுதவி அளித்தல் ஆகியவற்றை இத்துறை செய்து வருகிறது.

தமிழ்நாடு அரசின் முனைப்பான நடவடிக்கைகளால் குழந்தைகள், பெண்கள், மூத்த குடிமக்கள் மற்றுமுள்ள நலிவுற்ற பிரிவினரின் நிலையினை மேம்படுத்தி அவர்கள் பொருளாதார முன்னேற்றம், சமநிலை, சமூக உரிமைகள் மற்றும் சமூக நீதியினை அடைய உதவி புரிகிறது.

## அத்தியாயம் - 2

## சமூக நலம்

சமுதாயத்தில் பெண்களுக்கான சம வாய்ப்புகளை நல்கி அவர்களை எல்லாத் துறைகளிலும் வெற்றியடையச் செய்து, அதிகாரமளித்தலை உறுதி செய்வதில் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க முன்னேற்ற நிலையை அடைந்துள்ளது. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை என்பது ஒரு பழம்பெருமை வாய்ந்த துறை ஆகும். இது பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பல்வேறு முக்கிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. பெண் குழந்தை பாதுகாப்பு திட்டமும் பெண்களுக்கான திருமண உதவித் திட்டங்களும் பாலின சமத்துவத்தையும், குழந்தை பாலின விகிதத்தையும் உயர்த்தி, குழந்தை திருமணம் மற்றும் பெண் குழந்தைகளைப் பிறப்பிலேயே அழித்தல் ஆகிய கொடுமைகளை ஒழிப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை முக்கியமான பல நலத் திட்டங்களை செயல்படுத்துவதுடன் குழந்தைகள், பெண்கள், முதியோர் ஆகியோரின் பாதுகாப்பிற்கும், பராமரிப்பிற்கும் சேவை இல்லங்கள், பணிபுரியும் மகளிர் விடுதிகள், ஒருங்கிணைந்த தீர்வு மையம், குறுகிய கால தங்கும் விடுதிகள், முதியோர் இல்லங்கள் ஆகியவற்றைச் செயல்படுத்தி வருகிறது.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையானது சமூக நீதிச் சட்டங்களான வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961, குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005, குழந்தைத் திருமணத் தடைச் சட்டம், 2006, பணியிடங்களில் பெண்களுக்கெதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, விலக்கு மற்றும் குறைதீர்வு) சட்டம், 2013 முதலிய சட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான உரிமைகளை நிலைநாட்டுகிறது. இத்துறை குழந்தைகள், பெண்கள், முதியோர், மூன்றாம் பாலினர் என்ற சமூகத்தின் நான்கு முக்கிய பிரிவினரின் நலம் பேணுகிறது.

தமிழ்நாடு அரசு பெண் குழந்தைகளுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தை 1992 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் பெண் குழந்தைகள் உயர்கல்வி கற்பதையும், பெற்றோருக்கு தன்னம்பிக்கை ஊட்டி பெற்றோர் தங்கள் பெண் குழந்தைகளை ஏற்று மதிப்புடன் நடத்துவதையும் ஊக்குவிக்கிறது. இத்திட்டமானது பெண்சிசுக் கொலையைத் தடுத்து ஏழை குடும்பத்தில் உள்ள பெண் குழந்தைகளுக்கு ஊக்குவிப்பு நிதி வழங்கி கல்வி

அளிக்கும் இரண்டு உன்னத நோக்கங்களைக் கொண்டுள்ளது.

"தொட்டில் குழந்தை திட்டம்" என்ற தனித்துவமான திட்டம் **1991**-ஆம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டு பிறக்கும் பெண் குழந்தைகளை கொல்வதிலிருந்து காப்பாற்றுவது முதல் பாதுகாத்து, கைவிடப்பட்ட மற்றும் பெற்றோரால் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளை தத்தெடுக்க வழங்குதல் வரை பேணுகிறது. குழந்தை திருமணத் தடைச் சட்டம், **2006**-ஐ சிறப்பான முறையில் செயல்படுத்துவதன் மூலம் பெண் குழந்தைகளின் சுகாதாரம் மற்றும் கல்வி மேம்பாடு அடைவதுடன் இளவயதில் கர்ப்பம் தரிக்கும் அபாயம் தடுக்கப்பட்டுள்ளது.

பெண்களின் உயர்கல்வியை ஊக்குவிக்கும் விதமாகவும் அவர்களது திருமணத்திற்கு உதவும் விதமாகவும் தமிழ் நாடு அரசு திருமண நிதி உதவி திட்டங்களை முதன்மைத் திட்டங்களாக செயல்படுத்தி வருகிறது. பெண் குழந்தைகளின் கல்வி நிலையை மேம்படுத்துவதிலும், இடைநிற்றலை குறைப்பதிலும், தமிழ்நாட்டில் ஒரு சாதகமான விளைவினை இத்திருமண உதவித் திட்டங்கள் ஏற்படுத்தியுள்ளன. ஏழைப் பெண்கள் பயன்பெறும் வகையில் ஐந்து வகையான திருமண உதவித் திட்டங்கள் வாயிலாக நிதி

உதவியுடன் தாலிக்கு **8** கிராம் தங்கமும் வழங்கி வருகிறது. இத்திருமண உதவித் திட்டங்களில் ஏழைப்பெற்றோரின் மகள்கள், ஆதரவற்ற பெண்கள், மறுமணம் புரியும் விதவைகள், விதவைத் தாயாரின் மகள்கள் மற்றும் கலப்புத்திருமணம் செய்து கொண்ட தம்பதியர் ஆகியோர் பயனடைகின்றனர்.

தமிழ்நாட்டில் மாநில பெண்கள் வள மையம் மத்திய அரசின் பெண்கள் அதிகாரமளிப்பதற்கான தேசிய குழுமத்தின் கீழ் **2014**-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இம்மையமானது மத்திய மாநில அரசுகளின் **60:40** என்ற விகிதாசாரத்திலான நிதியுதவியுடன் பெண்களுக்கான முதன்மை திட்டங்களை செயல்படுத்தும் நிறுவனங்களுடன் இணைந்து கண்காணிப்பு மற்றும் ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள உதவி வருகிறது. மாநில பெண்கள் வள மையம் பல்வேறு துறைகளுடன் இணைந்து திறன் வளர்ப்பு பயிலரங்கம், தகவல், கல்வி, தொடர்பு செயல்பாடுகள், சட்ட விழிப்புணர்வு பயிற்சிகள், பாலின சமத்துவம் மற்றும் குடும்ப வன்முறை குறித்த விழிப்புணர்வு ஆகிய செயல்பாடுகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துகிறது. அரசின் முதன்மைத் திட்டங்கள் குறித்து ஆய்வுப் பணிகளையும் மேற்கொள்கிறது.


மகளிர் சக்தி மையம் என்ற மற்றுமொரு புதிய முன்முயற்சி திட்டம் என்பது கிராமப்புற பெண்களின் மேம்பாட்டிற்கான திறன்வளர்ப்பு, வேலை வாய்ப்பு, எண்ம எழுத்தறிவு, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து ஆகியவற்றை ஒருங்கிணைத்து ஓரிடத்திலேயே வழங்குவதாகும். இத்திட்டம் கிராமப்புற பெண்கள், தங்களுக்கான அரசு நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு, பயிற்சி மற்றும் திறன் வளர்த்தலை பெறுவதற்கு இணைப்புப் பாலமாக அமைகிறது. இத்திட்டம் மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் செயல்படுத்தப்படுகிறது. மகளிர் சக்தி மையம் தற்போது அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.


மத்திய அரசு, பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் விதமாக "சகி" என்ற ஒருங்கிணைந்த சேவை மையத்தை உருவாக்கி, தனியார் மற்றும் பொது இடங்களில், குடும்பத்தில், சமுதாயத்தில் பணிபுரியும் இடத்தில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவும் வகையில் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு அரசு "அம்மா அழைப்பு மையத்துடன்" இணைந்து மகளிர் உதவி எண் **"181"** என்ற கட்டணமில்லா தொலைபேசி சேவையை

இருபத்தி நான்கு மணி நேரமும் பெண்களின் நலனுக்காக செயல்படுத்தி வருகிறது.

மேற்காணும் திட்டங்களின் மூலம் தமிழ்நாட்டில் பெண்கள், குழந்தைகள், மூன்றாம் பாலினர் மற்றும் முதியோரின் நலன் காக்கப்படுகிறது.






## 2.1 குழந்தைகள் நலம்

குழந்தை நல சேவைகள் மற்றும் திட்டங்கள் யாவும், **18** வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் உயிர் வாழ்வதற்கான உரிமை, சமத்துவம் மற்றும் கல்வி கற்பதற்கான உரிமைகளை காக்கவும், பொருளாதார ரீதியாக சுரண்டப்படுதல் மற்றும் தவறாக பயன்படுத்தப்படுவதிலிருந்து பாதுகாக்கவும் உருவாக்கப்பட்டவை ஆகும். இந்த துறையானது, பெண் குழந்தைகளுக்கு எதிரான அனைத்து விதமான

பாலினப் பாகுபாடுகள் மற்றும் வன்முறைகளை முற்றிலும் ஒழிப்பதை நோக்கமாக கொண்டும், நீடித்த வளர்ச்சி இலக்குகள்-2030இன் ஐந்தாவது இலக்கிற்கான குறிக்கோள்களை நிறைவேற்றும் விதமாகவும், பெண் குழந்தைகளின் நலனுக்கான கீழ்கண்ட திட்டங்களையும், சட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது.

1. தொட்டில் குழந்தைத் திட்டம்
2. முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்
3. பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டம்
4. சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான இல்லங்கள்
5. குழந்தை திருமண தடைச் சட்டம், 2006

### 2.1.1 தொட்டில் குழந்தைத் திட்டம்

பெண் குழந்தைகள் பிறக்கும்போது கொல்லப்படும் கொடுமையான வழக்கத்தை தடுக்கும் நோக்கத்தோடு நாட்டிலேயே முன்மாதிரியாக தமிழ் நாடு அரசால் சேலம் மாவட்டத்தில் "தொட்டில் குழந்தைத் திட்டம்" 1992 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பெறப்படும் குழந்தைகள், குழந்தைகளே இல்லாத தம்பதியருக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தத்து கொடுக்கப்பட்டு வருகின்றனர். இதன் மூலம் பச்சிளம் குழந்தைகள் கொல்லப்படுவதிலிருந்து காப்பாற்றப்பட்டு, குழந்தைகளே இல்லாத தம்பதியினருக்கு அக்குழந்தைகளை சட்டப்பூர்வமாக அளித்து, அக்குழந்தைகளுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவது மட்டுமல்லாது, அத்தம்பதியர் சமூகத்தில்

மதிப்பு மற்றும் மகிழ்ச்சியோடு வாழ்வதற்கு வாய்ப்பும் அளிக்கப்பட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டு தொட்டில் குழந்தைத் திட்டம் மறுவடிவாக்கம் செய்யப்பட்டு மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் தர்மபுரி ஆகிய நான்கு மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. மேலும் 2011 ஆம் ஆண்டில் கடலூர், அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. மேற்கண்ட மாவட்டங்களில் குழந்தைகளின் உடனடித் தேவைகளை கவனிப்பதற்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய வரவேற்பு மையங்கள் திறக்கப்பட்டு, நிராதரவாக விடப்படும் குழந்தைகளை பெறுவதற்கு மருத்துவமனைகளில் தொட்டில்கள் வைக்கப்பட்டுள்ளன.

தொட்டில் குழந்தைத் திட்டம் மூலம் 2019-2020 ஆம் ஆண்டில் 161 குழந்தைகள் (ஆண் 52, பெண் 109) பெறப்பட்டு உள்ளனர். இத்திட்டம் தொடங்கியது முதல் பிப்ரவரி 2020 வரை 5,400 (ஆண் - 1,114 பெண் - 4,286) குழந்தைகள் இறப்பின் பிடியிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர் என்பதே இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும்.

**2020-2021-ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹44.12 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.1.2 முதலமைச்சரின் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம்

பெண் குழந்தைகளை பாரமாகக் கருதி அவர்களுக்குக் கல்வி அளிப்பதிலும், பணிக்கு அனுப்புவதிலும் மற்றும் திருமண செலவுகளுக்கு அஞ்சியும் ஆண் குழந்தைகளுக்கு மிகவும் முக்கியத்துவம் அளிக்கும் இச்சமுதாயத்தின் எதிர்மறையான எண்ணத்தை போக்கும் விதமாக இந்நாடே போற்றும் வண்ணம் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் **1992**-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டமானது சிறு குடும்ப நெறியை ஊக்கப்படுத்தவும், பாலின வேறுபாட்டை களையவும், ஏழைக் குடும்பங்களில் பிறந்த பெண் குழந்தைகளுக்குப் பயனளிக்கும் விதமாகவும் அரசால் நேரடியாக வைப்பு நிதியாக முதலீடு செய்து உதவி புரியும் திட்டமாகும்.

இத்திட்டத்தின் மூலமாக பெண் குழந்தைகள் மேல்நிலைப்படிப்பில் இடைநிற்றலின்றி தொடர்ந்து படிக்கவும், இத்திட்டத்தின் மூலம் பெறும் முதிர்வுத் தொகையினை பயன்படுத்தி உயர்கல்வி பயிலும் நிலையை உருவாக்கவும், பெற்றோர்களின் நிதிச்சுமையையும், மனச்சுமையையும் குறைக்கவே பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**திட்டத்தின் நோக்கங்கள்**

- இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தவுடன் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ள பெற்றோர்களை ஊக்குவித்தல்

- பெண் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாத்தல், பெண் குழந்தைகளுக்கு சமூக மற்றும் பொருளாதார அதிகாரத்தினை வழங்குதல்.

- பெண் குழந்தைகளின் நிலையை மேம்படுத்த குடும்பத்தினரின் பங்கினை உறுதி செய்தல்.

- பள்ளிகளில் பெண் குழந்தைகளின் சேர்க்கையை அதிகரித்தல், இடைநிற்றலை தவிர்த்தல் மற்றும் அவர்கள் குறைந்த பட்சம் 10 ஆம் வகுப்பு வரை கல்வி பயில ஊக்குவித்தல்.

- 18 வயதிற்கு பிறகே திருமணம் செய்து கொள்ளும் எண்ணத்தினை பெண் குழந்தைகளிடம் உருவாக்குதல்.

# இத்திட்டத்தின் வகைகள்

| வ. எண். | திட்டங்கள் | ஆரம்ப முதலீட்டுத் தொகை (₹) | திட்டத்தில் பயன்பெறத் தேவையான தகுதிகள் |
|---|---|---|---|
| 1 | திட்டம் -1 (ஒரு பெண் குழந்தை) | 50,000 | • குடும்பத்தில் ஒரே ஒரு பெண் குழந்தை (திட்டம்-1), இரு பெண் குழந்தைகள் (திட்டம்-2) மட்டும் இருக்க வேண்டும். ஆண் குழந்தை இருக்க கூடாது. எதிர்காலத்தில் ஆண் குழந்தையை தத்தெடுக்கவும் கூடாது.<br>• பெற்றோரில் ஒருவர் 35 வயதிற்குள் கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொண்டிருக்க வேண்டும்.<br>• விண்ணப்பிக்கும் போது குழந்தைகளின் பெற்றோர் தமிழ்நாட்டில் 10 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து வசிப்பவராக இருக்க வேண்டும்.<br>• குடும்ப ஆண்டு வருமானம் ₹72,000/-க்குள் இருக்க வேண்டும்.<br>• திட்டம்-1ல், குழந்தையின் 3 வயது முடிவதற்குள்ளும், திட்டம்-2ல் |
| 2 | திட்டம்-2 (இரண்டு பெண் குழந்தைகள்) | 25,000 (ஒவ்வொரு பெண் குழந்தைக்கும்) | |

| | | | |
|---|---|---|---|
| | | | இரண்டாவது குழந்தையின் 3வயது முடிவதற்குள்ளும் திட்டத்தில் பயன்பெற விண்ணப்பிக்க வேண்டும்.<br>• முதல் மற்றும் இரண்டாம் பிரசவங்களின் போது, ஒன்றுக்கு மேற்பட்ட பெண் குழந்தைகள் இருப்பின், அவர்கள் திட்டம்-2ன் கீழ் பயன் பெறுவர். |

**முதிர்வுத் தொகை விவரம்**

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் இத்திட்டத்தின் கீழ் பெண் குழந்தைகளின் பெயரில் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட மாதந்தோறும், திரளும் வட்டியுடன் கூடிய தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் வைப்பு நிதி முதலீடு செய்யப்படுகிறது. மேற்படி வைப்புத் தொகை ஒவ்வோர் ஐந்தாண்டு முடிவிலும் புதுப்பிக்கப்பட்டு 18 வயது நிறைவடைந்ததும் வட்டியுடன் கூடிய முதிர்வுத் தொகை அப்பெண் குழந்தைக்கு வழங்கப்படுகிறது. இப்பயனை அடைய பெண் குழந்தை பத்தாம் வகுப்பு வரை படித்து, பொதுத் தேர்வு எழுதியிருத்தல் வேண்டும். இவ்வாறு வழங்கப்படும் முதிர்வுத் தொகை அப்பெண் குழந்தையின் உயர்கல்விக்கு உதவுகிறது.

இத்திட்டத்தின் கீழ் பிப்ரவரி 2020 வரை 9,74,222 பெண் குழந்தைகள் பதிவு செய்யப்பட்டு

**₹1523.72** கோடி தொகை வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. **2019-2020** ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின் கீழ் **24,370** பெண் குழந்தைகள் பதிவு செய்யப்பட்டு **₹60.97** கோடி தொகை வைப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**2020-2021 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹140.13 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.1.3 பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம் திட்டம்

உயிருடன் பிறக்கும் **1000** குழந்தைகளில் குழந்தை பாலின விகிதம் தேசிய சராசரி அளவான **918** விட குறைவாக இருந்த மாவட்டங்களில் "பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம்" என்ற திட்டம் **2015**-ஆம் ஆண்டு மத்திய அரசால் தொடங்கப்பட்டது. ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையே, ஆண்/பெண் விகிதாச்சாரம் அபாயகரமான அளவில் குறைந்து வருவதை **2011**-ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு சுட்டிக் காட்டியதை தொடர்ந்தே இத்திட்டம் வடிவமைக்கப்பட்டது.

**திட்டத்தின் நோக்கம்:-**

i. பாலின பாகுபாடு அடிப்படையில் குழந்தைகளின் பாலினம் அறிந்து கொல்லப்படுவதை தடுத்தல்.

ii. பெண் குழந்தை உயிர் வாழ்வதையும் அவர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்தல்.

iii. பெண் குழந்தையின் கல்வி மற்றும் பங்கேற்பினை மேம்படுத்துதல்.

**திட்டத்தின் செயல்பாடு:-**

தமிழ்நாட்டில் குழந்தை பாலின விகிதம் தேசிய அளவை விட மிக குறைவாக இருந்த கடலூர் மாவட்டத்தில் ஜனவரி, 2015-ஆம் ஆண்டு, "பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம்" திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூன்று வருட வெற்றிகரமான செயல்பாட்டினால் மாவட்டத்தின் பிறப்பு பாலின விகிதம் 886-லிருந்து 956 ஆக உயர்ந்ததால் 2017-ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கான தேசிய விருது இம்மாவட்டத்திற்கு கிடைத்தது. மார்ச் 08, 2018-ல் இத்திட்டமானது தேசிய அளவில் 640 மாவட்டங்களுக்கு விரிவுப்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் குழந்தை பாலின விகிதத்தை கருத்திற் கொண்டு அரியலூர், தருமபுரி, நாமக்கல், சேலம், பெரம்பலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், திருச்சிராப்பள்ளி மற்றும் சென்னை ஆகிய 10 மாவட்டங்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் இம்மாவட்டங்களில் அனைத்து நிலைகளிலும் துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைந்த செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மீதமுள்ள 21 மாவட்டங்களில், பெண் குழந்தைகளின் முக்கியத்துவம் மற்றும் அவர்களது கல்வியை மேம்படுத்துதலை உறுதி செய்யும் விதமாக தொலைத்தொடர்பு மற்றும் ஊடக செய்திகளின் வாயிலாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், ஒவ்வொரு பெண் குழந்தை பிறப்பையும் வாழ்த்து கடிதம் மூலம் சிறப்பித்தல், தாய்மார்களுக்கு சுகாதார பொருட்கள் வழங்குதல், பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பேரணி, மனித சங்கிலி, நெடுந்தூர ஓட்டம், கையெழுத்து இயக்கம் போன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துதல், பிறக்கின்ற ஆண், பெண் குழந்தைகள் பற்றிய விவரங்கள் அடங்கிய தகவல் பலகை மூலம் கிராமங்களில் பிறப்பு பாலின விகிதத்தினை கண்காணித்தல் ஆகிய செயல்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

## மாநிலத்திற்கான தேசிய விருது-2019

"பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம்" திட்டத்திற்கு அனைத்து வகையிலும் உறுதுணையாக இருந்து, வழிநடத்தி, கண்காணித்து, திட்ட இலக்குகளை எய்திட, தமிழ் நாடு அரசு மேற்கொண்ட முயற்சிகளை அங்கீகரிக்கும் விதமாக மத்திய அரசு 2019-ஆம் ஆண்டுக்கான தேசிய விருதினை தமிழகத்திற்கு வழங்கி சிறப்பித்தது.

**மாவட்டத்திற்கான தேசிய விருது-2019**

கடந்த நான்கு வருடங்களாக குழந்தை பிறப்பு பாலின விகிதத்தைத் தொடர்ந்து முன்னேற்றியமைக்காக நாமக்கல் மாவட்டம் சிறந்த மாவட்டத்திற்கான தேசிய விருதினை பெற்றது.

விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பொது மக்களுக்கு சிறப்பான முறையில் சென்றடையும் விதத்தில் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்காக சிறந்த மாவட்டத்திற்கான தேசிய விருதினை திருவள்ளூர் மாவட்டம் பெற்றது.

### 2.1.4 சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான இல்லங்கள்

தத்தெடுக்க விரும்பும் பெற்றோர்கள், தொட்டில் குழந்தைத் திட்டம் மூலம் பெறப்பட்ட மாற்றுத் திறனாளிகளாக உள்ள குழந்தைகளை தவிர்ப்பதால் அவர்கள் காஞ்சிபுரம், கோயம்புத்தூர், திருவள்ளூர் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் உள்ள சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான இல்லங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இக்குழந்தைகளைப் பராமரிக்க தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் நான்கு இல்லங்களுக்கும் அரசு மானியம் வழங்குகிறது. தற்போது இவ்வில்லங்களில் 135 குழந்தைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

**2020-2021 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ₹37.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 2.1.5 குழந்தைத் திருமண தடைச் சட்டம், 2006

இந்தியாவில் பெண்களுக்கு 18 வயதும், ஆண்களுக்கு 21 வயதும் திருமணத்திற்கான சட்டபூர்வ வயதாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இச்சட்டப்பூர்வ வயதிற்கு முன்னர் நடைபெறும் எந்தத் திருமணமும் சட்டத்தை மீறிய செயலாகக் கருதப்படுகிறது. குழந்தைத் திருமணம் என்பது ஆணுக்கு நடந்தாலும் அல்லது பெண்ணுக்கு நடந்தாலும், அது குழந்தைகளின் உரிமைகளை அத்துமீறும் செயலாக உள்ளது மட்டுமின்றி குழந்தைகளிடமிருந்து அவர்களின் குழந்தைத் தன்மையைப் பறித்து, அவர்களின் அடிப்படை உரிமைகளான சுகாதாரம், ஊட்டச்சத்து, கல்வி போன்றவற்றை மறுப்பதுடன், குழந்தைகளை வன்கொடுமை, ஏளனம் மற்றும் ஏமாற்றப்படுதலுக்கு ஆட்படுத்துகிறது.

### குழந்தைத் திருமண தடைச் சட்டத்தை செயல்படுத்துதல்

சமூகத்தில் நடைபெற்று வரும் குழந்தைத் திருமணங்களை ஒழிப்பதற்காக மத்திய அரசால் 1929-இல் இயற்றப்பட்ட குழந்தைத் திருமண தடுப்புச் சட்டம் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக குழந்தைத் திருமண தடைச் சட்டம், 2006-ல் இயற்றப்பட்டது. குழந்தை திருமண தடைச் சட்டத்தை நடைமுறை படுத்துவதற்காக தமிழ் நாடு அரசால் மாநில விதிகள்

ஏற்படுத்தப்பட்டு **30.12.2009** அன்று அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி, மாவட்ட சமூகநல அலுவலர்கள் "குழந்தைத் திருமண தடுப்பு அலுவலர்களாக" நியமிக்கப்பட்டுள்ளனர். குழந்தைத் திருமணம் நடைபெறுவது குறித்த தகவல், தொலைபேசி, கைப்பேசி, குறுஞ்செய்தி, மின்னஞ்சல் அல்லது மற்ற எவ்வகையில் கிடைக்கப் பெற்றாலும் யார் மூலம் பெறப்பட்டாலும் அப்புகாரினை ஏற்று நடவடிக்கை எடுக்க குழந்தைத் திருமண தடுப்பு அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குழந்தைத் திருமணத்தை தடுப்பதற்கும், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பு மற்றும் நிவாரணம் வழங்குவதற்கும், அத்தகைய திருமணங்கள் நடத்துபவர்கள் மற்றும் ஏற்பாடு செய்பவர்கள் மீது அதிகபட்ச தண்டனையான இரண்டு வருட கடுங்காவல் தண்டனை மற்றும் ஒரு இலட்சம் அபராதத் தொகை அல்லது இரண்டும் சேர்த்து வழங்கவும் இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. குழந்தை திருமணங்களை தடுக்கவும், அது குறித்து தகவல் தெரிவித்திடவும், ஊராட்சித் தலைவர்கள் தலைமையில், ஊராட்சி அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

குழந்தைத் திருமணங்களைத் தடுக்கும் விதமாக அரசின் பல்வேறு நலத்திட்டங்களில் பயனடைய பெண் குழந்தைகளின் குறைந்தபட்ச வயது பதினெட்டு என்பதை தமிழ்நாடு அரசு கட்டாயமாக்கி உள்ளது. மேலும், குழந்தை திருமண தடைச் சட்டம் **2006** குறித்த விழிப்புணர்வினை பொது மக்களுக்கு

ஏற்படுத்திட அனைத்து மாவட்டங்களிலும் பல்வேறு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

**2019** ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் **10,913** குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. **2019** ஆம் ஆண்டில் மட்டும் **2,242** குழந்தை திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

### 2.1.6 பெண் குழந்தைகளின் முன்னேற்றத்திற்கான மாநில விருது

பெண் குழந்தைகளுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுக்கும் **18** வயதுக்கு கீழ் உள்ள பெண் குழந்தைகளின் முயற்சிகளை அங்கீகரித்து, அவர்களை பாராட்டி ஊக்குவிக்கும் வகையில் நாட்டிலேயே முதல் முறையாக தமிழ்நாடு அரசால் தேசிய பெண் குழந்தைகள் தினமான ஜனவரி **24**-ஐ முன்னிட்டு **2017**-ஆம் ஆண்டு முதல் மாநில விருதாக **₹1.00** இலட்சத்திற்கான காசோலையும் பாராட்டு பத்திரமும் வழங்கப்பட்டு வருகிறது.

கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த சிறுமி ச.பவதாரணி என்பவருக்கு சமூக பிரச்சனைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகளை களைந்திட மேற்கொண்டு வரும் அவரது தொடர்ச்சியான செயல்பாடுகளுக்காகவும், அனைத்து குழந்தைகளுக்கும் முன்மாதிரியாக திகழ்ந்ததற்காகவும் **2019-2020**-ஆம் ஆண்டுக்கான பெண் குழந்தைகளின் முன்னேற்றத்திற்கான மாநில விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

### 2.1.7. புதிய முயற்சிகள்

குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்துவதற்காக சிறப்பாக செயலாற்றும் மூன்று மாவட்ட நிர்வாகங்களுக்கு முதல் மூன்று பரிசுகளாக தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும், சான்றிதழும் வழங்கிட தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2.2 மகளிர் நலம்

பெண்களின் வளர்ச்சியில் மிகுதியான கவனம் செலுத்தி வரும் தமிழ்நாடு அரசு, அவர்களின் முன்னேற்றத்திற்காக பல சிறப்புத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. சமுதாயத்தில் பெண்களின் நிலை உயரவும், அவர்களுக்கான அங்கீகாரம், அதிகாரம், சம உரிமை, முடிவெடுக்கும் தன்மை, வேலைவாய்ப்பு, பாதுகாப்பு மற்றும் உரிமைகள் ஆகியவற்றை உறுதிப்படுத்த சமூக நீதிச்சட்டங்களான வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961, குடும்ப வன்முறையில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005, பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள் (தடுப்பு,விலக்கு மற்றும் குறைதீர்வு) சட்டம்,2013, மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம்,2014 ஆகிய சட்டங்களையும் திருமண உதவித் திட்டங்கள், பணிபுரியும் மகளிர் விடுதிகள், சேவை இல்லங்கள், மகளிர் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றையும் சமூக நலத் துறை செயல்படுத்தி வருகிறது.

### 2.2.1 திருமண உதவித் திட்டங்கள்

தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் திருமண உதவித் திட்டங்கள் மக்களின் பேராதரவு பெற்ற திட்டங்களாகும்.

1. வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள ஏழைப் பெற்றோர் தம் மகளின் திருமணத்தை நிதிச்சுமையின்றி தாலிக்கு தங்கத்துடன் நடத்திட உதவும் திட்டம் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டமாகும்.
2. விதவைத் தாயாரின் துயர் துடைக்க அவர்களின் மகள் திருமணத்திற்கு நிதியுதவியுடன் தாலிக்கு தங்கமும் வழங்கும் திட்டம் ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவையின் மகள் திருமண உதவித் திட்டமாகும்.
3. தாய் தந்தையற்ற நிராதரவான பெண்களின் திருமண நிலையை உறுதி செய்திட உதவிடும் திட்டம் அன்னை தெரசா நினைவு திருமண உதவித் திட்டமாகும்.
4. "விதவை மறுமணம்" மூலம் அவர்கள் மறுவாழ்வை உறுதி செய்யவும், அவர்களின் சமுதாய அந்தஸ்தை உயர்த்தவும் வழிவகுத்த திட்டம் டாக்டர். தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண உதவித் திட்டமாகும்.
5. சாதி, மத வேற்றுமைகளை ஒழித்து சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் திட்டம் டாக்டர். முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் கலப்பு திருமண உதவித் திட்டமாகும்.

**தமிழ்நாடு அரசின் ஐந்து வகையான திருமண உதவித் திட்டங்கள் கீழ்க்காணும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:-**

| திருமண உதவித் திட்டத்தின் பெயர் | ஆண்டு வருமான வரம்பு | குறைந்தபட்ச வயது வரம்பு | கல்வித் தகுதி | விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கால அளவு |
|---|---|---|---|---|
| மூவலூர் இராமாமிர்தம் - ஏழை பெற்றோர் | ₹72,000 | மணமகள் - 18 வயது மணமகன் - 21 வயது | குறைந்தபட்சம் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பழங்குடியினர்- 5ம் வகுப்பு | திருமணத்திற்கு 40 நாட்களுக்கு முன்னர் |
| ஈ.வெ.ரா. மணியம்மையார் - விதவை மகள் | ₹72,000 | மணமகள் - 18 வயது மணமகன் - 21 வயது | இல்லை | திருமணத்திற்கு 40 நாட்களுக்கு முன்னர் |
| அன்னை தெரசா- ஆதரவற்ற பெண் | வருமான வரம்பு இல்லை | மணமகள் - 18 வயது மணமகன் - 21 வயது | இல்லை | திருமணத்திற்கு 40 நாட்களுக்கு முன்னர் |
| டாக்டர் தர்மாம்பாள் - விதவை மறுமணம் | வருமான வரம்பு இல்லை | மணமகள் - 20 வயது மணமகன் - 40 வயது (அதிகபட்சம்) | இல்லை | மறுமணம் முடிந்த 6 மாதக் காலத்திற்குள் |
| டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி - கலப்புத் திருமணம் ** I & II திட்டம் | வருமான வரம்பு இல்லை | மணமகள் - 18 வயது மணமகன் - 21 வயது | குறைந்தபட்சம் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பழங்குடியினர்- 5ம் வகுப்பு | திருமணம் முடிந்த இரண்டு ஆண்டிற்குள் |

****திட்டம் - I :** கலப்புத் திருமண தம்பதியரில் ஒருவர் ஆதி திராவிடர் அல்லது பழங்குடியினர் இனத்தவராகவும், மற்றொருவர் பிற இனத்தை சேர்ந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

****திட்டம் - II :** கலப்புத் திருமணம் செய்பவர்களில் ஒருவர் முற்பட்ட வகுப்பினராகவும், மற்றொருவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பு / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகவும் இருத்தல் வேண்டும்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், ஈ.வெ.ரா மணியம்மையார் மற்றும் அன்னை தெரசா ஆகிய திருமண உதவித் திட்டங்களில், **8** கிராம் தங்க நாணயத்துடன் பட்டம் / பட்டயம் பெற்றவர்களுக்கு **₹50,000/-,** ஏனையோருக்கு **₹25,000/-** நிதியுதவியாக வழங்கப்படுகிறது.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் மற்றும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி திருமண உதவித் திட்டங்களின் கீழ், **8** கிராம் தங்க நாணயத்துடன் பட்டதாரி அல்லாதோருக்கான நிதியுதவித் தொகையான **₹25,000/-**த்தில் மின்னணு பரிமாற்றம் மூலம் **₹15,000/-,** தேசிய சேமிப்பு பத்திரமாக **₹10,000/-,** பட்டம் / பட்டயம் பெற்றோருக்கான நிதியுதவி தொகை **₹50,000/-**த்தில் மின்னணு பரிமாற்றம் மூலம் **₹30,000/-,** தேசிய சேமிப்பு பத்திரமாக- **₹20,000/-** வழங்கப்படுகிறது.

**2019-2020**-ஆம் நிதியாண்டில் மேற்படி ஐந்து வகையான திருமண உதவித் திட்டங்களின் கீழ் **1,04,795** பயனாளிகள் பயனடைந்துள்ளனர். **2011-2012** முதல் **2019-2020** வரை **12,50,705** பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

**2020-2021 ஆம் நிதியாண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் மேற்படி ஐந்து வகையான திருமண உதவித் திட்டங்களுக்காக ₹726.32 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.2.2 சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்

விதவைகள், ஆதரவற்ற பெண்கள், பொருளாதாரத்தில் நலிவுற்ற பெண்கள் ஆகியோர் சுயமாக தொழில் செய்து தங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி கொள்ளும் பொருட்டு, இலவச தையல் இயந்திரங்கள் அரசால் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயனடைய ஆண்டு வருமான உச்ச வரம்பு ₹72,000/-. 2019-2020-ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 3,000 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

**2020-2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹1.35 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.2.3 அரசு சேவை இல்லங்கள்

கவனிப்பும், பாதுகாப்பும் தேவைப்படும் ஏழைப்பெண்கள், ஆதரவற்ற பெண்கள், விதவைகள் ஆகியோருக்கு தங்கும் இடம், உணவு, சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதி போன்றவற்றை அளிக்க செங்கல்பட்டு, சேலம், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சிவகங்கை, கிருஷ்ணகிரி மற்றும் பெரம்பலூர் ஆகிய எட்டு மாவட்டங்களில் அரசு சேவை இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன.

இவ்வில்லங்களில் உள்ள பெண்களின் திறனை மேம்படுத்த தொழிற்பயிற்சி, ஆங்கிலத்தில்

பேசுவதற்கான பயிற்சி, கணினி பயிற்சி, கலந்தாய்வு மற்றும் வேலைவாய்ப்பு குறித்து வழிகாட்டுதல் தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. பல்வேறு சூழ்நிலைகளில் பள்ளிப்படிப்பை இடைநிறுத்தம் செய்த பெண்கள் இவ்வில்லங்களில் குழந்தைகளுடன் தங்கி தங்கள் பள்ளிப் படிப்பையும் தொடரலாம். பெண் குழந்தைகள் 18 வயது வரையிலும், ஆண் குழந்தைகள் 10 வயது வரையிலும் இச்சேவை இல்லங்களிலேயே தங்கி கல்வி பயிலலாம்.

அனைத்து சேவை இல்லங்களிலும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. தற்பொழுது இவ்வில்லங்களில் 479 உள்ளுறைவோர்கள் தங்கி பயனடைந்து வருகின்றனர்.

அரசு சேவை இல்லங்களில் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்து முடித்த பெண்குழந்தைகள் உயர்கல்வி பயில்வதை ஊக்கப்படுத்திடும் வகையில், தொழில்சார் கல்வி பயின்றிட ₹50,000/- மற்றும் பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு படித்திட ₹30,000/- நிதியுதவி அரசால் வழங்கப்பட்டு வருகின்றது.

**2020-2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் அரசு சேவை இல்லத்தில் தங்கி பயனடையும் உள்ளுறைவோர்களுக்கு ₹6.26 கோடியும், பெண் குழந்தைகள் உயர்கல்வி பயின்றிட ₹33.78 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.2.4 மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள்

பெண்கள் வேலைவாய்ப்பு பெற்று முன்னேற்றம் அடைந்தால் அவர்களது குடும்பமே முன்னேற்றம் அடையும் என்ற சிறந்த நோக்கில் **123** மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் சமூக நலத் துறையினால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதில் **98** மகளிர் தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் சமூக நல ஆணையர் கட்டுப்பாட்டிலும், **25** இணை உணவு தயாரிப்போர் மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட இயக்குநர் மற்றும் குழும இயக்குநர் கட்டுப்பாட்டிலும் செயல்படுகின்றன.

மகளிர் தையல் தொழிற்கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மூலம் புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தில் பயன்பெறும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை ஆகியவற்றின் கீழ் இயங்கும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கும் விலையில்லா நான்கு இணை சீருடைகள் தைத்து வழங்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. இச்சங்கங்களின் மூலம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டு அவர்களின் சமூக பொருளாதார நிலை உயர்ந்துள்ளது.

கூட்டுறவு சங்கங்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | கூட்டுறவு சங்கங்களின் வகைகள் | சங்கங்களின் எண்ணிக்கை | உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | மகளிர் தையல் தொழிற்கூட்டுறவு சங்கங்கள் | 83 | 82,482 |
| 2 | எழுதுபொருள் தயாரிக்கும் மகளிர் தொழிற்கூட்டுறவு சங்கங்கள் (தையல் பணியிலும் ஈடுபடுகின்றனர்) | 15 | 1,017 |
| 3 | இணை உணவு தயாரிப்போர் மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் | 25 | 1,450 |
| | மொத்தம் | 123 | 84,949 |

## உறுப்பினர்களுக்கான தகுதிகள்

இத்தொழிற் கூட்டுறவு சங்கங்களில் **18** வயது முதல் **40** வயது வரையுள்ள, அரசு அங்கீகரித்துள்ள நிறுவனங்களில் தொழிற் பயிற்சி சான்றிதழ் பெற்ற வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள பெண்கள், ஆதரவற்ற விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் மூன்றாம் பாலினர் பயன்பெறுகின்றனர்.

**2019-2020** ஆம் கல்வியாண்டில் **38.99** இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு நான்கு இணை சீருடைகள் தைத்து வழங்கப்பட்டுள்ளன. அதற்கான தையல் கூலி **₹83.33** கோடி பள்ளிக் கல்வித் துறை மூலம் வழங்கப்பட்டுள்ளது.

**2019-2020** ஆம் ஆண்டில் மாநில அளவில் சிறந்த கூட்டுறவு சங்கங்களாக தேர்வு செய்யப்பட்ட

வேலூர் மாவட்டம், வேலப்பாடி மகளிர் தையல் மற்றும் சிறு தொழில் கூட்டுறவு சங்கம் மற்றும் தருமபுரி மாவட்டம், மகளிர் தையல் கூட்டுறவு சங்கம் ஆகிய இரண்டு கூட்டுறவு சங்கங்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

### 2.2.5 குறுகிய கால தங்கும் இல்லங்கள் (ஸ்வதார் கிரஹ்)

மத்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் சமூக நலத் துறையின் மூலம் இக்கட்டான சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட பெண்கள் கண்ணியத்துடனும், பாதுகாப்புடனும் வாழ்வதற்காக "குறுகிய கால தங்கும் இல்லங்கள்" (ஸ்வதார் கிரஹ்) என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இத்திட்டத்தின் மூலம் உணவு, உடை, தங்குமிடம், ஆலோசனை, பயிற்சி, மருத்துவம் மற்றும் சட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. இவ்வில்லங்களில் பாதிக்கப்பட்ட பெண்கள் அதிகபட்சமாக 5 வருடங்கள் வரை தங்கலாம். 60 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் முதியோர் இல்லங்களுக்கு மாற்றப்படுவர். ஒரு இல்லத்தில் 30 பெண்கள் தங்கும் வகையில் தமிழ்நாட்டில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் 35 குறுகிய கால தங்கும் இல்லங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**இத்திட்டத்திற்கென 2020-2021-ஆம் நிதியாண்டில் ₹5.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.2.6 மகளிர் சக்தி மையம் (Mahila Shakthi Kendra)

மகளிர் சக்தி மையத் திட்டம் மத்திய அரசால் கடந்த **2017-2018** ஆம் ஆண்டில் "மகளிர் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டிற்கான குழுமம்" என்ற குடையின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமாகும். பெண்கள் தங்களின் முழுத்திறன்களை அடையும் வண்ணம் அவர்களுக்கு சுகாதாரம், தரமான கல்வி, திறன் வளர்ப்பு, வேலை வாய்ப்பு, சமூகப் பாதுகாப்பு மற்றும் எண்ம கல்வியறிவு ஆகியவற்றை ஓரிடத்தில் வழங்கும் சூழ்நிலையை உருவாக்கித் தருவது இத்திட்டத்தின் நோக்கமாகும். மத்திய, மாநில அரசுகளால் இத்திட்டத்தின் நிதி **60:40** என்ற விகித அடிப்படையில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

இந்த புதிய திட்டம் மாநில, மாவட்ட, வட்டார மற்றும் ஊராட்சி அளவில் செயல்படுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

#### 2.2.6.1 மாநில பெண்கள் வள மையம் (State Resource Centre for Women)

மாநில அளவில் மகளிர் சக்தி மையத்தின் கீழ் அமைந்துள்ள மாநில பெண்கள் வள மையம், பெண்கள் சார்ந்த பிரச்சனைகளுக்கு தேவைப்படும் தொழில்நுட்ப உதவிகளை அரசிற்கு வழங்கி வருகிறது. மத்திய, மாநில அரசுகளின் திட்டங்களை ஆய்வு செய்வதற்கும், மேற்பார்வையிடுவதற்கும் தற்போது

துறையின் கீழ் ஏற்கனவே உள்ள அமைப்புகளுக்கு இது உதவி வருகிறது.

**2020-2021 ஆம் நிதியாண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் மாநில பெண்கள் வள மையம் செயல்படுவதற்கு ₹38.90 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.2.6.2 மாவட்ட பெண்கள் வள மையம் (District Level Centre for Women)

மகளிர் சக்தி மையத்தின் கீழ் அமைந்துள்ள மாவட்ட அளவிலான மாவட்ட பெண்கள் வள மையம், மாவட்டத்தின் அனைத்து குடிமக்களுக்கும், குறிப்பாக பெண்களுக்கு, மகளிர் சார்ந்த திட்டங்கள் குறித்து தேவையான தகவல்களை வழங்குகிறது. இம்மையம் பெண்களுக்காக செயல்படுத்தப்படும் அரசு திட்டங்களான "பெண் குழந்தைகளைக் காப்போம்; பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம் திட்டம்", ஒருங்கிணைந்த சேவை மையம், மகளிர் உதவி எண், மகளிர் காவல் தன்னார்வலர்கள், குறுகிய கால தங்கும் இல்லங்கள், மகளிர் வாழ்வொளித் திட்டம் ஆகியவை குறித்த தகவல்களை சேகரிப்பதுடன் மாநில மற்றும் வட்டார அளவிலான பெண்கள் வள மையங்களுக்கு இணைப்பாக செயல்படுகிறது. மாவட்ட அளவில் "பெண் குழந்தைகளைக் காப்போம்; பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" திட்டத்திற்கு உதவி புரியும் மையமாகவும் செயல்படுகிறது.

மாவட்ட பெண்கள் வள மையம், அனைத்து மாவட்டங்களுக்கும் மத்திய அரசால் படிப்படியாக அனுமதிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

**2020 - 2021 ஆம் நிதியாண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் மாவட்ட பெண்கள் வள மையம் செயல்படுவதற்கு ₹3.94 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.2.6.3 வட்டார பெண்கள் வள மையம் (Block Level Centre for Women)

வட்டார பெண்கள் வள மையங்கள், பின்தங்கிய மாவட்டங்களான விருதுநகர், ராமநாதபுரம் மாவட்டங்களில் தலா 8 வட்டாரங்களில் செயல்படுகின்றன. வட்டார பெண்கள் வள மையங்கள் கிராமப்புற பெண்கள், தங்கள் உரிமைகளை பெற்று பயனடைய அரசை அணுகுவதற்கும், திறன் வளர்ப்பு பயற்சிகள் பெற்று மேம்பாடு அடையவும் இணைப்பாக அவர்களுக்கு உதவிகரமாக செயல்படுகின்றன. மாணவ தன்னார்வலர்கள் மூலம், கிராமங்களில் தன்னார்வ சமூக சேவை மற்றும் பாலின சமத்துவ உணர்வுகள் ஊக்கப்படுத்தப்படுகின்றன.

**2020-2021 ஆம் நிதியாண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் வட்டார பெண்கள் வள மையங்கள் செயல்படுவதற்கு ₹2.83 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.2.6.4 ஒருங்கிணைந்த சேவை மையம் (One Stop Centre)

பாலின ரீதியான வன்முறை என்பது உலகளாவிய சுகாதாரம், மனித உரிமைகள் மற்றும் வளர்ச்சிக்கான பிரச்சனையாக உள்ளது. இது குடும்பம் சார்ந்த பாலியல் வன்முறைகள் ஆகியவற்றுடன் வரதட்சணை, கௌரவ கொலைகள், குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தல், குழந்தைத் திருமணம், பாலின ரீதியான கருக்கலைப்பு போன்ற தீங்கு விளைவிக்கும் செயல்கள் என பன்முகத் தன்மை கொண்டுள்ளது.

மத்திய அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் புதிய சிறப்பு திட்டமான `சகி' என்ற ஒருங்கிணைந்த சேவை மையம், தனியார் மற்றும் பொது இடங்களில், குடும்பத்தில், சமுதாயத்தில், பணிபுரியும் இடத்தில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவும் திட்டமாகும். ஒருங்கிணைந்த சேவை மையம் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவையும், ஒருங்கிணைந்த உதவியான, தற்காலிக தங்கும் வசதி, மருத்துவ உதவி, சமூக உளவியல் உதவி, சட்ட உதவி, காவல் துறை உதவி, மனநல ஆலோசனை வழங்குதல் போன்ற சேவைகளை வழங்கி வருகிறது. இத்திட்டம் மத்திய அரசின் **100** சதவிகித நிதியில் செயல்படுகிறது. **2019-2020** ஆம்

ஆண்டில் **32** மாவட்டங்களில் ஒருங்கிணைந்த சேவை மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

**2019-2020** ஆம் நிதியாண்டில் அதிக மக்கள் தொகை காரணம் கருதி சென்னை மாவட்டத்திற்கு இரண்டு கூடுதல் ஒருங்கிணைந்த சேவை மையங்கள் அமைக்க ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இது வரை, **2,371** பெண்கள் இம்மையங்கள் மூலம் பயனடைந்துள்ளனர்.

### 2.2.6.5 மகளிர் உதவி எண் 181

ஒரே சீரான குறுகிய குறியீடாக மகளிர் உதவி எண் **'181'** மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அனைத்து நாட்களிலும் **24** மணி நேரமும் உடனடி மற்றும் அவசர கால அழைப்புகளை ஏற்று சேவை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பெண்களுக்கான அரசின் திட்டங்கள் குறித்த விவரங்களையும் இது அளித்து வருகிறது.

மகளிர் உதவி மையம் தற்போது அம்பத்தூர், அம்மா அழைப்பு மையத்தில் செயல்பட்டு வருகிறது. இதுவரை **10,516** அழைப்புகள் பெறப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளன.




## 2.2.6.6 நிர்பயா நிதி

நிர்பயா நிதி, மத்திய உள்துறை அமைச்சகம் மூலம் **2016**-இல் ஏற்படுத்தப்பட்டது. நாடு முழுவதும் பெண்களின் பாதுகாப்பிற்கான இத்திட்டம் சென்னை மாநகரம் உட்பட **8** நகரங்களில் செயல்படுத்த கண்டறியப்பட்டது. பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்க உதவிடும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சியால் **₹425.06** கோடி மதிப்பில், பெருநகர சென்னை காவல் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை மாநகர போக்குவரத்து துறை மற்றும் சமூக நலத்துறை ஆகிய நான்கு துறைகள் மூலம் செயல்படுத்திட **12** திட்டங்களுக்கான கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு ஒப்பளிப்பு பெறப்பட்டுள்ளது. இந்நிதி **60:40** என்ற விகிதத்தில் மத்திய மற்றும் மாநில அரசின் பங்களிப்புடன்

**2018-2019** முதல் மூன்று ஆண்டுகளுக்கு பகிர்ந்து வழங்கப்பட்டு செலவினம் மேற்கொள்ளப்படும்.

சமூக நலத்துறை மூலம், மகளிர் உதவி எண் சேவையினை வலுப்படுத்திடவும், பெறப்படும் அழைப்புகளை ஆராய்ந்து தொடர் நடவடிக்கை மேற்கொண்டு பெண்களுக்கு உறுதுணையாக இருந்து சேவைகள் வழங்கிட வேண்டி **₹12.96** கோடி இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு **2019-2020** ஆம் ஆண்டிற்கு **₹6.48** கோடி பெறப்பட்டுள்ளது.

### 2.2.7 பெண்களுக்கான சமூக நலச் சட்டங்கள்

பெண்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகளை உறுதி செய்யும் பொருட்டு, சமூக நலத்துறை கீழ்காணும் சமூக நலச் சட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

1. வரதட்சணை தடுப்புச் சட்டம், **1961**
2. குடும்ப வன்முறையில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், **2005 &** குடும்ப வன்முறையில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும் விதிகள், **2006**
3. பணியிடங்களில் பெண்களுக்கெதிரான பாலியல் துன்புறுத்தல்கள் (தடுப்பு, விலக்கு மற்றும் குறைதீர்வு) சட்டம், **2013**

4. தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம், 2014 & தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) விதிகள், 2015.

### 2.2.7.1 குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005

'வன்முறை இல்லாத குடும்பத்தில் வசித்தல் வேண்டும்' என்பதே குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டத்தின் நோக்கமாகும். இச்சட்டத்தின் மூலம், புகுந்த வீட்டில் பெண்கள் உரிமையுடன் வாழ்வதுடன் தன் குழந்தைகளுக்கான பாதுகாப்பு மற்றும் பராமரிப்பையும் பெற உறுதிப்படுத்துகிறது.

**இச்சட்டத்தின் சிறப்பு அம்சங்கள்**

- பாதிக்கப்பட்ட நபர்களிடையே மற்ற வழக்கு விசாரணைகள் நிலுவையிலிருக்கும் போதிலும் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005ன் கீழ் வழக்குகளை பதிவு செய்யலாம்.
- ஒரே வழக்கில் பல தீர்ப்புகளைப் பெற இச்சட்டம் வழிவகை செய்துள்ளது
- வார்த்தைகள் மற்றும் மனரீதியான கொடுமைகளுக்கும் நிவாரணம் அளிக்கிறது.

❖ குற்றவியல் அமர்வு நீதிமன்றத்தின் ஆணையினை எதிர்த்து **30** நாட்களுக்குள் மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் மேல் முறையீடு செய்யலாம்.

**பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் சேவையளிப்பவர்கள்**

ஒவ்வொரு மாவட்ட சமூகநல அலுவலகத்திலும் ஒரு பாதுகாப்பு அலுவலர் பணியமர்த்தப்பட்டுள்ளார். இப்பாதுகாப்பு அலுவலர் பெண்களுக்கு ஏற்படும் குடும்ப வன்முறை குறித்து அறிக்கை தாக்கல் செய்து சட்ட பூர்வமான தீர்வுகளை பெற உதவுவார். குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் **2005**-ன் கீழ் அறிவிக்கை செய்யப்பட்டுள்ள தொண்டு நிறுவனங்கள் சேவை அளிப்பவர்களாக செயல்படுகிறார்கள்.

**குடும்ப வன்முறை தடுப்பு சட்டம், 2005-இன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் (2008 முதல் 2019 வரை)**

| | | |
|---|---|---|
| **1** | பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | **51,115** |
| **2** | நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | **20,060** |
| **3** | இலவச சட்ட உதவிக்குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்ட வழக்குகள் | **1,882** |
| **4** | மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்ட வழக்குகள் | **115** |
| **5** | நீதிமன்ற ஆணையின்படி பிரிவு எண்.**14**ன் கீழ் ஆற்றுப்படுத்துவதற்கு அனுப்பப்பட்ட வழக்குகள் | **1,408** |
| **6** | பாதுகாப்பு அலுவலரால் முடிக்கப்பட்ட வழக்குகள் | **29,787** |
| **7** | நடவடிக்கையில் உள்ள வழக்குகள் | **1,268** |

### 2.2.7.2 வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961

- வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961-இல் இயற்றப்பட்டு, பின்னர் 1989-இல் திருத்தம் செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து, தமிழ்நாடு வரதட்சணை தடுப்பு விதிகள், 2004 இல் உருவாக்கப்பட்டன.
- தமிழ்நாடு வரதட்சணை தடுப்பு விதிகள், 2004-ன்படி மாவட்ட சமூக நல அலுவலர்கள் வரதட்சணை தடுப்பு அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டு செயல்பட்டு வருகின்றனர்.
- மாவட்ட சமூகநல அலுவலரின் நம்பகத்தன்மை அறிக்கையை பெற்றப்பின்னர் காவல் துறை / நீதிமன்றம் வரதட்சணை தொடர்பான வழக்குகளை பதிவு செய்கின்றன.
- ஆண்டுதோறும் நவம்பர் 26 ஆம் நாள் வரதட்சணை தடுப்பு தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

**வரதட்சணை தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் (2006 முதல் 2019 வரை)**

| | | |
|---|---|---|
| 1 | மாவட்ட சமூக நல அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | 11,528 |
| 2 | ஆற்றுப்படுத்துதல் மூலம் சுமூகமாக தீர்க்கப்பட்ட வழக்குகள் | 8,839 |
| 3 | காவல் துறைக்கு பரிந்துரைக்கப்பட்ட வழக்குகள் | 2,170 |
| 4 | விசாரணையில் உள்ள வழக்குகள் | 519 |

### 2.2.7.3 பணியிடங்களில் பெண்களுக்கெதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுத்தல், விலக்கு மற்றும் தீர்வு) சட்டம், 2013

**2013**-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு, பணியிடங்களில் பெண்களுக்கெதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுத்தல், தடை மற்றும் தீர்வு) சட்டம், **2013**-ஐ செயல்படுத்தி வருகிறது. இச்சட்டத்தின் பிரிவு **5**-ன் கீழ் மாவட்ட ஆட்சியரை மாவட்ட அலுவலராக அறிவித்துள்ளது.

பத்து பணியாளர்களுக்கு மேலுள்ள அலுவலகங்களில் உள்ளக புகார் குழு **(Internal Complaint Committee)** அமைக்கப்படுவதை மாவட்ட சமூக நல அலுவலர்கள் கண்காணித்து வருகின்றனர். உள்ளக புகார் குழுவில் புகார் அளிக்க இயலாதபட்சத்தில் மாவட்ட அளவிலான உள்ளூர் புகார் குழுவில் **(Local Complaint Committee)** புகார்களை பதிவு செய்யலாம். அனைத்து மாவட்டங்களிலும் உள்ளூர் புகார் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பெண்களுக்கு எதிரான பாலியல் ரீதியான துன்புறுத்தல் குறித்து இணையதளம் மூலம் புகார் பதிவு செய்ய, **SHe-Box (Sexual Harrassment Electronic Box)** என்ற திட்டத்தை மத்திய அரசு நிறுவியுள்ளது. இதன் மூலம் பாதிப்புக்குள்ளாகும் பெண்கள் தங்கள் புகார்களை எங்கிருந்தும் இணைய தளத்தின் மூலம் பதிவு செய்யலாம்.

**பணியிடங்களில் பெண்களுக்கெதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுத்தல், விலக்கு மற்றும் தீர்வு) சட்டம், 2013-ன் கீழான செயல்பாடுகள்:-**

**(டிசம்பர் 2019 வரை)**

| | | |
|---|---|---|
| **1** | **உள்ளூர் புகார் குழு (LCC) எண்ணிக்கை** | **32** |
| **2** | **உள்ளூர் புகார் குழுக்கள் மூலம் பெறப்பட்ட புகார்கள்** | **43** |
| **3** | **மாவட்டங்களில் அமைக்கப்பட்ட உள்ளக புகார் குழுக்கள் (ICC) எண்ணிக்கை** | **2,135** |
| **4** | **வட்டம் மற்றும் வட்டாரங்களில் உள்ள ஒருங்கிணைப்பு அலுவலர்கள்** | **429** |
| **5** | **விழிப்புணர்வு கூட்டங்கள் மற்றும் பயிற்சிகள்** | **405** |
| **6** | **SHe-Box இணையதளம் மூலம் பெறப்பட்ட புகார்கள்** | **47** |

## 2.2.8 பணிபுரியும் மகளிருக்கான அரசு விடுதிகள்

**பணிபுரியும் பெண்கள், பணி நிமித்தமாக தங்கள் வீட்டை விட்டு வெளியே தங்க வேண்டிய நிலையில் அவர்களுக்கு குறைந்த வாடகையில் பாதுகாப்பான தங்கும் விடுதிகள் அவசியத் தேவையாகும். இத்தேவையை பூர்த்தி செய்திட, தமிழகத்தில் 18 மாவட்டங்களில், 28 பணிபுரியும் மகளிருக்கான அரசு விடுதிகள் நடத்தப்படுகின்றன.**

**2020-2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹1.88 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.2.8.1 தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம்

நிறுவனங்கள் சட்டம், **2013**-ன்படி, தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம், சிறப்பு நோக்கு சாதனமாக **(Special Purpose Vehicle)** கடந்த **2019**-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இந்த நிறுவனம், மகளிர் தங்கும் விடுதி, குழந்தைகள் காப்பகம், முதியோர் இல்லம், குழந்தைகள் பராமரிப்பு வசதி ஆகியவற்றை நவீன வசதிகளுடன் நிறுவி அதற்கான மேலாண்மை மற்றும் பராமரிப்பு ஆகியவற்றை ஏற்று நடத்தும். இந்நிறுவனம், மத்திய, மாநில அரசு மற்றும் பிற நிறுவனங்களில் நிதி பெற்று செயல்படும்.

இந்நிறுவனத்தின் நோக்கமானது, விடுதிகளை கட்டி, பாதுகாப்பு மற்றும் நிறைவான சூழலை ஏற்படுத்தி தருவதுடன் விடுதிகளை உருவாக்குதல், புதுப்பித்தல், வடிவமைத்தல், கட்டுதல், மேம்படுத்துதல், செப்பனிடுதல் ஆகியவற்றை செய்வதாகும். தற்போது திருச்சிராப்பள்ளி (அபிஷேகபுரம்), கிருஷ்ணகிரி (ஒசூர்), செங்கல்பட்டு (தாம்பரம் மற்றும் கூடுவாஞ்சேரி) ஆகிய மூன்று மாவட்டங்களில் 'பணிபுரியும் மகளிர்' விடுதிகளுக்கான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

## 2.3 மூத்த குடிமக்கள் நலன்

மூத்த குடிமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்து, அவர்கள் நிம்மதியான மற்றும் கண்ணியமான வாழ்க்கை வாழும் வகையில் முதியோர் இல்லங்கள், ஒருங்கிணைந்த வளாகங்கள், நடமாடும் மருத்துவ அலகு, இயன்முறை சிகிக்சையகம் மற்றும் ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு நலத் திட்டங்களை வருவாய் துறை, சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறைகளுடன் இணைந்து சிறப்பாக செயல்படுத்துவதில் தமிழ் நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

### 2.3.1 பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007

மூத்த குடிமக்கள் நாட்டின் விலைமதிப்பில்லா சொத்தாக உள்ளனர். நாட்டின் வளர்ச்சிக்கு முதியோர்களின் சிறந்த அனுபவ அறிவை இக்கால இளைஞர்கள் மனதிற்கொள்வது அவசியமாகும். மூத்த குடிமக்களின் நலன் காக்கவும், பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களை பராமரிப்பதற்கும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் உத்தரவாதமும், அங்கீகாரமும் அளித்து உறுதி செய்யப்பட்டுள்ளவாறு, சட்டரீதியான பாதுகாப்பை அளிக்கக்கூடிய பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம்,2007-ஐ இம்மாநிலத்தில் செயல்படுத்தும் வகையில் தமிழ்நாடு பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நல விதிகள்,2009 இயற்றப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**இச்சட்டத்தின் சிறப்புக் கூறுகள்**

- இச்சட்டத்தின் கீழ் பராமரிப்புத் தொகை கோரி பெறப்படும் மனுக்கள் 90 நாட்களுக்குள் தீர்வு செய்யப்பட வேண்டும்.
- பராமரிப்புத் தொகையாக மாதத்திற்கு ₹10,000/- வரை வழங்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.
- மூத்த குடிமக்களின் பாதுகாப்பான பராமரிப்பிற்கு பொறுப்பான நபர், அவர்களை நிராதரவாக விட்டுச் சென்றால், அந்நபருக்கு 3 மாத சிறைத்தண்டனை அல்லது ₹5,000/- வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக அளிக்கப்படும்.

## 2.3.2 முதியோருக்கான குறை களைவு வழிமுறைகள்

மூத்த குடிமக்களிடமிருந்து பெறப்படும் குறை களைவு மனுக்களை விரைந்து தீர்வு செய்ய ஒவ்வொரு வருவாய்க் கோட்டத்திலும், சார் ஆட்சியர் / வருவாய்க் கோட்டாட்சியரைத் தலைவராகக் கொண்ட உட்கோட்ட தீர்ப்பாயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. முதியோர்களின் குறைகளை விரைந்து தீர்வு செய்வதற்கு இம்மாநிலத்தில் 92 தீர்ப்பாயங்கள் செயல்படுகின்றன. தீர்ப்பாயத்தின் ஆணைக்கெதிராக மேல்முறையீட்டு மனுக்களை விசாரிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித்தலைவரைத் தலைவராகக் கொண்டு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட சமூக நல அலுவலர்கள் இச்சட்டத்தின் கீழ் பராமரிப்பு அலுவலர்களாகவும், சமரச அலுவலர்களாகவும் செயல்படுகின்றனர்.

## 2.3.3. முதியோர் நலனுக்கான மாநில மற்றும் மாவட்டக் குழுக்கள்

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தவும், ஆலோசனை வழங்கவும், கண்காணிக்கவும் மாநில அளவில் தலைமைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு பதினைந்து அலுவல் சார் உறுப்பினர்கள் மற்றும் ஏழு அலுவல் சாரா உறுப்பினர்களையும் உள்ளடக்கிய உயர் மட்ட ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர், சார் ஆட்சியர் / வருவாய்க் கோட்டாட்சியர், துணை இயக்குநர் (சுகாதார பணிகள்), மாவட்ட சமூக நல அலுவலர் ஆகிய அலுவல் சார் உறுப்பினர்களையும், தன்னார்வத் தொண்டு நிறுவன பிரதிநிதிகள் இருவர் மற்றும் மூத்த குடிமக்களின் பிரதிநிதிகள் இருவர் அடங்கிய அலுவல் சாரா உறுப்பினர்களையும் கொண்ட ஆலோசனைக் குழு செயல்பட்டு வருகிறது.

## 2.3.4 முதியோர் இல்லங்கள்

அதிகரித்து வரும் முதியோர்களின் எண்ணிக்கையினை கருத்திற்கொண்டு அவர்களின் நலன் காக்கும் விதமாக முதியோர் இல்லங்களுக்கு தமிழ்நாடு அரசு மானிய உதவி அளித்து வருகிறது. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 21 முதியோர் இல்லங்களுக்கு இவ்வகையில் நிதி

உதவி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு முதியோர் இல்லத்திலும் **40** முதியோர் தங்கி பயன் பெறலாம். முதியோர்களுக்கு உணவூட்டு மானியமாக ஒருவருக்கு மாதமொன்றுக்கு **₹1,200/-** வழங்கப்பட்டு வருகிறது. **21** முதியோர் இல்லங்களில் **723** பயனாளிகள் பயன் பெற்று வருகின்றனர்.

**இத்திட்டத்திற்கென 2020-2021-ஆம் நிதியாண்டில் ₹1.18 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.3.5 முதியோர் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த சிறப்பு இல்ல வளாகங்கள்

தமிழ்நாடு அரசு, முதியோரும், ஆதரவற்ற குழந்தைகளும் ஒருவருக்கொருவர் அன்பையும், பாசத்தையும் பகிர்ந்து கொள்ளும் விதமாக இவர்கள் ஒரே வளாகத்தில் உண்டு உறையும் ஒருங்கிணைந்த இல்லங்களை ஒரு சிறந்த திட்டமாக **2011-2012-**ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் **75:25** என்ற நிதிப் பங்களிப்பின் அடிப்படையில் மாநில அரசின் மானிய உதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு ஒருங்கிணைந்த இல்ல வளாகமும் **25** குழந்தைகள் மற்றும் **25** முதியோர் தங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது **48** ஒருங்கிணைந்த இல்ல வளாகங்கள் செயல்பாட்டில் உள்ளன. இவ்வில்லங்களில் **1,060** முதியோர்களும் **1,106** குழந்தைகளும் பயன்பெற்று வருகின்றனர்.

**இத்திட்டத்திற்கென 2020-2021-ஆம் நிதியாண்டில் ₹6.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.3.6 மத்திய அரசு உதவி பெறும் மூத்த குடிமக்களுக்கான ஒருங்கிணைந்த திட்டங்கள் (IPSrC)

ஆதரவற்ற **60** வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களை பாதுகாத்து பராமரிக்கும் விதமாக அவர்களுக்கு உணவு, உடை, தங்குமிடம் மற்றும் மருத்துவ வசதி ஆகியவற்றை அளிக்கும் வகையில் மத்திய அரசு ‘‘மூத்த குடிமக்களுக்கான ஒருங்கிணைந்த திட்டத்தின்’’ கீழ் முதியோர் இல்லங்கள், மனஉடைவு மற்றும் முதுமறதியால் பாதிக்கப்பட்ட மூத்த குடிமக்களுக்கான இல்லங்கள், நடமாடும் மருத்துவக் அலகுகள், தொடர் மருத்துவ பாதுகாப்பு மையங்கள், இயன்முறை சிகிச்சையகம், மண்டல அளவிலான பயிற்சி மற்றும் வள மையங்கள் ஆகியவற்றைத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தி வருகிறது. தகுதியுள்ள நிறுவனங்களை மாநில அரசு ஆய்வு செய்து மத்திய அரசின் நிதி பெற பரிந்துரை செய்கிறது. இத்திட்டம் மத்திய அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கிடையே **90:10** என்ற நிதிப் பங்களிப்பில் செயல்படுத்தப்படுகிறது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | இல்லங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை | மத்திய அரசுக்கு பரிந்துரைக்கப் பட்ட மானியம் |
|---|---|---|---|---|
| 1. | முதியோர் இல்லம் | 64 | 1736 | ₹ 13.80 கோடி |
| 2. | நடமாடும் மருத்துவ அலகு | 5 | 1619 | |
| 3. | தொடர் மருத்துவ மையம் | 1 | 50 | |
| 4. | இயன்முறை சிகிச்சையகம் | 2 | 150 | |
| 5. | மண்டல அளவிலான பயிற்சி மையம் | 2 | -- | |

## 2.3.7 சர்வதேச முதியோர் தினவிழா

முதியோர்களின் சேவைகளை அங்கீகரிக்கவும், முதியோர் நலன் காக்கவும், ஐக்கிய நாடுகள் சபை நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை பின்பற்றும் வகையில் ஆண்டுதோறும் முதியோர் தின விழா அக்டோபர் 1 ஆம் நாள் தமிழ்நாடு அரசால் மாநில மற்றும் மாவட்ட அளவில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழாவின் போது முதியோர்களின் நலனுக்காக சேவை புரிந்த சிறந்த தன்னார்வத் தொண்டு நிறுவனம் மற்றும் சமூகப் பணியாளர்கள் சிறப்பிக்கப்படுகின்றனர்.

**இத்திட்டத்திற்கென 2020-2021-ஆம் ஆண்டில் ₹5.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 2.3.8 முதியோருக்கெதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினம்

முதியோரின் நலன் காக்கும் பொருட்டு ஐக்கிய நாடுகள் சபை நிறைவேற்றியுள்ள தீர்மானத்தின்படி ஆண்டுதோறும் ஜூன்,15-ஆம் நாள் முதியோருக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினமாக தமிழ்நாடு

அரசால் அனுசரிக்கப்படுகிறது. முதியோருக்கு ஏற்படும் பல்வேறு வன்கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் பொருட்டு மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் இந்நாளில் உறுதி மொழி எடுக்க ஊக்குவிக்கப்படுகிறது.

**இத்திட்டத்திற்கென 2020-2021-ஆம் ஆண்டில் ₹4.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 2.3.9 மூத்த குடிமக்கள் கௌரவ (வயோஷ்ரேஸ்தா சம்மான்) விருது - 2019

தமிழ்நாட்டில் பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம்,2007-ஐ செம்மையாக நடைமுறைப்படுத்தி, முதியோருக்கு பல்வேறு வகையான சிறந்த சேவைகள் ஆற்றி, வசதிகள் செய்து கொடுத்தமைக்காக தமிழ்நாட்டிற்கு "மூத்த குடிமக்கள் கௌரவ (வயோஷ்ரேஸ்தா சம்மான்) விருது-2019" மத்திய அரசால் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் மூலம் வழங்கப்பட்டது.

## 2.3.10 முதியோர் ஆதரவு மையங்கள்

முதியோரை அக்கறையுடன் கவனிப்பது நமது சமுதாயத்தின் மரபாகும். கல்வி மற்றும் பணித் தேவையின் காரணமாக மக்கள் இடம்பெயர்வதாலும், தனிக்குடும்ப விருப்பம் அதிகரித்து வருவதாலும், பெரும் எண்ணிக்கையிலான குடும்பங்களில் முதியோர் தனித்து விடப்படுகின்றனர். ஆதலால், தமிழ் நாடு

அரசு, ஜெ-பால் (J-PAL) மையத்துடன் இணைந்து, நோபல் பரிசு பெற்ற முனைவர் எஸ்தர் டஃப்லோ அவர்களின் தலைமையிலான ஒரு குழுவைக் கொண்டு, முதியோர் பிரச்சினைகள் தொடர்பான நீண்ட கால ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், முதியோர் நலனுக்கான முன்னோட்டத் திட்டமாக, 37 மாவட்டங்களிலும் தலா 2 வட்டாரங்களில், ₹37.00 இலட்சம் செலவில் முதியோர் ஆதரவு மையங்கள் தொடங்குவதற்கு 2020-2021-ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை உரையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

### 2.3.11 மூத்த குடிமக்களுக்கான செயல் திட்டம்

மூத்த குடிமக்களின் நலம் காக்கும் வகையில் 2019-2025 வரை உள்ள நிதியாண்டுகளுக்கான "மூத்த குடிமக்களுக்கான செயல் திட்டம்" மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. மூத்த குடிமக்களுக்கான செயல் திட்டமானது மூத்த குடிமக்களுக்கான தேசிய கொள்கை மற்றும் பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007 ஆகியவற்றை அடிப்படையாக கொண்டுள்ளது. மூத்த குடிமக்களின் கீழ்கண்ட 10 வகையான தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்றுவதற்கு ஏதுவாக மூத்த குடிமக்களுக்கான செயல்திட்டம் மத்திய அரசால் வகுக்கப்பட்டுள்ளது.

1. நிதி பாதுகாப்பு
2. சத்துணவு மற்றும் சுகாதாரம்
3. குடியிருப்பு வசதிகள்
4. மூத்த குடிமக்களின் உயிர் மற்றும் உடமைக்கான பாதுகாப்பு
5. தலைமுறைகளுக்கு இடையேயான பிணைப்புடன் கூடிய பயனுள்ள, ஆக்கப்பூர்வமான முதுமை
6. முதியோருக்கு உகந்த அணுகுதன்மையுடன் கூடிய போக்குவரத்து வசதிகள் மற்றும் சூழலை உருவாக்குதல்
7. மூத்த குடிமக்களுக்கான விழிப்புணர்வு மற்றும் திறன் வளர்ப்பு பணிகள்
8. சமுதாயத்தில் முதியோர் சார்ந்த பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவித்தல் மற்றும் முதியோர் நேய உபகரணங்கள் மற்றும் சேவைகள்
9. ஆராய்ச்சி மற்றும் ஆய்வு
10. திட்ட மேலாண்மை

தமிழக அரசு மூத்த குடிமக்களுக்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மூத்த குடிமக்களுக்கு பேருந்துகளில் வசதியான இருக்கை ஒதுக்கீடு, அரசு மருத்துவமனைகளில் முதியோருக்கான சிறப்பு சிகிச்சை பகுதிகள், தீர்ப்பாயங்களின் ஊக்கமான செயல்பாடு, மூத்த குடிமக்கள் தொடர்பான குறைதீர் பணிகள் போன்றவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், மூத்த குடிமக்களுக்கு இலவச பேருந்து பயண அட்டை வழங்குதல், முதியோர் ஓய்வூதியம் வழங்குதல், அரசு உதவிபெறும் முதியோர் இல்லங்களில் தங்கி பயனடையும் முதியோர்களுக்கு

தடுப்பூசித் திட்டம் ஆகியவற்றை தமிழக அரசு சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. தற்போது மூத்த குடிமக்கள் தேசிய செயல் திட்டத்தையொட்டி விரிவான மாநில செயல் திட்டம் வகுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாநில செயல்திட்டத்தினை செயல்படுத்திட மத்திய அரசிடமிருந்து ₹2 கோடி ஒப்பளிப்பு பெறப்பட்டுள்ளது.

## 2.4 மூன்றாம் பாலினர் நலன்

சமுதாயத்தில் கவனிப்பாரற்று பல்வேறு பிரச்சனைகளை மூன்றாம் பாலினர் எதிர்கொள்கின்றனர். மூன்றாம் பாலினரின் நலனில் அக்கறை கொண்டு, அவர்களுக்கு உரிய அங்கீகாரம் வழங்கும் வகையில் பல்வேறு நலத்திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மூன்றாம் பாலினர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும், வாழ்வாதாரத்திற்கான வாய்ப்புகளை உருவாக்கிடவும், கல்வி உதவித் தொகை, சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றை அளித்து சமுதாயத்தில் அவர்களுக்கு அங்கீகாரத்தை ஏற்படுத்தவும் தமிழ்நாடு அரசு மூன்றாம் பாலினருக்கு ஒரு நல வாரியத்தை அமைத்துள்ளது. இந்த நல வாரியமானது, மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 11 அலுவல்சார் உறுப்பினர்களையும், 12 மூன்றாம் பாலினர்களை அலுவல்சாரா உறுப்பினர்களையும் கொண்டது.

மதிப்புடனும், நேர்மையான முறையிலும் தொழில் செய்து தங்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டு மூன்றாம் பாலினர்களுக்கு மானியமாக **₹20,000/-** முதல் **₹50,000/-** வரை வழங்கி, மளிகை கடை அமைத்தல், கறவை மாடுகள் வளர்த்தல், சிற்றுண்டி உணவகம் அமைத்தல், துணி, கயிறு, அரிசி, காய்கறி வியாபாரம், ஆட்டோ ஓட்டுதல் மற்றும் சரக்கு ஆட்டோ ஓட்டுதல் போன்ற தொழில்களை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் **₹75.00** இலட்சம் நிதியுதவியில் **150** மூன்றாம் பாலினர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

**40** வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற மூன்றாம் பாலினருக்கு மாதாந்திர ஓய்வூதியமாக **₹1,000/-** வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் **1,000** மூன்றாம் பாலினர்கள் பயனடைந்து வருகின்றனர்.

இதுவரை, மூன்றாம் பாலினர் பெற்ற பயன்பாடுகளின் விவரம்:-

| | | |
|---|---|---|
| மூன்றாம் பாலினர் என கண்டறியப்பட்டவர்கள் | : | **7536** |
| அடையாள அட்டை பெற்றவர்கள் | : | **6551** |
| தையல் இயந்திரம் பெற்றவர்கள் | : | **144** |
| குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடு பெற்றவர்கள் | : | **515** |
| கல்வி உதவித் தொகை பெற்றவர்கள் | : | **9** |
| குடும்ப அட்டை பெற்றவர்கள் | : | **2531** |
| வீட்டுமனைப் பட்டா பெற்றவர்கள் | : | **1671** |
| மருத்துவ காப்பீட்டு அட்டை பெற்றவர்கள் | : | **1489** |

மூன்றாம் பாலினர்கள் சமுதாயத்தில் கண்ணியத்துடன் வாழ்வதற்கு ஏதுவாக அரசு பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்புகளை வழங்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. காவல்துறையில் ஐந்து நபர்கள் உதவி ஆய்வாளர் மற்றும் காவலர் பணியிலும், இரண்டு நபர்கள் சுகாதாரத் துறையில் இயன்முறை மருத்துவர் மற்றும் ஆய்வக உதவியாளர் பணியிலும் நியமிக்கப்பட்டுள்ளனர். சமூக நலத் துறையின் கீழ், சத்துணவு அமைப்பாளர் மற்றும் சமையலராக இருவர் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இருவர் அலுவலக உதவியாளர் மற்றும் ஈப்பு ஓட்டுநராகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், எட்டு நபர்கள் தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரியில் பாதுகாவலர்களாக பணியமர்த்தப்பட்டு உள்ளனர்.

இச்சமூகத்தில் தங்களுடைய சொந்த முயற்சியில் படித்து, தனித் திறமை கொண்டு பல்வேறு துறைகளில் முன்னேறியவர்களில் மூன்றாம் பாலினர்கள் ஒருவருக்கு மூன்றாம் பாலினர் தினமான ஏப்ரல் பதினைந்தாம் நாளன்று "மூன்றாம் பாலினருக்கான விருது" ₹1,00,000/-க்கான காசோலை மற்றும் சான்றிதழுடன் 2020 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படவுள்ளது.

அனைத்து மூன்றாம் பாலினர்களும் தங்களின் சுயவிவரங்களை பதிவு செய்து கொள்ள சிறப்பு முயற்சியாக ஒரு செயலி உருவாக்கிட ₹10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மூன்றாம் பாலினத்தோர்

பற்றிய கணக்கெடுப்பு மற்றும் தகவல்கள் சேகரித்திட ₹13.07 இலட்சம் தமிழ் நாடு மூன்றாம் பாலினர் நல வாரியம் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மூன்றாம் பாலினரின் நலத் திட்டத்திற்காக 2020-2021 ஆம் நிதியாண்டில் ₹2.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 2.5 தமிழ் நாடு மாநில மகளிர் ஆணையம்

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான மனுக்களை விசாரிக்கவும், பெண்களுக்கான உரிமைகளைப் பாதுகாத்திடவும் சட்ட ரீதியான அமைப்பான (Statutory Body) தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் 1993 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. 2017-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் மறுசீரமைக்கப்பட்டு தலைவர் மற்றும் 9 உறுப்பினர்களை கொண்டு இயங்கி வருகிறது.

பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை விசாரணை செய்து உடனடியாக தீர்வு காண இவ்வாணையத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாணையம் பெண்கள் தொடர்பான பிரச்சனைகளை ஆராய்ந்து உரிய தீர்வுகளை அரசுக்கு பரிந்துரைக்கிறது. இதை தவிர வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961, குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005, பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல் (தடுப்பு, விலக்கு மற்றும் குறைதீர்வு) சட்டம், 2013,

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007 ஆகிய சட்டங்கள் முறையாக செயல்படுத்தப்படுவதை இவ்வாணையம் உறுதி செய்கிறது.

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்திற்கு 2019-2020-இல் வரப்பெற்ற மொத்த மனுக்களின் எண்ணிக்கை 1,751 ஆகும். இவற்றில், 1,421 மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டுள்ளது. மீதம் உள்ள 330 மனுக்கள் சம்மந்தப்பட்ட துறை அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், தேசிய மகளிர் ஆணையத்தின் உதவியோடு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் மாவட்டந்தோறும் பெண்களுக்கான சட்டவிழிப்புணர்வு முகாம்களை நடத்தி வருகிறது.

**இவ்வாணையத்தின் செலவினத்திற்காக 2020-2021 ஆம் நிதியாண்டிற்கு ₹55.61 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 2.6 தமிழ்நாடு சமூக நல வாரியம்

தமிழ்நாட்டில் 1954 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு சமூக நல வாரியம், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காகவும் அவர்களின் தன்னார்வ முயற்சிகளை ஊக்குவித்து

மேம்படுத்துவதற்காகவும், மாநில மற்றும் மத்திய சமூகநல வாரியங்களின் திட்டங்களையும் மாநில அரசின் திட்டங்களையும் நன்முறையில் செயல்படுத்துவதை கண்காணித்து வருகின்றது.

### 2.6.1 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு தமிழ் நாடு அரசால் வழங்கப்படும் மானியம்

தமிழ்நாடு அரசு, மகளிர் மற்றும் குழந்தைகளின் நலத்திட்டங்களை செயல்படுத்தி வரும், பதிவு செய்யப்பட்டு குறைந்தபட்சம் மூன்று வருடங்கள் செயல்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு உதவிடும் வகையில் மாநில சமூகநல வாரியத்திற்கு வருடந்தோறும் ₹10.00 இலட்சம் வழங்குகிறது. இத்தொகை 50:50 விகிதத்தில், மாநில அரசு தன்னார்வ தொண்டு நிறுவனத்திற்கு ₹5,000/- மானியமாக வழங்குகிறது.

**இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டிற்கு ₹10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.6.2 குடும்ப ஆலோசனை மையம் (மாநில அரசு நிதியுதவி)

குடும்பங்களில் ஏற்படும் கருத்து வேறுபாடுகள் காரணமாக பிரிய நேரிடும் தம்பதிகளுக்கு ஆலோசனைகள் வழங்கிடவும் இருவரும் இணைந்து வாழ்வதற்கான வழிமுறைகளை எடுத்துரைக்கவும்

குடும்ப ஆலோசனை மையம் என்ற திட்டம் உருவாக்கப்பட்டது.

தமிழ் நாடு அரசின் நிதி உதவியுடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் மூலமாக **6** குடும்ப ஆலோசனை மையங்கள், சென்னை, திருவள்ளூர், விழுப்புரம், திருவாரூர், திருநெல்வேலி மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு குடும்ப நல ஆலோசனை மையத்திற்கும் ஆண்டு ஒன்றிற்கு **₹80,000/-** மானியமாக வழங்கப்படுகிறது.

குடும்பத்தில் ஏற்படும் குழப்பங்கள், குடிப்பழக்கம், போதை பழக்கம் மற்றும் வரதட்சணை கொடுமை போன்றவற்றால் பாதிக்கப்படும் பெண்களுக்கு தீர்வு காணும் வகையில் சென்னையில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் குடும்ப ஆலோசகர்கள் பணிபுரிகின்றனர். மத்திய அரசின் மதிப்பூதியமாக வழங்கப்படும் **₹10,000/-** உடன் கூடுதல் மதிப்பூதியமாக மாதம் **₹3,500/-** மாநில அரசு வழங்குகிறது.

**2020-2021 ஆம் ஆண்டிற்கு ₹7.14 இலட்சம் மாநில அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.**

### 2.6.3 குடும்ப ஆலோசனை மையம் (மத்திய அரசு மானியம்)

**1984** முதல் மத்திய அரசின் நிதியுதவியுடன் **57** குடும்ப ஆலோசனை மையங்கள் தமிழ் நாட்டில்

செயல்பட்டு வருகின்றன. தற்போது, இம்மையங்கள் அரசு கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்றன. **57** மையங்களில் இரண்டு மையங்கள் சென்னை (புழல்) மற்றும் வேலூரில் உள்ள மத்திய பெண்கள் சிறைச்சாலையில் செயல்பட்டு வருகிறது. மூன்று மையங்கள் முறையே காவல் துறை ஆணையரகம், ஆயிரம் விளக்கு மற்றும் பூக்கடையில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சமூக நல வாரியத்தின் மூலம் **2019-2020** ஆம் ஆண்டில் **₹1.82** கோடி மானியமாக குடும்ப ஆலோசனை மையத்திற்கு வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தோரின் எண்ணிக்கை **78,300** ஆகும்.

## 2.7 மாநில விருதுகள்

### 2.7.1 அவ்வையார் விருது

சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மதநல்லிணக்கம், மொழித்தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிகை, நிர்வாகம் போன்ற ஏதேனும் ஒரு துறையில் மிக சிறந்து விளங்கும் மகளிருக்கு சர்வதேச மகளிர் தினமான மார்ச், **8**ஆம் தேதி ஒவ்வோர் ஆண்டும் அவ்வையார் விருது வழங்கப்பட்டு வருகிறது. அவ்வையார் விருது பெறுபவர் **8** கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம், **₹1.00** இலட்சத்திற்கான காசோலை, சால்வை மற்றும்

சான்றிதழ் ஆகியவை வழங்கி கௌரவப்படுத்தப்படுகிறார்.

## 2.7.2 பெண்களுக்காக சிறந்த சேவை புரிந்த நிறுவன விருது மற்றும் சிறந்த சமூக சேவகர் விருது

பெண்களுக்காக சிறப்பாக பணியாற்றிய ஒரு சமூக சேவகி மற்றும் ஒரு தொண்டு நிறுவனம் ஆகியவற்றிற்கு சுதந்திர தின விருது வழங்கப்படுகிறது. சிறந்த சமூக சேவகிக்கு 10 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம், சால்வை மற்றும் சான்றிதழ் ஆகியவை வழங்கப்படுகின்றன. சிறந்த தொண்டு நிறுவனத்திற்கு ₹50,000/-க்கான காசோலை, சால்வை மற்றும் தங்கப்பதக்கமும் வழங்கப்படுகின்றன.

*******

## அத்தியாயம் - 3

## புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்




**3.1** குழந்தைகள் கல்வி பெற்றால் மட்டுமே எதிர்காலத்தில் நாட்டின் மதிப்புமிகு மனித வளமாக உருவாக இயலும். எனவே தான் குழந்தைகள் பள்ளிக்கு வருவதை ஊக்குவித்து, பசியின்றி கல்வி பயில வேண்டும் என்ற உயரிய குறிக்கோளுடன் அந்நாளைய முதலமைச்சராகிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் **1982** ஆம் ஆண்டில் சத்துணவுத் திட்டம் தொடங்கப்பட்டது. குழந்தைகளுக்கு சத்தான உணவு அளிப்பதன் மூலம் அவர்களின் உடல்நலத்தினை மேம்படுத்துவதுடன், கல்வி கற்பதையும் உறுதி செய்து, அதன் மூலம் ஊட்டச்சத்து குறைபாட்டினைக் களைவதே சத்துணவுத் திட்டத்தின் தலையாய நோக்கமாகும். **1991** ஆம் ஆண்டில் முன்னாள் முதலமைச்சர் டாக்டர்.ஜெ.ஜெயலலிதா அவர்களால், இத்திட்டம் 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டதுடன், இத்திட்டத்தின் மேன்மையை உணர்ந்து, **2014**ஆம் ஆண்டு, கலவை சாத உணவு வகைகளை அறிமுகம் செய்து இத்திட்டத்தினை மேலும் செம்மைபடுத்தினார்கள்.

## 3.2 இத்திட்டத்தின் நோக்கங்கள்

1. குழந்தைகள் தொடர்ந்து பள்ளிக்கு வருவதை ஊக்குவித்தல்.
2. குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல்
3. பெண்களுக்கு வேலைவாய்ப்பினை அளிப்பதன் மூலம், அவர்தம் குடும்பங்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்துதல்.

## 3.3 திட்டத்தின் விவரங்கள்


- அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1-ஆம் வகுப்பு முதல் 10-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு சூடான, சமைத்த கலவை சாதம் மற்றும் மசாலா முட்டைகள் அனைத்து பள்ளி வேலைநாட்களிலும் வழங்கப்படுகிறது. (ஓராண்டில் 220 வேலை நாட்கள்)
- 15 மாவட்டங்களிலுள்ள தேசிய குழந்தைத் தொழிலாளர் சிறப்பு மையங்களில் பயிலும் மாணவர்களுக்கு ஓராண்டில் 312 நாட்களுக்கு சத்துணவு வழங்கப்படுகிறது.
- தற்பொழுதுள்ள நெறிமுறைகளின்படி, தொடக்கப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கும், உயர்தொடக்கப்பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கும் முறையே ஒரு நாளைக்கு 100 கிராம், 150 கிராம் அளவு அரிசி வழங்கப்படுகிறது.

## 3.4 மைல் கற்கள்

- கிராமப்புறங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களில் **2** முதல் **5** வயது வரையிலான முன்பருவக்கல்வி குழந்தைகளுக்கும், பள்ளிகளில் **1**-ஆம் வகுப்பு முதல் **5**-ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கும் **01.07.1982** முதல் சத்துணவுத் திட்டம் தொடங்கப்பட்டது.
- **15.09.1982** முதல் நகர்ப்புறப் பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டது.
- **15.09.1984** முதல் நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் **6**-ஆம் வகுப்பு முதல் **10**-ஆம் வகுப்புவரை பயிலும் குழந்தைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது



## 3.5 நிருவாகக் கட்டமைப்பு




★ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினால் பணியமர்த்தப்படுகின்றனர்.

2 வயது முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கான முன்பருவக் கல்வி ஊட்டச்சத்து மையங்கள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநர் மற்றும் குழும இயக்குநரின் நிருவாக கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

## 3.6. பள்ளிகளில் உள்ள பயனாளிகள் (சத்துணவு மையங்கள்)

**(2020-2021)**

<table>
<tr><th>வ.எண்</th><th>நிலை</th><th>சத்துணவு மையங்களின் எண்ணிக்கை</th><th>பயனாளிகளின் எண்ணிக்கை</th></tr>
<tr><td>1.</td><td>தொடக்கப்பள்ளி (1 முதல் 5-ஆம் வகுப்பு வரை)</td><td>26,875</td><td>23,71,316</td></tr>
<tr><td>2.</td><td>உயர்தொடக்கப்பள்ளி (6 முதல் 8-ஆம் வகுப்பு வரை)</td><td rowspan="2">16,162</td><td>18,89,808</td></tr>
<tr><td>3.</td><td>9, 10-ஆம் வகுப்பு</td><td>5,90,913</td></tr>
<tr><td>4.</td><td>தேசிய குழந்தை தொழிலாளர் சிறப்பு பள்ளிகள்</td><td>209</td><td>4,746</td></tr>
<tr><td colspan="2">மொத்தம்</td><td>43,246</td><td>48,56,783</td></tr>
</table>

## 3.7 சத்துணவுத் திட்டத்தின் உட்கூறுகள்

**கலவை சாதம்**

பல்வகை கலவை சாதம் வழங்கும் திட்டம் 15.08.2014 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு

**வருகிறது. பல்வகை உணவு வகைகளின் விவரம் பின்வருமாறு:-**

| **நாட்கள்** | **வழங்கப்பட்டு வரும் உணவு வகைகள்** | |
|---|---|---|
| | **முதல் மற்றும் மூன்றாம் வாரம்** | **இரண்டாவது மற்றும் நான்காவது வாரம்** |
| திங்கட்கிழமை | வெஜிடபிள் பிரியாணி + மிளகு முட்டை | சாம்பார் சாதம் (பிஸிபேளாபாத்) + வெங்காயம் தக்காளி மசாலா முட்டை |
| செவ்வாய் கிழமை | கருப்புக் கொண்டைக் கடலை புலவு + தக்காளி மசாலா முட்டை | மீல்மேக்கர் மற்றும் காய்கறி கலந்த வெஜிடபிள் சாதம் + மிளகு முட்டை |
| புதன் கிழமை | தக்காளி சாதம் + மிளகு முட்டை | புளி சாதம் +தக்காளி மசாலா முட்டை |
| வியாழக் கிழமை | சாதம், சாம்பார்+ வேகவைத்த முட்டை | எலுமிச்சை சாதம் + பாசிப் பயறு சுண்டல் + தக்காளி முட்டை |
| வெள்ளிக் கிழமை | கருவேப்பிலை / கீரை சாதம், மசாலா முட்டை+ மிளகாய்பொடி தூவிய வறுத்த உருளைக்கிழங்கு | சாதம் + காய்கறியுடன் சாம்பார், வேக வைத்த முட்டை மற்றும் வறுத்த உருளைக்கிழங்கு |

**கூடுதல் ஊட்டச்சத்து வழங்குதல்**

| வழங்கப்படும் உணவுப் பொருள் | அளவு |
|---|---|
| கருப்புக் கொண்டைக் கடலை | 20 கிராம் (வாரம் ஒரு முறை) |
| பச்சைப் பயறு | |
| உருளைக் கிழங்கு | 20 கிராம் (வாரம் ஒரு முறை) |
| முட்டை | அக்மார்க் **'A'** தரத்திலான **46** முதல் **52** கிராம் எடை (அனைத்து பள்ளி வேலை நாட்களிலும்) |
| வாழைப்பழம் | **100** கிராம் (முட்டை உண்ணாத பயனாளிகளுக்கு) |

**சத்துணவில் செறிவூட்டப்பட்ட உப்பு** - அயோடின் மற்றும் இரும்பு சத்தினால் செறிவூட்டப்பட்ட உப்பு சுவைக்கேற்ப பயன்படுத்தப்படுகிறது.

**சத்துணவில் செறிவூட்டப்பட்ட எண்ணெய் -** வைட்டமின் **'ஏ'** மற்றும் **'டி'** சத்தினால் செறிவூட்டப்பட்ட பனை எண்ணெய் - ஒரு குழந்தைக்கு **3** கிராம் அளவில் தினசரி உணவில் பயன்படுத்தப்படுகிறது.

**ஊட்டச்சத்து நெறிகள்**

| வ. எண் | வகுப்பு | மத்திய அரசு நெறி முறைகள் | | மாநில அரசால் வழங்கப்படுவது | |
|---|---|---|---|---|---|
| | | கலோரி (கிலோ கலோரிகள்) | புரதம் (கிராம்) | கலோரி (கிலோ கலோரிகள்) | புரதம் (கிராம்) |
| 1. | தொடக்கப்பள்ளி | 450 | 12 | 557.00 | 18.92 |
| 2. | உயர் தொடக்கப்பள்ளி | 700 | 20 | 735.00 | 22.77 |
| 3. | 9, 10ஆம் வகுப்பு | --- | --- | 735.00 | 22.77 |

## 3.8 தேசிய மதிய உணவுத் திட்டம்

தொடக்கக் கல்விக்கான தேசிய ஊட்டச்சத்து ஆதரவு திட்டம் 15.08.1995ல் மத்திய அரசால் தொடங்கப்பட்டது. இத்திட்டம் தொடக்கப்பள்ளிகளில் 1997-1998ல் செயல்படுத்தப்பட்டு, உயர் தொடக்கப் பள்ளிகளில் அக்டோபர் 2007-ல் விரிவுபடுத்தப்பட்டது. உணவூட்டுச் செலவினம் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கான மதிப்பூதியம் ஆகியவற்றுக்கான செலவினங்களை 60:40 என்ற விகிதத்தில் மத்திய மாநில அரசுகள் பகிர்ந்து கொள்கின்றன. அரிசி மற்றும் அரிசிக்கான போக்குவரத்து செலவினம், மேலாண்மை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு செலவினத்திற்கு மத்திய அரசால் 100% நிதி வழங்கப்படுகிறது.

## 3.9. உணவூட்டுச் செலவினம்

நாளொன்றுக்கு / ஒரு குழந்தைக்கு (ரூபாயில்)

| வகுப்பு | மதிய உணவு செலவினம் | மத்திய அரசு (60%) | மாநில அரசு (40%) | மாநில அரசின் கூடுதல் பங்கு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| தொடக்கப்பள்ளி (1 முதல் 5 ஆம் வகுப்பு வரை) | 4.48 | 2.69 | 1.79 | 2.98 | 7.46 |
| உயர் தொடக்கப் பள்ளி (6 முதல் 8 ஆம் வகுப்பு வரை) | 6.71 | 4.03 | 2.68 | 0.85 | 7.56 |
| 9, 10ஆம் வகுப்பு | 100 விழுக்காடு மாநில அரசின் பங்களிப்பு | | | | 9.17 |

## 3.10 உணவுப் பொருட்கள் கொள்முதல்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சத்துணவு மையத்திற்கு தேவையான அரிசி, பருப்பு, செறிவூட்டப்பட்ட எண்ணெய், செறிவூட்டப்பட்ட உப்பு, கருப்புக் கொண்டைக்கடலை, பச்சைப்பயறு ஆகிய உணவுப்பொருட்களை ஒவ்வொரு மையத்திலும் விநியோகிக்கிறது. மையத்திற்கு தேவையான காய்கறிகள் மற்றும் தாளிதப் பொருட்கள் வாங்குவதற்கான தொகை அமைப்பாளர்களுக்கு மூன்று மாதத்திற்கு ஒருமுறை முன்பணமாக வழங்கப்படுகிறது. 2019-2020-ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை உரையில் அறிவித்தபடி உணவூட்டுச் செலவினங்களை உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக அரசுக்கு ஆண்டொன்றுக்கு ₹48.43 கோடி கூடுதல் செலவினம் ஏற்படுகிறது.

**46** முதல் **52** கிராம் எடையிலான முட்டை, மாநில அளவிலான வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி மூலம் தேர்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் வாரம் இரண்டு முறை சத்துணவு மையங்களுக்கு வழங்கப்படுகிறது. முறைகேடுகளைத் தடுக்க முட்டையின் மீது ஒப்புதலளிக்கப்பட்ட வண்ண முத்திரை இடப்படுகிறது.

## 3.11 சத்துணவு மையத்தின் உட்கட்டமைப்பு வசதிகள்

சத்துணவு மையங்களில் சமையலறையுடன் கூடிய வைப்பறைகளுக்கு எரிவாயு இணைப்பு மற்றும் சமையல் உபகரணங்கள் வழங்கப்பட்டு நவீனமயமாக்கப்பட்டுள்ளன.

## 3.12 சத்துணவு மையங்களின் செயல்பாடுகளைக் கண்காணித்தல்

சத்துணவு மையங்களில் வழங்கப்படும் உணவு, தினசரி பட்டியலின்படி சமைக்கப்படுகிறதா என்பதையும் பரிந்துரைக்கப்பட்ட அளவில் பொருட்களைக் கொண்டுள்ளதா என்பதையும் மாவட்ட / வட்டார அலுவலர்களால் கண்காணிக்கப்பட்டு, உறுதி செய்யப்படுகிறது. உணவு பரிமாறப்படும் முன் அதன் சுவை அறியப்படுகிறது.

உணவுப் பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாட்டு சட்டம், **2006**-ன் கீழ் அனைத்து சத்துணவு மையங்களும் பதிவு செய்யப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் பதிவுகள் புதுப்பிக்கப்படுகின்றன. இதன் பொருட்டு ஏற்படும் செலவினம் **₹43.00** இலட்சம் ஆகும்.

சத்துணவுத் திட்டத்தின் செலவுக் கணக்குகள் அந்தந்த கிராம சபை கூட்டங்களில் சமர்ப்பிக்கப்படுகிறது.

## 3.13 வெளிப்படைத்தன்மையை உறுதி செய்தல்

சத்துணவுத் திட்ட செயல்பாடுகளின் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்திடும் வகையில் பொதுமக்கள் தங்களின் கருத்து / புகார்களை கீழ்க்கண்ட கட்டணமில்லா தொலைபேசி எண் மற்றும் இணையம் வாயிலாக தெரிவிக்கலாம்.

கட்டணமில்லா தொலைபேசி எண் : **1800-425-8971.**

இணையம் - **www.middaymeal.tn.gov.in-online complaint**

## 3.14 புத்தாக்கப் பயிற்சி

சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு, உணவு பாதுகாப்பு, தீத்தடுப்பு, தன்சுத்தம் மற்றும் சுகாதாரமான முறையில் சமைத்தல் ஆகியவற்றுக்காக பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மாவட்ட அலுவலர்களுக்கு **2019-2020**-ஆம் ஆண்டில் மூன்று நாட்கள் சிறப்புப் பயிற்சி **₹5.10** இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

## 3.15 குழந்தைகளின் உடல் நலம் கண்காணித்தல்

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை சார்பாக அனைத்து பள்ளிகளிலும் தொடர்ந்து நல்வாழ்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன. நல்வாழ்வு முகாமின் போது, பொது நல்வாழ்வுப் பரிசோதனையுடன், இரத்தசோகை, கண் மற்றும் பல்

பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இரும்புச்சத்து, போலிக் அமில மாத்திரைகள், குடற்புழு நீக்க மாத்திரைகள் ஆகியவையும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், குழந்தைகளுக்கு நல்வாழ்வு அட்டைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## 3.16 சத்துணவு மையத்தின் மனித வளம்

- ஒவ்வொரு சத்துணவு மையத்திற்கும் சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- **500** பயனாளிகளுக்கு மேல் உள்ள சத்துணவு மையங்களுக்கு கூடுதலாக ஒரு சமையலர் நியமனம் செய்யப்படுகிறார்.

**சத்துணவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சிறப்புக் காலமுறை ஊதிய விகிதம் பின்வருமாறு:-**

| வ. எண். | பணியிடம் | ஒப்பளிக்கப்பட்ட பணியிடம் | ஊதிய விகிதம் (₹) |
|---|---|---|---|
| 1 | அமைப்பாளர் | 42,423 | 7,700-24,200 |
| 2 | சமையலர் | 42,852 | 4,100-12,500 |
| 3 | சமையல் உதவியாளர் | 42,855 | 3,000-9,000 |

**சத்துணவுப் பணியாளர்களுக்கு கூடுதலாக வழங்கப்படும் சலுகைகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | வீட்டு வாடகைப்படி (ஒரு மாதத்திற்கு) | : | நிலை I (அ) - ₹1300/-<br>நிலை I (ஆ) - ₹700/-<br>நிலை II - ₹600/-<br>நிலை III - ₹400/-<br>நிலை IV - ₹250/- |
| | நகர ஈட்டுப்படி (ஒரு மாதத்திற்கு) | : | சென்னை- ₹360/-<br>கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி - ₹180/- |
| 2. | மருத்துவப்படி (ஒரு மாதத்திற்கு) | : | ₹300/- |
| 3. | மலைவாழ்ப்படி (ஒரு மாதத்திற்கு)<br>குளிர்காலப்படி (நான்கு மாதங்களுக்கு மட்டும்) | : | 20% அடிப்படை ஊதியம்<br><br>5% அடிப்படை ஊதியம் |
| 4. | பொங்கல் கருணைத்தொகை (ஆண்டுக்கு ஒரு முறை) | : | ₹ 1000/- |
| 5. | பண்டிகை முன்பணம் (ஆண்டுக்கு ஒரு முறை) | : | ₹10,000/- |
| 6. | தற்செயல் விடுப்பு | : | 12 நாட்கள் |
| 7. | மகப்பேறு விடுப்பு | : | 180 நாட்கள் |
| 8. | பதவி உயர்வு | : | தகுதிவாய்ந்த பெண் சத்துணவுப் பணியாளர்கள் பணிமூப்பின் அடிப்படையில் ஊர்நல அலுவலராகவும், ஆண் பணியாளர்கள் அலுவலக உதவியாளர்களாகவும் முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்யப்படுகின்றனர் |
| 9. | ஒட்டுமொத்தத் தொகை | : | அமைப்பாளர் - ₹1,00,000/-<br>சமையலர்மற்றும் சமையல் உதவியாளர் - ₹50,000/- |

| | | | |
|---|---|---|---|
| 10. | சிறப்பு ஓய்வூதியம் | : | ₹2,000/- பிரதி மாதம். |
| 11. | சிறப்பு சேமநல நிதி | : | அரசின் பங்குத்தொகை ₹10,000/- |
| 12. | கருணை அடிப்படையிலான பணி நியமனம் | : | பணியிலிருக்கும் பொழுது காலமான சத்துணவுப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு பணி நியமனம் வழங்கப்படுகிறது. |
| 13 | சத்துணவுப் பணியாளர்கள் ஓய்வு பெறும் வயது | : | அமைப்பாளர் - 60 வயது சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் - 58 வயது |

## 3.17 சிறப்பு முயற்சிகள்

**சத்துணவில் செறிவூட்டப்பட்ட அரிசி:** புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் தருமபுரி, மதுரை, தஞ்சாவூர், தூத்துக்குடி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாக 9 வகையிலான நுண்ணூட்டச் சத்துக்களுடன் (வைட்டமின் A, வைட்டமின் B1, வைட்டமின் B2, வைட்டமின் B3, வைட்டமின் B6, வைட்டமின் B12, போலிக் அமிலம், இரும்பு மற்றும் துத்தநாகம்) கூடிய செறிவூட்டப்பட்ட அரிசி நவம்பர் 2019 முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு புதுமையான முன்முயற்சி (TANII) திட்டத்தில் ₹5.29 கோடி செலவில் இப்பணி மேற்கொள்ளப்படுகிறது.

**பயனாளிகள்**

| வ. எண் | மாவட்டம் | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் பயனாளிகள் | சத்துணவுத் திட்டப் பயனாளிகள் |
|---|---|---|---|
| 1 | தருமபுரி | 31440 | 136312 |
| 2 | மதுரை | 39570 | 154141 |
| 3 | தஞ்சாவூர் | 37408 | 152455 |
| 4 | தூத்துக்குடி | 26108 | 122499 |
| 5 | நீலகிரி | 6383 | 35400 |
| | **மொத்தம்** | **140909** | **600807** |

**சத்துணவு மையங்களுக்கு சர்வதேச தரச் சான்று பெறுதல்:** புதிய முயற்சியாக, சத்துணவு மையங்களின் தரத்தை சர்வதேச அளவில் பேணும் வகையில், 100 சத்துணவு மையங்களுக்கு சர்வதேச தர நிர்ணயச்சான்றிதழ் (ISO Certificate) பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**பயோமெட்ரிக் பதிவு:** சத்துணவுத் திட்டத்தில் பயன்பெறும் குழந்தைகள் எண்ணிக்கையின் உண்மைத் தன்மை அறிய முன்னோடி முயற்சியாக ₹4 இலட்சம் செலவில் பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கும் 10 சத்துணவு மையங்களில் பயோமெட்ரிக் பதிவின்படி குழந்தைகளின் வருகையை பதிவு செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பள்ளிக் காய்கறித் தோட்டம் அமைத்தல்:** பள்ளிக் காய்கறித் தோட்டம் அமைப்பது என்பது குழந்தைகளுக்கு இயற்கை வேளாண்மை, ஊட்டச்சத்து, சுற்றுச்சூழல், வாழ்க்கைத் திறன் மேம்பாடு ஆகிய

பண்புகளை வளர்க்கும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, 10,024 சத்துணவு மையங்களில் ஒரு மையத்திற்கு ₹5,000 மதிப்பீட்டில் காய்கறி தோட்டம் அமைத்திட ₹5.01 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

**சிறு பழுதுகளைச் சரிசெய்தல்:** 2,167 சத்துணவு மையங்களில் ஒரு மையத்திற்கு ₹10,000 வீதம் சிறு பழுதுகளைச் சரிசெய்வதற்கென ₹2.17 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

**சமையல் பாத்திரங்கள் வழங்குதல்:** 6,319 சத்துணவு மையங்களுக்கு சமையல் பாத்திரங்கள் வாங்கி வழங்குவதற்கு என ₹9.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 3.18 நிதி ஒதுக்கீடு

**2020-2021 ஆம் ஆண்டில் இத்திட்ட செயலாக்கத்திற்கென ₹2,109.11 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

********

அத்தியாயம் - 4

# ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்

## 4.1 முன்னுரை

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் துறையின் மூலமாக, குழந்தைகளின் உரிமைகளான உணவு, சுகாதாரம் மற்றும் கல்வி ஆகியவற்றை உறுதி செய்வதில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. குழந்தையின் முதல் 1,000 நாட்களில் வழங்கப்படும் சரியான ஊட்டச்சத்து மற்றும் கவனிப்பு, வாழ்நாள் முழுவதும் உடல்நலம், நல்வாழ்வு மற்றும் திறன் ஆகியவை வளர வழிவகுக்கிறது. முன்னதாக, உணவு வழங்குவதை குறிக்கோளாக கொண்டிருந்த அங்கன்வாடி மையங்கள், தற்போது துடிப்பான, உற்சாகமான குழந்தை பராமரிப்பு மையங்களாக ஏற்றம் அடைந்துள்ளன.

மேலும், ஊட்டச்சத்து, நல்வாழ்வு, தொடக்கக்கல்வி போன்ற சேவைகளை வழங்குவதில் அங்கன்வாடி மையங்கள் சமுதாயத்தின் நுழைவாயிலாக திகழ்கின்றன. 1975ல் மூன்று பகுதிகளில் தொடங்கப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகளின் சேவைகள் தற்போது மாநிலம் முழுவதும் தனது சிறகுகளை விரித்துள்ளது.

ஊட்டச்சத்துக் குறைபாடு, இறப்பு மற்றும் நோயுறும் தன்மை எனும் தீய சுழற்சியை உடைத்து, 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு முறைசாரா

முன்பருவக் கல்வியை வழங்குவதற்கான முழுமையான அணுகுமுறையைப் பின்பற்றுவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

## 4.2 தொலைநோக்குப் பார்வை

தாய், குழந்தை ஆகியோரது ஆரோக்கியம், ஊட்டச்சத்து அளவீடுகளை, பாதுகாப்பான பாலின கூர்உணர்திறன் கொண்ட குழந்தை நேய சூழலுடன் தரமான சேவைகளை வழங்கி மேம்படுத்துவதன் மூலம், குழந்தையின் ஒட்டுமொத்த வளர்ச்சியை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் முழுமையான முறையில் உறுதிப்படுத்துகிறது.

## 4.3 இலக்கு

நிலைத்த வளர்ச்சி இலக்குகளில் **(Sustianable Development Goals)** குறிப்பிட்டுள்ளபடி, ‘*எவரும் விடுபடக்கூடாது*’ என்ற கொள்கையினை உறுதி செய்திடுதல் மற்றும் “ஊட்டச்சத்து குறைபாடில்லா தமிழ்நாடு” என்ற நிலையினை அடைதல்.

## 4.4 அணுகுமுறைகள்

- அனைத்து தரப்பு மக்களையும் சென்றடைய, நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைந்திட பொருத்தமான, சாதகமான எண்ணங்களை மக்களிடையே ஊக்குவிக்க, பல்வேறு துறைகள் மற்றும் பங்குதாரர்களுடன் ஒருங்கிணைந்து திட்டத்தை செயல்படுத்துதல்.

- பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி மக்களிடையே சமீபத்திய தகவல்களை பரப்பிடுதல் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

- தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் திறன் மேம்பாடு மற்றும் நிகழ்நேர கண்காணிப்பினை உறுதிசெய்தல்.

## 4.5 ஒரு குடையின் கீழ் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டமானது, 2017 ஆம் ஆண்டில் ஒரு குடையின் கீழ் அதன் சேவைகள் அமையும் வகையில் கீழ்க்காணுமாறு மத்திய அரசால் மறுசீரமைக்கப்பட்டுள்ளது:-

1. அங்கன்வாடி சேவைகள் திட்டம்
2. பிரதம மந்திரி மகப்பேறு நிதி உதவித் திட்டம் (பிரதான் மந்திரி மாத்ரு வந்தன யோஜனா- 2018-2019ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது)
3. தேசிய குழந்தைகள் காப்பகத் திட்டம்
4. குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்
5. தேசிய ஊட்டச்சத்து இயக்கம் (போஷன் அபியான்)
6. வளரிளம் பெண்களுக்கான திட்டம்

## 4.6 செயல்பாட்டு நிலை

தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் **54,439** அங்கன்வாடி மையங்கள் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் **49,499** முதன்மை மையங்கள் மற்றும் **4,940** குறு மையங்களாகும். **385** கிராமப்புறத் திட்டங்கள், **47** நகர்ப்புறத் திட்டங்கள் மற்றும் **2** பழங்குடியினப் பகுதி திட்டங்கள் வாயிலாக இம்மாநிலத்தில் இத்துறையின் சேவைகளானது பயனாளிகளான **6** வயதிற்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளரிளம் பெண்களைச் சென்றடைகிறது.

கிராமப்புற, நகர்ப்புறத் திட்டங்களில் ஒரு அங்கன்வாடி மையம் செயல்பட முதன்மை அங்கன்வாடி மையம் எனில் **400** முதல் **800** மக்கள் தொகை எனவும், குறு அங்கன்வாடி மையம் எனில் **150** முதல் **400** மக்கள் தொகை எனவும் வரையறுக்கப்பட்டுள்ளது. பழங்குடியினப் பகுதி திட்டங்களில் முதன்மை அங்கன்வாடி மையத்திற்கு **300** முதல் **800** மக்கள் தொகை எனவும், குறு அங்கன்வாடி மையத்திற்கு **150** முதல் **300** மக்கள் தொகை எனவும் மாறுபடும்.

## 4.7 திட்டத்தின் அமைப்பு

அரசு செயலாளர்
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

இயக்குநர் மற்றும் குழும இயக்குநர்

இணை இயக்குநர்கள்

மாவட்ட திட்ட அலுவலர்கள்

குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள்

அங்கன்வாடிப் பணியாளர்கள்

குறு அங்கன்வாடிப் பணியாளர்கள்

அங்கன்வாடி உதவியாளர்கள்

## 4.8 நிதி ஒதுக்கீடு

**2020-2021ஆம் ஆண்டிற்கு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் செயல்பாட்டிற்கென ₹2,703.46 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 4.9 இணை உணவு

தொடர்ச்சியான கவனிப்பு மற்றும் சீரிய அணுகுமுறையால் தாய் மற்றும் குழந்தையின் வளர்ச்சியினை நெறிப்படுத்தும் ஒரு தளமாக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் செயல்படுகிறது. கர்ப்ப காலம் மற்றும் குழந்தைப்

பருவத்தில் வழங்கப்படும் நல்ல ஊட்டச்சத்து, குழந்தையின் செழிப்பான வளர்ச்சிக்கும் கற்றல்திறனுக்கும் ஒரு அடித்தளமாக அமைகிறது. பெண்ணின் கருவுறுதலுக்கும், குழந்தையின் 2வது பிறந்த தினத்திற்கும் இடைப்பட்ட முதல் 1000 நாட்கள், ஆரோக்கியம் மற்றும் வளமிக்க எதிர்காலத்தை உருவாக்க ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்கும் வழித்தடமாக உள்ளது.

அங்கன்வாடி மையங்கள் வாயிலாக வழங்கப்படும் இணை உணவு, ஏனைய சேவைகளுக்கும் உன்னத வளர்ச்சிக்கும் திறவுகோலாக அமைந்துள்ளது. அங்கன்வாடி மையத்தின் பயனாளிகளான குழந்தைகள், வளரிளம் பெண்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் உட்கொள்ளும் சராசரி உணவிற்கும் அவர்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட உணவு அளவிற்கும் இடையேயுள்ள புரத மற்றும் கலோரிச் சத்தின் இடைவெளியை குறைக்கும் பொருட்டு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 4.10 சத்துமாவு

குழந்தைகளுக்கு பிறந்தது முதல் ஆறு மாதம் வரையிலும் தாய்ப்பால் மட்டுமே வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆறாம் மாதத்திலிருந்து குழந்தைகளின் ஆரோக்கியத்தினை மேம்படுத்தவும், வளர்ச்சியை ஊக்கப்படுத்தவும் தேவைப்படும் அதிகப்படியான ஊட்டச்சத்து மற்றும் சக்தியினை தாய்ப்பால் மட்டுமே அளிக்க இயலாது. இந்த வயதில் குழந்தையின் செரிமான அமைப்பு திட உணவுகளிலிருந்து மாவுச்சத்து, புரதம் மற்றும்

கொழுப்பு போன்ற உணவுகளை செரிமானம் செய்யும் அளவிற்கு முதிர்ச்சியடைகிறது. ஒரு நாளில் போதுமான உணவு கிடைக்காத அல்லது மிகக் குறைந்த அளவு உணவு உட்கொள்ளும் குழந்தைகளுக்கு தேவையான ஊட்டச் சத்துக்கள் கிடைப்பதில்லை.

எனவே, தாய்மார்கள் ஏற்ற காலத்தில் இணை உணவினை வழங்குவதை உறுதிப்படுத்தும் பொருட்டு, ஆறு மாதம் முதல் ஆறு வயது வரையிலான குழந்தைகள், உகந்த ஊட்டச்சத்து நிலையை அடைவதற்கு, நிபுணர் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட சத்துமாவு இணை உணவாக வழங்கப்பட்டு வருகிறது.

ஒரு குழந்தையின் வளர்ச்சி தாயின் கருவில் இருந்தே தொடங்குகிறது. எனவே கர்ப்ப காலத்தில் சத்தான உணவை உட்கொள்வது கருவிலிருக்கும் குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றுவதுடன், ஆரோக்கியமான பிறப்பு எடைக்கும், பல பிறப்பு குறைபாடுகளின் அபாயத்தை குறைப்பதற்கும் தொடர்புடையதாக உள்ளது. சமச்சீரான உணவு இரத்த சோகையின் அபாயங்களையும் குறைக்கும். கர்ப்ப காலத்தில் தேவைப்படும் அதிகபட்ச ஊட்டச்சத்து, உணவின் மூலமே பெறப்படுகிறது. இதில் நுண்ணூட்டச்சத்து மிக்க இணை உணவுகள் மிக முக்கியப் பங்கை வகிக்கின்றன. இதன்பொருட்டு, அங்கன்வாடி மையங்களில் பதிவு செய்த நாள் முதல் கர்ப்பிணிப் பெண்களுக்கு தாதுக்கள் மற்றும் நுண்ணூட்டச்சத்து செறிவூட்டப்பட்ட சத்துமாவு இணை உணவாக

வழங்கப்பட்டு வருகிறது. இது குழந்தை ஆறு மாதம் அடையும் வரை தாய்க்கு வழங்கப்படுகிறது.

மேலும், 11 வயது முதல் 14 வயது வரையிலான பள்ளி செல்லா வளரிளம் பெண்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கும் சத்துமாவு வழங்கப்படுகிறது.

## 4.11 சத்துமாவின் கலவை

| வ. எண் | மூலப் பொருட்கள் | சதவீதம் |
|---|---|---|
| 1 | கோதுமை மாவு | 45.50 |
| 2 | முளைகட்டிய கேழ்வரகு மாவு | 5.00 |
| 3 | கொழுப்பு நீக்கப்படாத சோயா மாவு | 10.50 |
| 4 | வெல்லம் | 27.00 |
| 5 | வறுத்த கேழ்வரகு மாவு | 6.00 |
| 6 | செறிவூட்டப்பட்ட எண்ணெய் | 5.00 |
| 7 | வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் கலவை | 1.00 |
| | மொத்தம் | 100.00 |

அனைத்து தகுதியான பயனாளிகளுக்கும் ஒரு வருடத்தில் 300 நாட்கள் சத்துமாவு வழங்கப்படுகிறது.

அங்கன்வாடி மையங்களில் வழங்கப்படும் சத்துமாவானது, 25 பெண்கள் தொழிற்கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 2 தனியார் உற்பத்தியாளர்களிடமிருந்து 65:35 என்ற விகிதத்தில் கொள்முதல் செய்யப்படுகிறது. தற்போது 25 கூட்டுறவு சங்கங்களில் 1,450 உறுப்பினர்கள் உள்ளனர். பெண் உறுப்பினர்களில் பெரும்பாலானோர் விதவைகள், கணவரால் கைவிடப்பட்டவர் அல்லது ஆதரவற்ற பெண்கள் ஆவர். இச்சங்கங்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் குழு மற்றும் நிர்வாக அலுவலர்களாக செயல்படும் அரசு

அலுவலர்களான தொழிற்கூட்டுறவு அலுவலர்களால் நிர்வகிக்கப்படுகின்றன.

## 4.12 அங்கன்வாடி மையங்களுக்கு வருகை புரியும் குழந்தைகளுக்கு சூடான சமைத்த பல்வகை கலவை சாதம் (2 வயது முதல் 5+ வயது குழந்தைகள் வரை)

குழந்தைகள் கல்வி கற்றலை ஊக்குவிப்பதற்காகவும், அதே நேரத்தில் ஏழ்மை நிலையால் ஏற்படும் வளர்ச்சிக் குறைபாட்டினை ஈடு செய்வதற்காகவும் புரட்சிகரமான 'சத்துணவுத் திட்டம்' தமிழ்நாடு அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு போதுமான ஊட்டச்சத்து தேவைப்படுவதால், குழந்தைகளுக்கு சூடான சமைத்த உணவுடன் செவ்வாய்க் கிழமைகளில் கருப்புக் கொண்டைக் கடலை / பச்சைப்பயறு, வெள்ளிக் கிழமைகளில் உருளைக் கிழங்கு, திங்கள், புதன் மற்றும் வியாழக் கிழமைகளில் முட்டையும் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒரே விதமான உணவைத் தவிர்ப்பதற்காக, ஊட்டச்சத்து நிபுணர்களுடன் கலந்தாலோசித்து, அங்கன்வாடி மையங்களுக்கு வருகை தரும் 6 வயதிற்குட்பட்ட சிறு குழந்தைகளின் சிறப்பியல்பு மற்றும் செரிமானத் திறனைக் கருத்தில் கொண்டு, பலவிதமான கலவை சாதம் வழங்கும் திட்டத்தை 20.03.2013 முதல் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வட்டாரத்தில் பின்வரும் அட்டவணையில் உள்ளவாறு முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தி, அதைத் தொடர்ந்து பெறப்பட்ட சாதகமான கருத்துகளின் அடிப்படையில்,

இத்திட்டம் **15.08.2014** முதல் மாநிலத்தின் அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

| கிழமை | உணவு வகைகள் |
|---|---|
| திங்கள் | தக்காளி சாதம் + வேகவைத்த முட்டை |
| செவ்வாய் | கலவை சாதம் + வேகவைத்த கருப்புக் கொண்டைக்கடலை அல்லது வேகவைத்த பச்சைப் பயறு |
| புதன் | காய்கறி புலவு + வேகவைத்த முட்டை |
| வியாழன் | எலுமிச்சை சாதம் + வேகவைத்த முட்டை |
| வெள்ளி | பருப்பு சாதம் + வேகவைத்த உருளைக்கிழங்கு |
| சனி | கலவை சாதம் |
| ஞாயிறு | வீட்டிற்கு எடுத்துச்செல்லும் வகையில் உலர் உணவு பொருட்கள் |

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் அங்கன்வாடி மையங்களுக்குத் தேவையான அரிசி, பருப்பு, கருப்புக் கொண்டைக் கடலை, பச்சைப் பயறு மற்றும் செறிவூட்டப்பட்ட எண்ணெய் ஆகிய பொருட்கள் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு உப்புக் கழகத்தால் இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு வழங்கப்படுகின்றது. திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி கோரும் முறை மூலம் முட்டைகள் பெற்று வழங்கப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட அனைத்து உணவு பொருட்களும் ஒவ்வொரு அங்கன்வாடி மையத்திற்கும் நேரடியாக வழங்கப்படுகிறது.

மேலும் காய்கறிகள், தாளிதப் பொருட்கள் மற்றும் எரிபொருள் ஆகியவற்றிற்கான செலவினங்களை ஈடுசெய்வதற்காக, அரசு, உணவூட்டு செலவினத்தை, பருப்பு பயன்படுத்தப்படும் நாட்களில் **₹1.13** லிருந்து **₹1.52** ஆகவும், பருப்பு பயன்படுத்தாத பிற

நாட்களுக்கு ₹1.35 லிருந்து ₹1.81 ஆகவும் உயர்த்தி வழங்கியுள்ளது. குழந்தைகளுக்கு பலவிதமான கலவை சாத உணவு வகைகளை வழங்குவதற்காக நாள் ஒன்றுக்கு சராசரியாக ₹5.41 செலவிடப்படுகிறது.

## 4.13 வாராந்திர உணவு அட்டவணை

| வ. எண் | பயனாளிகளின் வகை | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 6 மாதம் முதல் 1 வயதிற்குட் பட்ட குழந்தைகள் | சத்துமாவு | | | | | | இல்லை |
| 2 | 1 முதல் 2 வயதிற்குட் பட்ட குழந்தைகள் | சத்துமாவு மற்றும் புதன் கிழமையன்று 1 முட்டை | | | | | | |
| 3 | 2 முதல் 6 வயதிற்குட் பட்ட குழந்தைகள் | சத்து மாவு, தக்காளி சாதம் மற்றும் முட்டை | சத்து மாவு, கலவை சாதம் மற்றும் கருப்புக் கொண்டை கடலை அல்லது பச்சைப் பயறு | சத்து மாவு, காய் கறி புலவு மற்றும் முட்டை | சத்து மாவு, எலுமிச்சை சாதம் மற்றும் முட்டை | சத்து மாவு, பருப்பு சாதம் மற்றும் வேக வைத்த உருளைக் கிழங்கு | சத்து மாவு, மற்றும் கலவை சாதம் | உலர் உணவுப் பொருட்கள் (அரிசி மற்றும் பருப்பு) |
| 4 | கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் + பள்ளி செல்லா 11 முதல் 14 வயது வரையிலான வளரிளம் பெண்கள் | சத்துமாவு | | | | | | இல்லை |

## 4.14 பயனாளிகள் விவரம்

| வ. எண் | பயனாளிகளின் வகை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 6 மாதம் முதல் 1 வயதிற்குட்பட்ட குழந்தைகள் | 4,07,575 |
| 2 | 6 மாதம் முதல் 1 வயதிற்குட்பட்ட குழந்தைகள் (கடுமையான எடை குறைவுள்ள) | |
| 3 | 1 முதல் 2 வயதிற்குட்பட்ட குழந்தைகள் | 6,74,441 |
| 4 | 1முதல் 2 வயதிற்குட்பட்ட குழந்தைகள் (கடுமையான எடை குறைவுள்ள) | |
| 5 | 2 முதல் 3 வயதிற்குட்பட்ட குழந்தைகள் | 7,32,720 |
| 6 | 2 முதல் 3 வயதிற்குட்பட்ட குழந்தைகள் (கடுமையான எடை குறைவுள்ள) | |
| 7 | 3 முதல் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் | 6,63,693 |
| 8 | 3 முதல் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் (கடுமையான எடை குறைவுள்ள) | |
| | **மொத்த குழந்தைகளின் எண்ணிக்கை** | **24,78,429** |
| 9 | கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் | 7,04,203 |
| 10 | வளரிளம் பெண்கள் (11 முதல் 14 வயதிற்குட்பட்ட பள்ளிக்கு செல்லா) | 1,033 |
| | **மொத்தம்** | **31,83,665** |

## 4.15 செறிவூட்டப்பட்ட உணவுப் பொருட்களின் பயன்பாடு

நுண்ணூட்டச் சத்துக்கள் மனித செல்களின் வளர்ச்சி மற்றும் வளர்சிதை மாற்றத்தைத் தூண்டுவதற்கு மிகவும் தேவையானவை. இரும்புச்சத்து, அயோடின் மற்றும் வைட்டமின் 'ஏ' சத்து குறைபாடுகள் மிக அதிக அளவில் காணப்படும் நுண்ணூட்டச் சத்து குறைபாடுகளாகும். போலிக் ஆசிட், துத்தநாகம் போன்ற பிற நுண்ணூட்டச் சத்துக்கள் வளர்ச்சியை ஊக்குவிப்பதிலும் குறிப்பிட்ட நோய்களைத் தடுப்பதிலும் முக்கிய பங்காற்றுகின்றன.

'புலப்படாத பசி' (Hidden Hunger) எனப்படும் நுண்ணூட்டச் சத்துக் குறைபாட்டைக் களைவதற்காக பின்வரும் செறிவூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் இணை உணவில் பயன்படுத்தப்படுகின்றன:-

- 1991 ஆம் ஆண்டிலிருந்து சத்துணவு தயாரிப்பில் அயோடின் செறிவூட்டப்பட்ட உப்பு பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது, இரும்புச் சத்து மற்றும் அயோடினுடன் இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு பயன்படுத்தப்படுகிறது.

- சமையல் எண்ணெய் வைட்டமின் 'ஏ' மற்றும் வைட்டமின் 'டி' யுடன் செறிவூட்டப்பட்டுள்ளது.

- குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளரிளம் பெண்களுக்கு

வழங்கப்படும் சத்துமாவு, வைட்டமின் மற்றும் தாதுக்களுடன் செறிவூட்டப்பட்டுள்ளது.

- நுண்ணூட்டச்சத்து குறைபாட்டை ஈடுகட்ட **9** நுண்ணூட்டச் சத்துக்களுடன், செறிவூட்டப்பட்ட அரிசிமணிகள் கலந்த உணவு தயாரிப்பது (வைட்டமின் ஏ, பி**1**, பி**2**, பி**3**, பி**6**, பி**12**, போலிக்அமிலம், இரும்புச் சத்து மற்றும் துத்தநாகம்) முன்னோடித் திட்டமாக தருமபுரி, மதுரை, தூத்துக்குடி, தஞ்சாவூர் மற்றும் நீலகிரி ஆகிய **5** மாவட்டங்களில் சத்துணவுத் திட்டத்தின் கீழ் நவம்பர் **2019** முதல் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

## 4.16 தேசிய ஊட்டச்சத்து இயக்கம் (போஷன் அபியான்)

**2017-2018**ஆம் ஆண்டு துவங்கி, அடுத்த மூன்றாண்டுகளுக்குள் இந்தியாவில், பிறந்தது முதல் **6** வயதிற்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டச்சத்து நிலையை குறிப்பிட்ட காலகெடுவிற்குள் முன்னேற்றுவதற்கான குறிக்கோளுடன் தேசிய ஊட்டச்சத்து இயக்கத்தை (போஷன் அபியான்) மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது.

இத்திட்டமானது, முதல் கட்டமாக **5** மாவட்டங்களிலும், இரண்டாம் கட்டமாக **6** மாவட்டங்களிலும் மற்றும் மூன்றாம் கட்டமாக **21** மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மத்திய மாநில அரசுகளின் நிதிப் பங்களிப்பு முறையே **80:20** என்ற விகிதாச்சார அடிப்படையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தேசிய ஊட்டச்சத்து இயக்கத்தின் இலக்குகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| வ. எண் | நோக்கங்கள் | இலக்கு |
|---|---|---|
| 1. | பிறந்தது முதல் 6 வயது குழந்தைகளிடையே குள்ளத் தன்மையை குறைத்தல் மற்றும் தடுத்தல் | ஒவ்வொரு ஆண்டும் 2 சதவிகிதம் வீதம் 6 சதவிகிதம் குறைத்தல் |
| 2. | பிறந்தது முதல் 6 வயது குழந்தைகளிடையே ஊட்டச்சத்து குறைபாடு (எடைகுறைவு) குறைத்தல் மற்றும் தடுத்தல். | ஒவ்வொரு ஆண்டும் 2 சதவிகிதம் வீதம் 6 சதவிகிதம் குறைத்தல் |
| 3. | 6 முதல் 59 மாதங்கள் வயதுடைய பச்சிளங் குழந்தைகளிடையே இரத்தசோகை தாக்கத்தினை குறைத்தல் | ஒவ்வொரு ஆண்டும் 3 சதவிகிதம் வீதம் 9 சதவிகிதம் குறைத்தல் |
| 4. | 15 முதல் 49 வயதில் உள்ள வளரிளம் பெண்கள் மற்றும் தாய்மார்களிடையே இரத்த சோகை தாக்கத்தினை குறைத்தல் | ஒவ்வொரு ஆண்டும் 3 சதவிகிதம் வீதம் 9 சதவிகிதம் குறைத்தல் |
| 5. | குறைந்த எடையுடன் குழந்தைகள் பிறப்பதை குறைத்தல் | ஒவ்வொரு ஆண்டும் 2 சதவிகிதம் வீதம் 6 சதவிகிதம் குறைத்தல் |

தேசிய ஊட்டச்சத்து இயக்கத்தினைச் செயல்படுத்தி இலக்குகளை அடைய மாநில திட்ட மேலாண்மை அலகு **(State Project Management Unit)** அமைக்கப்பட்டுள்ளது. இந்த அலகு மாநில ஊட்டச்சத்து வள மையமாகவும் **(State Nutrition Resource Centre)** செயல்பட்டு, ஊட்டச்சத்துக் குறைபாட்டை தடுக்க திட்டங்களை உத்வேகத்துடன் செயல்படுத்த விழைகிறது. மாவட்ட மற்றும் வட்டார அளவிலான உதவி மையங்கள் மாநில திட்ட மேலாண்மை அலகிற்கு உதவிபுரிந்து நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை எய்த உதவுகின்றன. அனைத்து மாவட்டங்களிலும் உதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.


குறித்த நேரத்தில் திட்டங்களை செயல்படுத்தி கண்காணிக்க, பல்வேறு கூறுகள் தேசிய ஊட்டச்சத்து திட்டத்தின் ஒரு பகுதியாக வரையறுக்கப்பட்டுள்ளன.

- அங்கன்வாடிப் பணியாளர் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு திறன்பேசிகள் வழங்கப்பட்டுள்ளது. இதில் பொதுவான மென்பொருள் பயன்பாடு **(Common Application Software - ICDS-CAS)** பதிவேற்றம் செய்யப்பட்டு அங்கன்வாடிப் பணியாளர் பயன்படுத்தும் **11** பதிவேடுகளில் **10** பதிவேடுகள் மின்னணு முறைப்படுத்தப்பட்டுள்ளன. இச்செயல்முறையின் நோக்கம், அங்கன்வாடிப் பணியாளர்களின் செயல்பாடுகளை வலுப்படுத்தி, திறம்பட்ட


கண்காணிப்பில் ஊட்டச்சத்துச் செயல்பாட்டினை மேம்படுத்தி குறித்த நேரத்தில் செயல்படுத்துவதாகும். இதன் பொருட்டு, மின் சேமிப்புக் கலனுடன் **(Power Bank)** கூடிய **59,488** திறன்பேசிகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்-களுக்கு பொதுவான மென்பொருள் பயன்பாடு செயல்படுத்துவதில் பயிற்சி அளிக்கப்-பட்டுள்ளது.

- கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், பச்சிளம் குழந்தைகள் மற்றும் **6** வயது வரையிலான குழந்தைகளின் ஊட்டச்சத்தினைக் கண்காணிக்க முறையே பச்சிளம் குழந்தைகள் உயரத்தை அளவிடும் கருவி **(Infantometer),** குழந்தைகள் உயரத்தை அளவிடும் கருவி **(Stadiometer),** தாய் மற்றும் குழந்தை எடை எடுக்கும் கருவி **(Mother and child weighing scale)** மற்றும் குழந்தைகளின் எடை எடுக்கும் கருவி **(Infant weighing scale),** ஆகியவை அடங்கிய கருவிகள் **54,439** அங்கன்வாடி மையங்களுக்கும் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

- **இயல்பு நிலைக் குழந்தைகளின் விவரம்**




- **மிதமான எடைகுறைவான குழந்தைகளின் விவரம்**




- **ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரத் திட்டங்களை பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்த ஒருங்கிணைந்த திட்ட குழுக்கள்**

மாநில/மாவட்ட/வட்டார அளவில் அமைக்கப் பட்டுள்ளன. இக்குழுக்கள் மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூடி தேசிய ஊட்டச்சத்து (போஷன் அபியான்) இயக்கத்தின் செயல்பாட்டையும், முன்னேற்றத்தையும் உறுதி செய்யும்.

## 4.17 செயல்திறன் அடிப்படையிலான ஊக்கத்தொகை

- அங்கன்வாடி பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர்களுக்கு பொதுவான மென்பொருள் பயன்பாட்டினை ஊக்குவிக்க செயல்திறன் அடிப்படையிலான ஊக்கத் தொகை மாதந்தோறும் முறையே **₹500** மற்றும் **₹250** வழங்கப்படுகிறது.

செயல்திறன் அடிப்படையிலான மாதாந்திர ஊக்கத்தொகை அளிப்பதின் முக்கிய நோக்கம்

- பொதுவான மென்பொருள் பயன்பாட்டினை அங்கன்வாடி பணியாளர்கள் தொடர்ந்து பயன்படுத்துவதை ஊக்கப்படுத்தி, பணிகளை மேம்பட்ட கண்காணிப்புடன் நிர்வகிப்பது.

- முதல் **1,000** நாட்களில் சேவைகளை மையப்படுத்தி உரிய பயனாளிகளுக்கு வழங்குவதில் உதவுவது.

**2019-2020-ஆம் ஆண்டு அங்கன்வாடி பணியாளர்களுக்கும், அங்கன்வாடி உதவியாளர்களுக்கும் ₹22.87 கோடி ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.**

## 4.18 படிப்படியான கற்றல் முறை (Incremental Learning Approach — ILA)

களப் பணியாளர்களுக்கு ஆலோசனை வழங்கும் திறன்களை மேம்படுத்தவும், குழந்தையின் முதல் **1,000** நாட்களின் (பொன்னான **1,000** நாட்கள்) முக்கியத்துவத்தை வலியுறுத்தவும் படிப்படியான கற்றல் முறை **21** தொகுப்புகள் மூலமாக திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பயிற்சியானது அனைவருக்கும் சென்றடையும் வகையில் அடுக்கை முறை பயிற்சி மூலம் திட்டமிடப்பட்டுள்ளது. மாநில வளக்குழு **(State Resource Group),** மாவட்ட வளக்குழு **(District Resource Group),** வட்டார வளக்குழு **(Block Resource Group)** மற்றும் தொகுதி வளக்குழு **Sector Level Resource Group)** அமைத்து, கருத்துக்கள் மாநில அளவிலிருந்து தொகுதி அளவில் சென்றடையும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

## 4.19 சமுதாயம் சார்ந்த நிகழ்வுகள் (Community Based Events)

பாலூட்டும் தாய்மார்கள், கர்ப்பிணிகள், குழந்தைகள் ஆகிய இலக்கு பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு

சமுதாயம் சார்ந்த நிகழ்வுகள் அங்கன்வாடி மைய அளவில் மாதத்திற்கு இருமுறை நடத்தப்படுகிறது.

சமுதாயம் சார்ந்த நிகழ்வுகளின்போது கர்ப்பகால பரிசோதனை, கர்ப்பகால கவனிப்பு, தாய்-சேய் பாதுகாப்பு அட்டை, குழந்தை பிறந்த ஒரு மணி நேரத்திற்குள் பிரத்யேக தாய்ப்பால் புகட்டுதலை அறிவுறுத்துதல், பணஉதவிகள், இரும்பு மற்றும் கால்சியம் மாத்திரை வழங்குதல், தடுப்பூசி, பலவீனமான பச்சிளங்குழந்தை பராமரிப்பு, ஆரோக்கிய உணவு, குடல் புழு நீக்கம், துணை உணவு, எடை கூடுதல், அயோடின் உப்பு, கை கழுவுதல் மற்றும் சுகாதாரம் சார்ந்த தகவல்கள் அளிக்கப்படுகின்றன.

சமுதாயம் சார்ந்த ஐந்து நிகழ்வுகளான முறையே 1) கர்ப்பிணி பெண்களை முதல் மற்றும் இரண்டாம் மும்மாதங்களில் வரவேற்றல், 2) இணை உணவு துவக்கும் தினம் 3) கணவன்மார்களுக்கான தினம் (தாய்-சேய் நலனில் கணவனின் பங்கு பற்றி எடுத்துரைத்தல்) 4) குழந்தைகளின் முன்பருவக் கல்வியினை அங்கன்வாடி மையங்களில் துவக்குதல் மற்றும் 5) பொது சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து சார்ந்த தகவல்களை அளித்தல்.

## 4.20 மின்னணு முறையில் படிப்படியான கற்றல் முறை (e-Incremental Learning Approach- e-ILA)

பணியாளர்களின் ஆலோசனை வழங்கும் திறனை மேம்படுத்த, வழக்கத்தில் இருக்கும் படிப்படியான கற்றல் முறையுடன், மின்னணு முறையிலான 21

கருத்துக்கள் அடங்கிய 5 கருப்பொருள் தொகுப்புகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இதன் பயன் தானாக கற்றுணர்தல் மற்றும் நேரம் சேமிப்பதுமாகும்.

அனைத்து மாவட்டங்களில் உள்ள அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் மின்னணு முறையில் படிப்படியாக கற்றல் முறையிலான தொகுப்புகளை கற்று கணினியின் மூலம் சான்றிதழ் பெற்றுள்ளனர்.

## 4.21 மக்கள் பங்கேற்பு இயக்கம் (Jan Andolan)

தேசிய ஊட்டச்சத்து இயக்கத்தின் (போஷன் அபியான்) கீழ் செயல்படும் மக்கள் பங்கேற்பு இயக்கம் பஞ்சாயத்து அமைப்புகள், அரசு துறைகள், சமூக நிறுவனங்கள், பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியோரது பங்கேற்புடன் ஒருங்கிணைந்த முயற்சிகள் மூலம் ஊட்டச்சத்து விழிப்புணர்வை ஒவ்வொரு வீட்டிற்கும் கொண்டு செல்வதை இலக்காக கொண்டுள்ளது.

மக்கள் பங்கேற்பு இயக்க செயல்பாட்டின் மூலம் மாவட்டங்களுக்கு கீழ்க்கண்ட செயல்பாடுகளுக்கு போதுமான நிதி வழங்கப்பட்டுள்ளது.

1. சமுதாய வளைகாப்பு
2. தாய்ப்பால் வாரவிழா
3. ஊட்டச்சத்து மாதம் கொண்டாடுதல்
4. கை கழுவும் தினம்
5. மாநில, மாவட்ட மற்றும் வட்டார

அளவிலான கண்காட்சி அமைத்தல்

6. அனைத்து மாவட்டங்களிலும் பாரம்பரிய உணவுத் திருவிழா நடத்துதல்
7. வளரிளம் பெண்களுக்கான சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து கல்வி வழங்குதல்

தேசிய ஊட்டச்சத்து மாதம் செப்டம்பர் **2019**-ல் கொண்டாடப்பட்டது. இந்த ஒரு மாத கால கொண்டாட்டம் குழந்தையின் முதல் **1,000** நாட்கள், இரத்த சோகை, வயிற்றுப் போக்கு, கை கழுவுதல், சுற்றுபுற சுகாதாரம் மற்றும் முழுமையான சத்தான உணவு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இதன் மூலம் மொத்தம் **39,91,313** நிகழ்வுகள் நடத்தப்பட்டு சத்துணவு மற்றும் சுகாதாரத் தகவல்கள் பொது மக்களை வெகுவாக சென்றடைந்துள்ளது.

## 4.22 தேசிய ஊட்டச்சத்து இயக்க ஊக்க விருதுகள்

1. திறன் மேம்பாடு **(ILA)**, ஒருங்கிணைத்தல், நடைமுறை மாற்றம் மற்றும் சமுதாய திரட்டலுக்காக தேசிய அளவில் தமிழ்நாடு முதல் மாநிலமாக தேர்வு செய்யப்பட்டு, விருதும், ₹ **1.00** கோடி ஊக்கத்தொகையும் பெற்றுள்ளது.

2. ஒட்டு மொத்த சிறப்பான செயல்பாட்டிற்காக தமிழ்நாடு முதன்மை விருதும், ₹**1.50** கோடி ஊக்கத்தொகையும் பெற்றுள்ளது.

3. பொதுவான மென்பொருள் செயல்பாட்டினை **(ICDS-CAS)** சிறப்பாக செயல்படுத்தியதற்காக தேசிய அளவில் தமிழ்நாட்டிற்கு இரண்டாம் விருதும், ஊக்கத்தொகையாக **₹50** இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

களப் பணியில் தலைமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்பில் சிறந்து விளங்கியமைக்காக நீலகிரி மாவட்டம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கிள்ளியூர் வட்டாரம் தேர்வு செய்யப்பட்டு முறையே மாவட்டம் மற்றும் வட்டாரத்திற்கான சான்றிதழ் மற்றும் பதக்கம் பெற்றுள்ளன.

சிறப்பான செயல்பாட்டிற்காக களப் பணியாளர்களுக்கான இரண்டு குழுக்களுக்கு விருதுகள் (அங்கன்வாடி பணியாளர், அங்கன்வாடி உதவியாளர், கிராம செவிலியர் மற்றும் மேற்பார்வையாளர் அடங்கிய குழு) இராமநாதபுரம் மாவட்டம் திருவாடனை வட்டாரத்திற்கும் மற்றும் விழுப்புரம் மாவட்டம் சின்னசேலம் வட்டாரத்திற்கும் தலா **₹2.50** இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மாநில அளவில் தேசிய ஊட்டச்சத்து இயக்கத்தினை சிறப்பாக செயல்படுத்திய **3** மாவட்டங்களுக்கும், **10** வட்டாரங்களுக்கும் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் **147** வட்டாரங்களில் சிறந்து விளங்கிய கள அணிகளுக்கு வெகுமதியாக தலா **₹50,000** ரொக்கப்பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 4.23 அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் மருந்து மற்றும் சுகாதாரப் பெட்டிகள் வழங்குதல்

- அங்கன்வாடி மையங்களுக்கு வரும் குழந்தைகளுக்கு ஏற்படும் காய்ச்சல், வயிற்றுபோக்கு, சிறு காயம், தோல் நோய்த் தொற்றுகள் போன்ற சிறு வியாதிகளுக்கு தீர்வு காணும் வகையில் முதல் உதவி வழங்கிடும் பொருட்டு அங்கன்வாடி மையங்களுக்கு மருந்துப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு பொது சுகாதாரத்துறையால் மருந்துகளைக் கையாள்வது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேல் சிகிச்சை தேவைப்படும் குழந்தைகள் அருகிலுள்ள ஆரம்ப சுகாதார மையத்திற்குப் பரிந்துரைக்கப்படுகின்றனர்.

- குழந்தைகளிடையே சுகாதாரமான பழக்க வழக்கங்களை ஊக்குவிப்பதற்காக அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் நகவெட்டி, சீப்புகள், சோப்புகள் மற்றும் கை துண்டுகள் அடங்கிய சுகாதார பெட்டி வழங்கப்படுகிறது.

**2020-2021-ஆம் ஆண்டில் இத்திட்டத்தை செயல்படுத்த ₹7.79 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 4.24 முன்பருவ குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்வி (ECCE)

முன்பருவ குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்வித் (ECCE) திட்டமானது, அங்கன்வாடி மையங்களை எழுச்சிமிகு முன்பருவக் குழந்தை வளர்ச்சி மையங்களாக மறு உருவாக்கம் செய்வதற்கு மகிழ்ச்சியான கற்றல் சூழ்நிலையை நான்கு மணி நேர அமர்வு கற்றல் மூலம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளின் வளர்ச்சி முன்னுரிமைகளான கவனிப்பு, ஆரம்ப கால தூண்டுதல் செயல்பாடுகள் மற்றும் மூன்று முதல் ஆறு வயது வரையுள்ள குழந்தைகளின் வயதுக்கேற்ற வளர்ச்சிகளை பூர்த்தி செய்யக்கூடிய திட்டமிட்ட முன்பருவக் கல்வி, செயல்பாடுகள் மூலம் பள்ளி செல்ல தயார்படுத்தும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

"*ஆடிப்பாடி விளையாடு பாப்பா*" என்னும் கருத்தியல் அடிப்படையிலான ஆண்டு பாடத்திட்டம் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தில் தேசிய முன்பருவ குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி கொள்கை, 2013-ன்படி தயாரிக்கப்பட்டு, மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டம் 11 மாதங்களுக்கு 11 கருப்பொருட்களில் செயல்பாடுகளை குழந்தைகளுக்கு வழங்கும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. பன்னிரெண்டாம் மாதம் திருப்புதல் பயிற்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. தேவையான கற்றல் மற்றும் கற்பித்தல் உபகரணங்களான, அங்கன்வாடி பணியாளர்களுக்கான

முன்பருவ குழந்தை பராமரிப்பு மற்றும் கல்விக்கான பாடத்திட்டப் புத்தகங்கள், குழந்தைகளுக்கான செயல்பாட்டு புத்தகங்கள், ஆய்வுத் தாள்கள், முன்பருவக் கல்வி நிறைவு சான்றிதழ்கள் மற்றும் முன்பருவக் கல்வி உபகரணங்கள் ஆகியவை அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

## 4.25 முன்பருவக் குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்வி தினம்

குழந்தைகளின் ஒட்டு மொத்த மற்றும் உகந்த வளர்ச்சியை பெற்றோர் அறிந்து கொள்வதற்கு ஏதுவாக, சமுதாய பங்கேற்புடன் ஒவ்வொரு மாதமும் 19ஆம் தேதியன்று அனைத்து அங்கன்வாடி மையங்களிலும் முன்பருவ குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி தினம் கொண்டாடப்படுகிறது.

முன்பருவக் குழந்தை பராமரிப்பு மற்றும் கல்விக் கொள்கையையும் அதன் கருத்துக்களையும் புரிந்து கொண்டு, குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கவனிப்பு மற்றும் முன்பருவக் கற்றலுக்கான வாய்ப்புகளை அங்கன்வாடி பணியாளர்கள் வழங்கிடும் வகையில், முன்பருவக் குழந்தை பராமரிப்பு மற்றும் கல்விக்கான பயிற்சி மூன்று கட்டங்களில் நடத்தப்பட்டு வருகிறது. இதன் மூன்றாம் கட்டப் பயிற்சி 42,680 அங்கன்வாடி பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 4.26 பள்ளி கல்வித் துறை ஒருங்கிணைப்புடன் எல்.கே.ஜி / யு.கே.ஜி வகுப்புகள் துவங்குதல்

பெற்றோர் தங்களது குழந்தைகளை அங்கன்வாடி மையங்களுக்கு அனுப்புவதை ஊக்குவிக்கும் பொருட்டு, அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அரசு நடுநிலைப் பள்ளி வளாகங்களில் இயங்கும் **2,381** அங்கன்வாடி மையங்களில் மாண்டிசோரி கல்வி முறையில் எல்.கே.ஜி / யு.கே.ஜி வகுப்புகள் முன்னோடித்திட்டமாக, பள்ளிக் கல்வித் துறையின் ஒருங்கிணைப்புடன் **2019-2020**ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டம், அரசு பள்ளிகளில் குழந்தைகளின் சேர்க்கையை அதிகரிக்கவும், அவர்களின் கற்றல் திறனை அதிகரிக்கவும், ஆங்கில மொழியில் வாசித்தல் மற்றும் எழுதும் திறனை வளர்க்கவும், சிறந்த ஆரம்ப நிலை கல்வியை அளிக்கவும் மற்றும் பெற்றோரின் நிதிச்சுமையை குறைக்கவும் உதவும்.

அரசு நடுநிலைப்பள்ளி வளாகங்களில் செயல்படும் அங்கன்வாடி மையங்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட இயக்குநரகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் செயல்படுகின்றன. முன்பருவக் கல்வி சம்பந்தமான நடவடிக்கைகள் பள்ளிக் கல்வித் துறையின் ஆசிரியர்கள் மூலமாக பள்ளித் தலைமை ஆசிரியர் மேற்பார்வையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பள்ளிக் கல்வித் துறையுடன் இணைந்து தமிழ், ஆங்கிலம், கணிதம் மற்றும் சமூக அறிவியலுக்கான புத்தகங்கள் தயாரிக்கப்பட்டு

அனைத்து எல்.கே.ஜி / யு.கே.ஜி குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இக்குழந்தைகளுக்கு நான்கு இணை சீருடைகளும் வழங்கப்பட்டுள்ளது.

### 4.27 17 மாவட்டங்களிலுள்ள அங்கன்வாடி மையங்களுக்கு வருகை புரியும் குழந்தைகளுக்கு விலையில்லா இரண்டு இணை வண்ண சீருடைகள் வழங்குதல்

பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை அங்கன்வாடி மையங்களுக்கு தவறாது அனுப்பிட ஊக்குவிக்கும் வகையிலும், அங்கன்வாடி மையங்களுக்கு குழந்தைகளின் வருகையை அதிகரிக்கும் பொருட்டும், அங்கன்வாடிக் குழந்தைகளுக்கு ₹262.50 மதிப்பிலான இரண்டு இணை வண்ண சீருடைகள் வழங்கும் திட்டம் சென்னை, வேலூர், தேனி, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், விழுப்புரம், பெரம்பலூர், அரியலூர், நாகப்பட்டினம், திருநெல்வேலி ஆகிய 10 மாவட்டங்களில் மாநில நிதியினைக் கொண்டு 2013ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மக்களிடையே இத்திட்டம் பெரும் வரவேற்பினை பெற்றதையடுத்து தருமபுரி, நாமக்கல், இராமநாதபுரம், சேலம், திருவண்ணாமலை, திருவாரூர் மற்றும் விருதுநகர் ஆகிய 7 மாவட்டங்களிலுள்ள அங்கன்வாடி மையங்களுக்கு வருகைபுரியும் 2,35,832 அங்கன்வாடிக் குழந்தைகள் பயன்பெறும் வகையில் 2019-2020 ஆம் ஆண்டு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. 17 மாவட்டங்களில் செயல்படும்

அங்கன்வாடி மையங்களுக்கு வருகைபுரியும் **6.11** இலட்சம் குழந்தைகளுக்கு **₹16.04** கோடி செலவில் விலையில்லா இரண்டு இணை வண்ண சீருடைகள் வழங்கப்பட்டு வருகிறது.

### 4.28 அங்கன்வாடி மையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

#### (அ) அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுதல்

**2016-**ஆம் ஆண்டு முதல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் பங்களிப்புடன் புதிய அங்கன்வாடி மைய கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. **2016-2020** வரையில் **4,303** புதிய அங்கன்வாடி மைய கட்டடங்கள் கட்டுவதற்கென அனுமதிக்கப்பட்டதில், **2,202** அங்கன்வாடி மையங்கள் புதியதாக கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

#### (ஆ) அங்கன்வாடி மையங்களில் குழந்தை நேய கழிப்பறை கட்டுதல்

அங்கன்வாடி மையங்களுக்கு வருகை புரியும் குழந்தைகளுக்கு கழிப்பறையைப் பயன்படுத்தும் பழக்கத்தினை ஏற்படுத்தும் பொருட்டு, அனைத்து மையங்களுக்கு படிப்படியாக குழந்தை நேய கழிப்பறை கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. **2019-2020** ஆம் ஆண்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையுடன் இணைந்து **₹1.53** கோடி

செலவில் **1,282** அங்கன்வாடி மையங்களில் கழிப்பறை கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**(இ) அங்கன்வாடி மையங்களின் தரத்தினை உயர்த்துதல்**

அரசு சொந்த கட்டடங்களில் செயல்பட்டுவரும் அங்கன்வாடி மையங்களின் தரத்தினை மேலும் உயர்த்திடும் பொருட்டு, மையம் ஒன்றிற்கு **₹2.00** இலட்சம் செலவில் தேவையின் அடிப்படையில் கல்நார் கூரையினை அகற்றி கான்கீரிட் தளம் அமைத்தல், மின் இணைப்பு வழங்குதல், மின் விசிறி மற்றும் குழல் விளக்கு பொருத்துதல், மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் சாய்வு தளம் அமைத்தல், குழந்தை நேய கழிப்பறை கட்டுதல் மற்றும் பழுதுபார்த்தல், மையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல் போன்ற பணிகளை **1,200** அங்கன்வாடி மையங்களில் மேற்கொள்ளும் பொருட்டு **2019-2020**-ஆம் நிதியாண்டில் **₹24.00** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

**(ஈ) அங்கன்வாடி மையங்களில் குடிநீர் வசதி ஏற்படுத்துதல்**

அனைத்து மையங்களும் குடிநீர் வசதியுடன் செயல்படுவதை உறுதி செய்யும் வகையில் **1,137** அங்கன்வாடி மையங்களில் தலா **₹10,000** செலவில் குடிநீர் வசதி ஏற்படுத்திட **2019-2020**-ஆம் நிதியாண்டில் **₹1.13** கோடி வழங்கப்பட்டுள்ளது.

### (உ) அங்கன்வாடி மையங்களில் எரிவாயு இணைப்பு ஏற்படுத்துதல்

அங்கன்வாடி மையங்களை நவீனமயமாக்குதலின் கீழ் ஒவ்வொரு மையத்திற்கும் எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்பு, பிரஷர் குக்கர் மற்றும் சமையல் மேடை அமைத்தல் ஆகிய பணிகள், சம்மந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மொத்தம் உள்ள **54,439** மையங்களில் **52,963** (அதாவது **97%**) மையங்கள் நவீனமயமாக்கப்பட்டுள்ளன.

### (ஊ) அங்கன்வாடி மையங்களுக்கு வருடாந்திர பராமரிப்பு தொகை

அரசு கட்டடங்களில் இயங்கி வரும் அங்கன்வாடி மையங்களில் உள்ள சிறிய வகையிலான பழுதுகளை நீக்குவதற்கும், சமையலுக்கு தேவையான பாத்திரங்கள் வாங்குவதற்கும் வருடாந்திர பராமரிப்பு நிதியாக மையம் ஒன்றிற்கு **₹3,000** என **40,744** மையங்களுக்கு **2019-2020**-ஆம் ஆண்டில் மொத்தம் **₹12.22** கோடி வழங்கப்பட்டுள்ளது.

### (எ) அங்கன்வாடி மையங்களுக்கு தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் தளவாட சாமான்கள் வழங்குதல்

**2019-2020**-ஆம் ஆண்டிற்கு அங்கன்வாடி மையங்களுக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் தளவாட சாமான்கள் வாங்கும் பொருட்டு **9,900**

முதன்மை மையங்களுக்கு தலா ₹10,000 எனவும், 988 குறு மையங்களுக்கு தலா ₹7,000 எனவும், மொத்தம் ₹10.59 கோடி அனுமதிக்கப்பட்டு, கொள்முதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### (ஏ) அங்கன்வாடி மையங்களில் காய்கறித் தோட்டங்கள் அமைத்தல்

அரியலூர், திண்டுக்கல், நீலகிரி, விழுப்புரம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, திருவள்ளூர், கன்னியாகுமரி, இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய 10 மாவட்டங்களில் செயல்பட்டு வரும் 655 அங்கன்வாடி மையங்களில் ₹17.68 இலட்சம் காய்கறித் தோட்டம் அமைத்திட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தோட்டத்தில் விளையும் காய்கறிகள் அன்றாட சமையலில் உபயோகிக்கப்படும். இதன் மூலம் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட பயனாளிகளிடையே (குழந்தைகள், வளரிளம் பெண்கள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள்) ஊட்டச்சத்துமிக்க காய்கறிகள் மற்றும் பழங்களை வீட்டு தோட்டத்தில் விளைவித்து பயன்பெற விழிப்புணர்வு ஏற்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 4.29 வளரிளம் பெண்களுக்கான திட்டம்

வளரிளம் பெண்களுக்கான திட்டம், ஊட்டச்சத்து மற்றும் ஊட்டச்சத்து அல்லாத கூறுகள் என இரு பிரிவுகளைக் கொண்டது. இத்திட்டத்தின் கீழ்

அங்கன்வாடி மையங்களில் பதிவு செய்துள்ள 11 முதல் 14 வயது வரையிலான பள்ளி செல்லா வளரிளம் பெண்களுக்கு நாள் ஒன்றுக்கு 165 கிராம் அளவு இணை உணவு வீட்டிற்கு எடுத்துச் செல்லும் வகையில் ஆண்டிற்கு 300 நாட்களுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு, மாநில அரசால் 50 சதவீத நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின், ஊட்டச்சத்து அல்லாத கூறு, 11 - 14 வயது பள்ளி செல்லா வளரிளம் பெண்கள் மீண்டும் பள்ளி செல்வதையும் திறன் வளர் பயிற்சி பெறுவதையும் ஊக்குவிக்கின்றது. மேலும், இரும்புச் சத்து, போலிக் அமில மாத்திரை வழங்குதல், உடல்நல பரிசோதனைகள் மற்றும் பரிந்துரைகள், ஊட்டச்சத்து மற்றும் உடல் நலக்கல்வி, வாழ்க்கைத் திறன் பயிற்சி மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுவதுடன் வங்கி, அஞ்சல் நிலையம், காவல் நிலையம் ஆகிய சேவைகளைப் பயன்படுத்த அறிமுகப் பயிற்சிகளும் வழங்கப்படுகிறது.

**வளரிளம் (ஊட்டச்சத்து அல்லாத கூறு) பெண்களுக்கான திட்டத்தின் சேவைகளுக்கென 2020-2021 ஆம் ஆண்டில் ₹1.24 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 4.30 தேசிய குழந்தைகள் காப்பகத் திட்டம்

சமுதாயத்தில் பணிக்குச் செல்லும் தாய்மார்களின் 6 மாதம் முதல் 6 வயது வரையிலான குழந்தைகளை மிகவும் பாதுகாப்பான இடத்தில் பராமரிப்பதிலும்,

பணிபுரியும் பெண்கள் தொடர்ந்து பணிக்கு செல்வதை ஊக்குவிப்பதிலும், தேசிய குழந்தைகள் காப்பகத் திட்டம், முக்கிய பங்கு வகிக்கிறது. தற்போது தேசிய குழந்தைகள் காப்பகத் திட்டத்தின் கீழ் **598** காப்பகங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

மத்திய அரசின் வழிகாட்டுதல்களின்படி, **2019-2020** ஆம் ஆண்டுக்கு **598** காப்பகங்களுக்கான மானியமாக **₹5.50** கோடி **60:30:10** என்ற நிதி பகிர்வின் அடிப்படையில் **(60%** மத்திய அரசு : **30%** மாநில அரசு : **10%** தொண்டு நிறுவனம்) நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

## 4.31 பயிற்சி

தமிழ்நாட்டில் குறிப்பிடத்தக்க வகையில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் திறன் வாய்ந்த மூன்றடுக்கு பயிற்சி முறை அனைத்து நிலை களப்பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. திறன்மிக்க, செலவு குறைவான, பரவலாக்கப்பட்ட தமிழ்நாட்டுப் பயிற்சி முறை பலதரப்பினராலும் சிறப்பாக பாராட்டப்படுகிறது.

குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் பயிற்சியை நடத்தும் பயிற்றுநர்களுக்கான பணிப் பயிற்சி சென்னையில் உள்ள மாநில பயிற்சி மையத்திலும், மேற்பார்வையாளர்களுக்கான பணிப் பயிற்சி

சென்னையில் உள்ள இடைநிலை பயிற்சி மையத்திலும் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாட்டில் பரவலாக்கப்பட்ட பயிற்சி முறையின்படி, அங்கன்வாடிப் பணியாளர்களுக்கான பணிப் பயிற்சி மற்றும் அங்கன்வாடி உதவியாளர்களுக்கான புத்தறிவுப் பயிற்சி மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் இணையாக நடத்தப்பட்டு வருகிறது.

களப்பணியாளர்களுக்கான பச்சிளம் மற்றும் இளம் குழந்தைகளுக்கு உணவூட்டும் பயிற்சி (IYCF) மூலம், சீம்பால் மற்றும் தாய்ப்பால் ஊட்டுதல், ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு உணவூட்டுதல் மற்றும் தாய்-சேய் நல அட்டை குறித்த விழிப்புணர்வு அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டில் 275 மேற்பார்வையாளர்கள், 490 அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் 900 அங்கன்வாடி உதவியாளர்களுக்கு பணிப்பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

களப் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்திட நான்கு பயிற்றுநர்கள் மற்றும் மூன்று துணை நிலை பணியாளர்களைக் கொண்ட மாநில பயிற்சி மையம் இயங்கி வருகிறது.

மேலும், அரசால் நடத்தப்படும் பயிற்சி நிறுவனங்களான அண்ணா மேலாண்மை நிறுவனம் மற்றும் நடேசன் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிறுவனம் மூலமாகவும் களப்பணியாளர்களுக்கு

தேவைக்கேற்ப அவ்வப்போது பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

பொது ஒத்துழைப்பு மற்றும் குழந்தை வளர்ச்சிக்கான தேசிய நிறுவனத்துடன் (NIPCCD) ஒருங்கிணைந்து, குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்களுக்காக நடத்தப்படும் இணையதள பணிப்பயிற்சியினை அமுல்படுத்துவதில் இந்தியாவில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது. 133 குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள் இப்பயிற்சியினை வெற்றிகரமாக முடித்துள்ளனர்.

**2020-2021 ஆம் ஆண்டில் இப்பயிற்சிகள் நடத்துவதற்கென ₹8.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 4.32 தகவல், கல்வி மற்றும் தொடர்பு

தகவல் கல்வி மற்றும் தொடர்பானது, சமூகத்தில் குறிப்பிட்ட காலத்திற்குள், குறிப்பிட்ட பகுதிகளில் ஏற்கனவே இருக்கக்கூடிய நல்ல பழக்க வழக்கங்களை வலுப்படுத்துவதற்கும் அல்லது விரும்பத்தக்க மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கும் முக்கிய பங்காற்றுகிறது. சாதகமான மாற்றத்தினை உருவாக்குவதற்கு திறம்பட செயல்படுத்தும் வகையில் திட்டங்கள் வகுக்கப்பட்டு தகவல், கல்வி மற்றும் தொடர்பு முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தகவல், கல்வி மற்றும் தொடர்பின் நோக்கமானது குறிப்பிட்ட, அதிக பாதிப்புக்குள்ளாகக்கூடிய

மக்களிடையே இத்தகைய மாற்றங்களை ஊக்குவிப்பதற்கும், உறுதுணையாக இருப்பதற்கும் தகுந்த வகையில் அமைக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகளில் தகவல், கல்வி மற்றும் தொடர்பின் கூறுகளான அணுகுமுறைகள், செயல்பாடுகள் மற்றும் விளைவுகள் திறம்பட பயன்படுத்தப்படுகின்றன. இதன் மூலமாக சமூக ஊடகங்கள் முதல் தனி நபர் தொடர்பு வரை, தாய் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து குறித்து தொடர்புடைய செய்திகளை பொதுமக்களிடையே, சாதகமான நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தவும், பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய நிலையில் இருப்பவர்களுக்கு உதவவும், தேவையான தகவல்கள் வழங்கப்படுகின்றன. தகவல் தொடர்பு திறன்களை பயிற்றுவிப்பதற்கும், ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கும், பழக்க வழக்கங்களை மதிப்பீடு செய்வதற்கும், தேவையான தகவல்களை தீர்மானித்திடும் வகையில் பல நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன.

தகவல், கல்வி மற்றும் தொடர்பு முறையில், ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியம் தொடர்பான, எளிதில் நினைவில் வைத்துக் கொள்ளக்கூடிய, பயனுள்ள கல்வி உதவி சாதனங்கள் மற்றும் தகவல்கள் மக்களின் ஆர்வத்தைத் தூண்டுவதற்கு பயனுள்ளதாக அமைகிறது.

அச்சிடப்பட்ட பிரசுரங்கள், சுவரொட்டிகள், காலண்டர்கள், விளம்பரங்கள், சுவர் ஓவியங்கள்,

தொகுப்புத் தாள்கள் **(Flip Chart)** மற்றும் அஞ்சல் அட்டைகள் போன்ற கல்வி உதவி சாதனங்கள் வெற்றிகரமான முறையில் தயாரிக்கப்பட்டு களப்பணியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த, காட்சி ஊடகங்கள், சமூக ஊடகங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. இவை சிறப்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திட பயன்படுத்தப்படுகின்றன. அனைத்து பகுதிகளிலும் உரிய தகவல்கள் சென்றடைந்திட ஒரு விரிவான தளத்தை ஏற்படுத்தும் வகையில் கலைப் பண்பாட்டு முறை, கண்காட்சிகள், கருத்தரங்கங்கள், விளம்பரங்கள் மற்றும் ஒளி உமிழ் விளம்பரப் பலகைகள் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன.

தகவல்கள் மக்களிடையே சென்றடைந்திட பேரணிகள், நடைப் பயணங்கள், இசை நிகழ்ச்சிகள், நாடக நிகழ்ச்சிகள் போன்ற சமூக விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. மேலும், தாய்ப்பால் வார விழா, ஊட்டச்சத்து மாதம் (ராஷ்ட்ரிய போஷான் மா) போன்ற தருணங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நிகழ்ச்சிகள் அனுசரிக்கப்படுகின்றன.

திட்டத்தின் மாண்புகளைப் பிரதிபலிக்கும் வகையில் இரு மாதங்களுக்கு ஒரு முறை வெளியிடப்படும் ***‘சிட்டுக்குருவி சேதி தெரியுமா?’*** என்ற செய்திஇதழ் பணிச்சூழலின் தன்மையை வலுப்படுத்துவதற்கான வாய்ப்பினை வழங்குவதோடு, போற்றத்தக்க நடைமுறைகள் மற்றும் அனுபவங்களைப்

பகிர்ந்து கொள்வதற்கும், பணியாளர்களையும், இலக்கு மக்களையும் இணைப்பதற்கும் ஒரு சிறப்பான தளமாக செயல்படுகிறது.

## 4.33 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணியில் ஆதார் பதிவுத் திட்டம்

மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, தகவல் தொழில்நுட்பத் துறையின் ஒருங்கிணைப்புடன் 0-5+ வயது குழந்தைகளுக்கு ஆதார் பதிவு மேற்கொள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் இயக்குநர், இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் (UIDAI) கீழ் ஆதார் சேர்க்கை பதிவாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். ஆதார் பதிவுப் பணி, இந்திய தனித்துவ அடையாள ஆணையத்துடன் (UIDAI) இணைந்து, ஆதார் பதிவு குறித்த நிகழ்நிலை தேர்வில் தேர்ச்சி பெற்ற குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் மூலம் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது இந்திய தனித்துவ அடையாள ஆணைய (UIDAI) அதிகாரிகள் மூலம் ஆதார் பதிவு பயன்பாடு குறித்த பயிற்சி பெற்ற 2,175 ஆதார் பதிவு முகவர்கள் களத்தில் உள்ளனர். இவர்கள் மூலம் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கான ஆதார் பதிவுப் பணி மாநிலம் முழுவதும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 4.34 நிலைத்த வளர்ச்சிக் குறிக்கோள்கள் (SDG)

நிலைத்த வளர்ச்சிக்கான குறியீடு எண் 1 மற்றும் 2 ஆகியவற்றைக் கையாளும் துறைகளுள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் துறையும் ஒன்றாக செயல்பட்டு வருகிறது.

**குறியீடு எண் 1:** அனைத்து வகையிலான வறுமையையும் அனைத்து நிலைகளிலும் முடிவுக்கு கொண்டு வருவது.

**குறியீடு எண் 2:** பட்டினியை ஒழித்து நிலைத்த வளர்ச்சிக்கான உணவுப் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட ஊட்டச்சத்தினை அடைவது.

அனைத்து வகையிலான ஊட்டச்சத்துக் குறைபாட்டினைக் களைந்து, 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கிடையே, ஊட்டச்சத்துக் குறைபாட்டின் விளைவுகளான குள்ளத்தன்மை (stunting) போன்ற குறைகளை சீர் செய்ய இத்துறை பாடுபட்டு வருகிறது. மேலும் வளரிளம் பெண்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 15-49 வயதிலான பெண்களின் ஊட்டச்சத்து தேவைகளைப் பூர்த்தி செய்ய செயல்பட்டு வருகிறது.

## 4.35 கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட செயல்பாடுகளைக் கண்காணித்திடவும், மறுசீராய்வு செய்திடவும் பல்வேறு நிலைகளில் கண்காணிப்புக்

குழுக்கள் அரசால் வடிவமைக்கப்பட்டுள்ளன. அவை, மாநில அளவிலான கண்காணிப்பு மற்றும் மறுசீராய்வு குழு, மாவட்ட அளவிலான கண்காணிப்பு மற்றும் மறுசீராய்வு குழு, வட்டார அளவிலான கண்காணிப்புக் குழு, அங்கன்வாடி அளவிலான கண்காணிப்பு மற்றும் உதவி குழு ஆகும். மாநில அளவிலான கண்காணிப்பு மற்றும் மறுசீராய்வு குழுவின் தலைவராக தலைமைச் செயலாளரும், மாவட்ட அளவிலான கண்காணிப்பு மற்றும் மறுசீராய்வு குழுவின் தலைவராக அந்தந்த மாவட்ட ஆட்சியரும், வட்டார அளவிலான கண்காணிப்புக் குழுவின் தலைவராக சார் ஆட்சியர்/வருவாய் கோட்டாட்சியரும், அங்கன்வாடி அளவிலான கண்காணிப்பு மற்றும் உதவி குழுவின் தலைவராக குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்/மேற்பார்வையாளர் நிலை-1 ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர் அரசால் நிர்ணயிக்கப்பட்ட கால இடைவெளியில் இக்குழுக்கள் கூடி செயல்படும்.

## 4.36 அங்கன்வாடி மையங்களுக்கு சர்வதேச தர நிர்ணயச் சான்றிதழ் வழங்குதல் (ISO)

அங்கன்வாடி மையங்களுக்கு சர்வதேச தர நிர்ணயச் சான்றிதழ் வழங்கும் திட்டத்தின் கீழ் தற்போதுள்ள அங்கன்வாடி மையங்கள் உள் மற்றும் வெளித் தோற்றம் ஆகிய இரண்டிலும் குழந்தை நேயமாகவும், கல்வித் திறனுடையதாகவும் மறு வடிவமைக்கப்பட்டுள்ளது. 2017-2018 ஆம் ஆண்டில் ஒரு மாவட்டத்தில் நான்கு அங்கன்வாடி மையங்கள் வீதம் 32 மாவட்டங்களில் மொத்தம் 128 அங்கன்வாடி

மையங்களுக்கு ₹32.80 இலட்சம் செலவில் சர்வதேச தர நிர்ணயச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டமானது அரசு மற்றும் தொண்டு நிறுவனங்கள் இணைந்து, அங்கன்வாடி மையங்களில் தரமான ஊட்டச்சத்து மற்றும் சுகாதார சேவைகளை உறுதி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட தனிப்பட்ட முயற்சியாகும்.

## 4.37 அங்கன்வாடி ஊழியர்களின் நலன்

7-வது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி, தமிழகத்தில் உள்ள 54,439 அங்கன்வாடி மைய ஊழியர்களுக்கு சிறப்புக் காலமுறை ஊதியம் கீழ்க்காணும் வகையில் வழங்கப்படுகின்றது:-

| | | |
|---|---|---|
| 1 | அங்கன்வாடிப் பணியாளர் | ₹7,700-24,200 |
| 2 | அங்கன்வாடி உதவியாளர் | ₹4,100-12,500 |
| 3 | குறு அங்கன்வாடிப் பணியாளர் | ₹5,700-18,000 |

அங்கன்வாடி ஊழியர்களுக்கு அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, மருத்துவப்படி, மலைவாழ்படி, குளிர்காலப்படி மற்றும் ஆண்டு ஊதிய உயர்வும் வழங்கப்படுகிறது.

01.10.2017 முதல் அங்கன்வாடி ஊழியர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது, அங்கன்வாடி பணியாளருக்கு ₹1,00,000/-மும், அங்கன்வாடி உதவியாளருக்கு ₹50,000/-மும் ஒட்டுமொத்த தொகையாக வழங்கப்படுகிறது.

அங்கன்வாடிப் பணியாளர், குறு அங்கன்வாடிப் பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளருக்கு **01.10.2017** முதல் மாத சிறப்பு ஓய்வூதியமாக **₹2,000/-** வழங்கப்படுகிறது.

ஒவ்வோர் ஆண்டும் அங்கன்வாடி ஊழியர்களுக்கு இரண்டு சீருடைப் புடவைகள் **₹8.32** கோடி செலவில் வழங்கப்படுகிறது.

மே-**2018** முதல் அங்கன்வாடி பணியாளர்களுக்கு கீழ்க்காணும் வகையில் கோடைகால விடுமுறை அளிக்கப்படுகிறது:-

| | |
|---|---|
| அங்கன்வாடிப் பணியாளர் | மே மாதம் **2**வது வாரம் |
| அங்கன்வாடி உதவியாளர் | மே மாதம் **3**வது வாரம் |
| குறுஅங்கன்வாடிப் பணியாளர் | மே மாதம் **4**வது வாரம் |

மாற்றுத் திறனாளி அங்கன்வாடி ஊழியர்களுக்கு போக்குவரத்துப்படியாக மாதம்தோறும் **₹2,500/-** வழங்கப்படுகிறது.

பணியிலிருக்கும் போது காலமாகும் அங்கன்வாடி ஊழியர்களுக்கு குடும்ப பாதுகாப்பு நிதியாக **₹3** இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

**2015**-ஆம் ஆண்டு முதல் அங்கன்வாடி ஊழியர்களுக்கு சிறப்பு வருங்கால வைப்பு நிதி கணக்கு துவங்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது.

மருத்துவ காரணங்களின் அடிப்படையில் ஓய்வூதியப் பணப்பலன்களுடன் தன்விருப்ப ஓய்வு திட்டம் அங்கன்வாடி ஊழியர்களுக்கு அனுமதிக்கப்படுகிறது.

**2** ஆண்டுகள் பணிமுடித்த **42** வயதிற்குட்பட்ட அங்கன்வாடிப் பணியாளர்கள் கிராம சுகாதார செவிலியர் பயிற்சிக்கும் அதன் பின்னரான பணிநியமனத்துக்கும் தகுதியானவர்கள்.

### 4.38 அங்கன்வாடி ஊழியர்களுக்கான பல்வேறு காப்பீட்டுத் திட்டங்கள்

**1. பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீம யோஜனா**

**18** வயது முதல் **59** வயது வரையிலான அங்கன்வாடி ஊழியர்களுக்கு விபத்து மற்றும் இறப்பு போன்ற காரணங்களுக்கு **₹2.00** இலட்சம் காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது.

**2. பிரதான் மந்திரி சுரக்ஷா பீம யோஜனா**

**18** வயது முதல் **59** வயது வரையிலான அங்கன்வாடி ஊழியர்களுக்கு இறப்பு மற்றும் நிரந்தர ஊனம் ஏற்படின் **₹2.00** இலட்சமும், நிரந்தர பகுதி ஊனத்திற்கு **₹1.00** இலட்சமும் காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது.

### 3. அங்கன்வாடி காரியகர்த்தி பீம யோஜனா

**51** வயது முதல் **59** வயது வரையிலான அங்கன்வாடி ஊழியர்களுக்கு விபத்து மற்றும் இறப்பு போன்ற காரணங்களுக்கு **₹30,000/-** காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது.

## 4.39 முடிவுரை

தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்திற்கென செய்யப்படும் முதலீடு நிரந்தரமான, மாற்றிட இயலாத பலன்களைக் கொடுக்கும். இது தனிமனித மாற்றங்களை ஏற்படுத்தி, வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தின் மூலம் ஒரு செழுமையான தேசத்தை உருவாக்கும். ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் துறை, மறுக்கப்பட்ட மக்களுக்கு அடிப்படை தேவைகளான ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்தினை உத்தரவாதமாக வழங்குவதை முதற்குறிக்கோளாக கொண்டுள்ளது. இத்திட்டத்தின் சேவைகள் அக்கறை, பொறுப்பு மற்றும் அர்ப்பணிப்புடன் கூடிய செயல்முறைகள் மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கிய சமுதாயத்திற்கு வழங்கப்பட்டு, சமூகத் தடைகளைக் கடந்திட உதவுகிறது.

சரியான விதைகளை விதைப்பதன் மூலம் ஒவ்வொரு குழந்தையும் சிறப்பானதொரு வாழ்க்கையை துவக்குவது, முழுமையான ஊட்டச்சத்துடன் கூடிய தனிமனிதனை உருவாக்குவது ஆகியவற்றின் மூலம் உலகளாவிய ஊட்டச்சத்துக் குறைபாடு நெருக்கடிகளை எதிர்த்து அரசின்

கொள்கையான ***"ஊட்டச்சத்துக் குறைபாடில்லா தமிழ்நாடு"*** என்ற இலக்கினை ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பணிகள் அடைய உறுதி கொண்டுள்ளது.

> *'ஆரம்ப கால குழந்தைப் பருவ*
> *ஊட்டச்சத்தில் முதலீடு செய்வது*
> *வியக்கக்தக்க அளவிற்கு*
> *அதிக பலனைத் தரக்கூடிய உறுதியான*
> *உத்தியாகும்'*- **அன்னே எம்.முல்காஹி**

*******

## அத்தியாயம் - 5

# சமூகப் பாதுகாப்பு

**5.1** சமூகப் பாதுகாப்புத் துறை, பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் மற்றும் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் இருவகையான மிகவும் பாதிப்பிற்குள்ளாகக்கூடிய குழந்தைகளுக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இக்குழந்தைகளை தோழமையுடன் அணுகி, அவர்களுக்கு முறையான பராமரிப்பு, பாதுகாப்பு, மேம்பாடு, சமூக ஒருங்கிணைப்பு ஆகிய சேவைகளை அளித்து, அவர்களின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

இடர்பாடான சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக **1887**-ஆம் ஆண்டிலேயே சிறுவர் சீர்த்திருத்தப் பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளன. மேலும், குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்காகவும், அதற்கான நிறுவனங்களின் செயல்பாட்டிற்காகவும், **1920**-ஆம் ஆண்டில், "மெட்ராஸ் குழந்தைகள் சட்டம்" இயற்றப்பட்டது. தற்போது, இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், **2015** நடைமுறையில் உள்ளது.

**1947**-ஆம் ஆண்டில் இத்துறை சிறைத் துறையிலிருந்து பிரிக்கப்பட்டு "முதன்மை ஆய்வாளர்" ஒருவரை தலைவராகக் கொண்டு "சான்றளிக்கப்பட்ட

பள்ளிகள் மற்றும் விழிப்புப்பணித் துறை" என்ற பெயரில் செயல்படத் துவங்கியது.

அதன் பின்னர் இத்துறையின் பெயர் கீழ்க்காணுமாறு அவ்வப்போது பெயர் மாற்றம் செய்யப்பட்டது:-

**1975-** நல்வழிப்படுத்தும் நிர்வாகத் துறை

**1981-** சீர்த்திருத்தப் பள்ளிகள் மற்றும் விழிப்புப்பணித் துறை


**1990-** சமூகப் பாதுகாப்புத் துறை

பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் குழந்தைகளுக்கு நிறுவன பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு வழங்குவதற்கான நோக்கங்களை பூர்த்தி செய்ய சமூகப் பாதுகாப்புத் துறை உறுதி பூண்டுள்ளது. அதே போன்று அச்சுறுத்தலுக்கு உள்ளான பெண்களின் நல்வாழ்விற்காக உரிய பாதுகாப்பும் இத்துறையால் வழங்கப்படுகிறது.

இத்துறை, இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 மற்றும் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956 ஆகிய இரு முக்கிய சட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. இச்சட்டங்களில் வகுக்கப்பட்டுள்ள விதிகளின்படி பல்வேறு நிறுவனங்களான குழந்தைகள் இல்லங்கள், கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள், பாதுகாப்பு இடம் (Place of Safety), பிற்காப்பு நிறுவனங்கள்

மற்றும் மகளிர் காப்பகங்கள் / பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றை இத்துறை நடத்துவதுடன் கண்காணித்தும் வருகிறது.

**சமூகப் பாதுகாப்புத் துறையின் நிர்வாக அமைப்பு முறை**



## 5.2 இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015.

குழந்தைகளின் அதிகபட்ச நலனை கருத்தில் கொண்டு குழந்தை நேய அணுகுமுறையை கடைபிடித்து இடர்பாடான சூழ்நிலையில் உள்ள குழந்தைகளின் முறையான பராமரிப்பு, பாதுகாப்பு, மேம்பாடு, பிரச்சனைகளுக்கான தீர்வு மற்றும் சமூகத்துடன் ஒருங்கிணைத்தல் ஆகியவற்றை உறுதி செய்வதை நோக்கமாக இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 கொண்டுள்ளது. இச்சட்டம் "பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள்" மற்றும்

"சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் / செயல்படும் குழந்தைகள்" ஆகியோரைக் கையாளுவது குறித்து சட்ட ரீதியான வழிமுறைகளை வழங்கியுள்ளது. தமிழக அரசானது குழந்தைகளுக்கான நிறுவனங்களை நிர்வகிப்பதற்கும், இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015-ல் உள்ள சரத்துகளை அமல்படுத்துவதற்கும், தமிழ்நாடு இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) விதிகள், 2017-ஐ உருவாக்கியுள்ளது.

**இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம்2015ன் கீழ் உள்ள நிறுவனங்களின் விவரம் பின்வருமாறு:-**

| வ. எண் | நிறுவனங்கள் | நிறுவனங்கள் எண்ணிக்கை | பயனாளிகள் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | சிறுவர்கள் | சிறுமியர்கள் | மொத்தம் |
| 1. | குழந்தைகள் இல்லங்கள் | 1,138 | 22,880 | 26,165 | 49,045 |
| 2. | கூர்நோக்கு இல்லங்கள் | 09 | 239 | 03 | 242 |
| 3. | சிறப்பு இல்லங்கள் | 02 | 45 | - | 45 |
| 4. | பாதுகாப்பு இடம் | 01 | 18 | - | 18 |
| 5. | திறந்தவெளி புகலிடங்கள் | 11 | 82 | 49 | 131 |
| 6. | சிறப்பு தத்துவள மையங்கள் | 21 | 125 | 154 | 279 |
| மொத்தம் | | 1,182 | 23,389 | 26,371 | 49,760 |

## 5.3 பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள்

இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015-ன் பிரிவு 2(14)-ன்படி, வீடு அல்லது தங்குமிடம் இல்லாமல் காணப்படும்

குழந்தைகள் / வாழ்வாதாரம் இல்லாத குழந்தைகள் / குழந்தை தொழிலாளர் சட்டத்திற்கு முரண்பாடாக வேலை செய்யும் குழந்தைகள் / மனநலம் பாதிக்கப்பட்ட குழந்தைகள் / மாற்றுத் திறனாளி குழந்தைகள் / பெற்றோர் அல்லது பாதுகாவலர் தகுதியற்றவர் அல்லது இயலாதவர் எனக் கண்டறியப்பட்டவர்களின் குழந்தைகள் / தெருவோர குழந்தைகள் / திருமண வயதை அடையாத நிலையில் திருமணத்திற்கு உட்படுத்தப்படும் வகையில் உடனடி ஆபத்தில் உள்ளவர் / பெற்றோர் இல்லாது பராமரிக்க எவரும் தயாராக இல்லாதவர்கள் / பாலியல் ரீதியாக பாதிப்பிற்குள்ளான குழந்தைகள் / பெற்றோரால் கைவிடப்பட்ட குழந்தைகள், காணாமல் போன அல்லது வீட்டை வீட்டு வெளியேறிய குழந்தைகள் மற்றும் உரிய விசாரணைக்கு பின்னர் பெற்றோர்களை கண்டறிய இயலாத குழந்தைகள் ஆகியோர் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் ஆவார்கள்.

## 5.4 குழந்தை நலக் குழுக்கள்

குழந்தை நலக் குழுக்கள் என்பவை பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கு பராமரிப்பு, பாதுகாப்பு, மேம்பாடு மற்றும் மறுவாழ்வு, அவர்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் உரிமைகள் ஆகியவற்றை வழங்கவும், மேலும் இக்குழந்தைகளின் வழக்குகளைத் தீர்வு செய்யவும் உதவுகின்றன. தமிழகத்தில் குழந்தை நலக் குழுக்கள் **32** மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு குழந்தை நலக் குழுவும், ஒரு தலைவர் மற்றும் 4 உறுப்பினர்களை (குறைந்தபட்சம் ஒரு பெண் உறுப்பினர் உட்பட) கொண்டு செயல்பட்டு வருகிறது. 1973-ஆம் ஆண்டின் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி, பெருநகர நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதித்துறை நடுவருக்கு உள்ள அதிகாரம் இக்குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் திறம்பட செயல்படுவதை உறுதி செய்யத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளும், பிற உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

**2020-2021-ஆம் நிதியாண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹6.64 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.5 குழந்தைகள் இல்லங்கள்

குழந்தை நலக் குழுக்கள் வழியாக இளைஞர் நீதி அமைப்பின் கீழ்வரும் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளை மேற்படி இல்லங்களில் அனுமதித்து அவர்களுக்கு பாதுகாப்பு, நீண்ட கால பராமரிப்பு, பிரச்சனைகளுக்கான தீர்வு, கல்வி, பயிற்சி, மேம்பாடு மற்றும் மறுவாழ்வு வழங்கப் படுகிறது. தமிழ்நாட்டில் சமூக பாதுகாப்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015-ல் வகுக்கப்பட்டவாறு 1,138 குழந்தைகள் இல்லங்கள் பதிவு செய்யப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 36 குழந்தைகள்

இல்லங்கள் அரசாலும், **152** குழந்தைகள் இல்லங்கள் அரசின் நிதி உதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களாலும், இதர குழந்தைகள் இல்லங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் சொந்த நிதியிலும் செயல்பட்டு வருகின்றன. ஒரு குழந்தைக்கு மாதம் **₹2,160/-** வீதம் பராமரிப்பு மானியமாக அரசு உதவி பெறும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றது.

**குழந்தைகள் இல்லங்கள் மற்றும் பயனாளிகள் விவரம் பின்வருமாறு:-**

| வ. எண் | நிறுவனங்கள் | நிறுவனங்கள் எண்ணிக்கை | பயனாளிகள் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | சிறுவர்கள் | சிறுமியர்கள் | மொத்தம் |
| 1. | அரசால் நடத்தப்படும் குழந்தைகள் இல்லங்கள் | 36 | 523 | 1,156 | 1,679 |
| 2. | இந்து சமய மற்றும் அறநிலையத் துறையால் நடத்தப்படும் குழந்தைகள் இல்லங்கள் | 17 | 99 | 131 | 230 |
| 3. | அரசு நிதி உதவியுடன் இயங்கும் தன்னார்வத் தொண்டு நிறுவன குழந்தைகள் இல்லங்கள் | 152 | 5,623 | 6,035 | 11,658 |
| மொத்தம் | | 1,138 | 22,880 | 26,165 | 49,045 |

**2020-2021-ஆம் நிதியாண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹115.53 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.6 திறந்தவெளிப் புகலிடங்கள் (Open Shelters)

நகர்ப்புறங்களில் புறக்கணிக்கப்பட்ட குழந்தைகளுக்கு பகல் நேர பராமரிப்பு சேவைகளும், சில குழந்தைகளுக்கு தற்காலிமாக நிறுவன பராமரிப்பும் ஒரு சில காரணங்களால் தேவைப்படுகின்றன. தமிழ்நாட்டில், நகர்ப்புறம் மற்றும் புறநகர் பகுதிகளில் 11 திறந்தவெளிப் புகலிடங்கள் உள்ளன. அவை தற்காலிகமாக உதவி தேவைப்படும் குழந்தைகளுக்கு பகல் மற்றும் இரவு நேரங்களில் தங்குமிட வசதிகளை வழங்குகின்றன. மேலும், இதன் மூலம் அக்குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நகர்ப்புறங்களில் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் என்ற பிரிவின் கீழ் வரும் குழந்தைகள், குறிப்பாக வீடற்றவர்கள், சாலையோர மற்றும் உழைக்கும் சிறார்கள், குப்பை சேகரிப்பவர்கள், சிறு விற்பனையாளர்கள், சாலையில் வித்தை செய்வர்கள், ஆதரவற்றோர், கைவிடப்பட்டவர்கள், கடத்தப் பட்டவர்கள், வீட்டைவிட்டு வெளியேறிய குழந்தைகள், இடம்பெயர்ந்த பெற்றோரின் குழந்தைகள் மற்றும் பிற பாதிக்கக்கூடிய சூழ்நிலையிலுள்ள குழந்தைகளின் அனைத்து தேவைகளையும் திறந்தவெளிப் புகலிடங்கள் பூர்த்தி செய்கின்றன. திறந்தவெளிப் புகலிடங்கள் நடத்தும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு ஒரு குழந்தைக்கு மாதம் ஒன்றிற்கு பராமரிப்பு மானியமாக ₹2,160/- அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

**திறந்தவெளி புகலிடங்கள் மற்றும் பயனாளிகள் விவரம் பின்வருமாறு:-**

| வ. எண் | மாவட்டம் | நிறுவனங்கள் எண்ணிக்கை | பயனாளிகள் |
|---|---|---|---|
| 1. | சென்னை | 7 | 97 |
| 2. | திருநெல்வேலி | 1 | 25 |
| 3. | திருச்சிராப்பள்ளி | 1 | 11 |
| 4. | சேலம் | 1 | 25 |
| 5. | கோயம்புத்தூர் | 1 | 25 |
| மொத்தம் | | 11 | 183 |

**2020-2021-ஆம் நிதியாண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹2.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.7 அரசால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு முயற்சிகள்

### 5.7.1 மாநில அளவிலான வருடாந்திர விளையாட்டு போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல்

**2019-2020**ஆம் ஆண்டில், சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கும் **36** அரசு இல்லங்களில் உள்ள குழந்தைகள் மற்றும் அரசின் மானியம் பெறும் **152** தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் உள்ள குழந்தைகளுக்கு மாநில அளவிலான விளையாட்டு போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளை

நடத்துவதற்காக **₹25.00** இலட்சம் நிதி அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. மண்டல அளவிலான விளையாட்டு போட்டிகள் **2020**ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நடத்தப்பட்டது. இவ்விளையாட்டு போட்டிகளில் **3,667** குழந்தைகள் கலந்து கொண்டனர். மண்டல அளவில் முதல் மற்றும் இரண்டாவது இடத்தைப் பெற்றவர்களுக்கு, மாநில அளவிலான விளையாட்டு போட்டிகள், ஜனவரி **27** மற்றும் **28** ஆகிய தினங்களில், சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் நடத்தப்பட்டது. இதில் **300** குழந்தைகள் பங்கேற்று தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர்.

## 5.7.2 குழந்தைகளுக்கான கல்வி சுற்றுலாத் திட்டம்

அரசு குழந்தைகள் இல்லங்களில் உள்ள குழந்தைகள் வெளியுலக அனுபவத்தை பெற சுற்றுலாத் திட்டம் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு வருகின்றது. **2019-2020**-ஆம் ஆண்டில் சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கும் **36** அரசு குழந்தைகள் இல்ல குழந்தைகளுக்கு, இத்திட்டத்திற்கென **₹10.00** இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 5.7.3 குழந்தை தகவல் அமைப்பு

இளைஞர் நீதி அமைப்பின் கீழ் குழந்தைகளுக்கு வழங்கப்படும் சேவைகளை திறம்பட கண்காணிப்பதற்காகவும் மற்றும் குழந்தைகளின் மொத்த தகவலை ஆவணப்படுத்தவும்

**₹65.00** இலட்சம் செலவில் ‘‘குழந்தை தகவல் அமைப்பு’’ என்ற பெயரில் ஒரு புதிய இணைய முகப்பு **(Portal)** உருவாக்க அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த இணைய முகமை **(Portal)** உருவாக்கும் பணி தமிழ்நாடு மின் ஆளுமை முகமையிடம் ஒப்படைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த இணைய முகப்பு **(Portal)** மூலம் செயல்பாட்டாளர்கள் அனைவரும் குழந்தைகளைப் பற்றிய தங்களது மதிப்பீடு மற்றும் அறிக்கைகளை சமர்ப்பிக்க இயலும். இத்தகவல் அமைப்பு, அறிக்கைகள் உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்-படுவதையும், பெறப்படுவதையும், அறிக்கைகளின் தரத்தை கண்காணிக்கவும், குழந்தையின் முன்னேற்றத்தை தொடர்ந்து கண்காணிப்பதையும் உறுதி செய்யும். தனிநபர் பராமரிப்பு திட்டம், சமூக விசாரணை அறிக்கை மற்றும் சுகாதார அறிக்கை போன்றவற்றை மின்னணு முறையில் பராமரித்து, எளிதில் தகவலை பெறவும், தேவைப்படும் தகவலை அச்சிடவும் இவ்வமைப்பின் வாயிலாக இயலும். இளைஞர் நீதி அமைப்பின் கீழ் கொண்டுவரப்படும் குழந்தைகளின் தகவல் தொகுப்பு, குழந்தை பாதுகாப்பு சேவைகளை அறிவுசார்ந்த முறையில் அணுகுவதை உறுதி செய்யும்.

## 5.8 உட்கட்டமைப்பு மற்றும் மேம்பாடு

1. இராமநாதபுரம் மாவட்டம், அன்னை சத்தியா அரசினர் குழந்தைகள் இல்லத்திற்கு **₹4.79** கோடி

செலவில் ஒரு புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

2. சென்னை, கெல்லீஸில் உள்ள அரசினர் கூர்நோக்கு இல்லத்திற்கு இரண்டாம் கட்ட கட்டுமான பணிகளை மேற்கொள்வதற்கு **₹4.53** கோடி செலவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

3. சென்னை சமூகப் பாதுகாப்புத் துறை ஆணையரகத்தில் **₹1.00** கோடி செலவில் கூடுதல் கட்டட வசதி மற்றும் இரண்டாவது தள இணைப்பு கட்டடம் ஆகியவை கட்டுவதற்கு நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

4. **(i)** தஞ்சாவூர் மற்றும் தட்டப்பாறை சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் இல்லங்களில் பல்நோக்கு கூடம்;

   **(ii)** செங்கல்பட்டு, ஆத்தூர், அரசினர் பிற்காப்பு நிறுவனத்தில் பயிற்சி மையம்;

   **(iii)** வேலூர், அன்னை சத்தியா அரசினர் குழந்தைகள் இல்லத்தில் உணவு அருந்தும் கூடம்

   ஆகிய பல்வேறு கட்டடங்களைக் கட்டுவதற்காக **₹1.53** கோடி நிதி அரசால்

ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

5. சென்னை, இராயபுரம், சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் இல்லத்தில் **₹1.10** கோடி செலவில் வரவேற்பு பிரிவு கட்டடத்தில் முதல் தளம், மருந்தகம் மற்றும் அலுவலகம் ஆகியவை கட்டுவதற்காக அரசு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட உட்கட்டமைப்பு பணிகளுக்கான நிதி **100** சதவீதம் மாநில அரசின் நிதியிலிருந்து ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
6. “குழந்தை பாதுகாப்பு சேவை” திட்டத்தின் கீழ் அரசு நிதி உதவி பெறும் **152** தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் கீழ் இயங்கும் குழந்தைகள் இல்லங்களின் வசதிகள் மேம்பாட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்குவதற்கும், கட்டட வசதிகளை மேம்படுத்துவதற்கும் தொடராச் செலவினமாக **₹41.90** கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

## 5.9 குழந்தை தத்தெடுப்பு (Child Adoption)

"தத்தெடுத்தல்" என்பது பெற்றோர்களிடமிருந்து நிரந்தரமாக பிரிய நேரிட்ட ஒரு குழந்தை, தத்து பெற்றோர் **(Adoptive Parents)** என்று அழைக்கப்படும்

பெற்றோரின் உறவு முறையோடு இணைந்தும், அக்குழந்தை அனைத்து தார்மீக உரிமைகள், சலுகைகள் மற்றும் பொறுப்புகளோடு அவர்களது சட்டப்பூர்வமான குழந்தையாக மாறும் செயல்முறையை குறிப்பதாகும். இம்முறையில் ஆதரவற்ற, கைவிடப்பட்ட மற்றும் ஒப்படைவு செய்யப்பட்ட குழந்தைகள், பெற்றோர் அல்லது பாதுகாவலர் இல்லாத குழந்தைகள், பாதுகாவலர் பராமரிக்க விரும்பாத / இயலாத நிலையில் உள்ள குழந்தைகளையே தத்து வழங்க இயலும்.

மேலும், கைவிடப்பட்ட, ஆதரவற்ற, புறக்கணிக்கப்பட்ட மற்றும் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளை தத்தெடுப்பதை அரசாங்கம் ஊக்குவிக்கிறது. எந்த ஒரு குழந்தையும் உரிய விசாரணைக்கு பிறகு, கடைசி தீர்வாகவே, நிறுவன பராமரிப்பில் சேர்க்கப்பட வேண்டும்.

“தத்தெடுத்தல்” என்பது மத்திய அரசின் மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தன்னாட்சி நிறுவனமான மத்திய தத்துவள ஆதார மையத்தால் **(CARA)** வகுக்கப்பட்ட தத்தெடுப்பு ஒழுங்குமுறைகள், **2017**-ன்படி நடைபெறுகிறது. தத்தெடுப்பு திட்டத்தில் வெளிப்படைத் தன்மையை பேணுவதற்காக இணையதள பதிவு, தத்தெடுக்கத்தக்க குழந்தைகள் குறித்த விபரங்கள், தத்தெடுப்பு மையங்கள் குறித்த விபரங்கள் மத்திய தத்து வள ஆதார மையத்தின் இணையதளம் **www.cara.nic.in** வாயிலாக மேற்கொள்ளப்பட்டு குழந்தை

தத்தெடுப்பிற்கான வழிமுறைகள் நாடு முழுமைக்கும் ஒரே சீராக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

### 5.9.1 மாநில தத்துவள ஆதார மையம்

சமூக பாதுகாப்புத் துறை ஆணையரகத்தில் செயல்பட்டு வரும் "மாநில தத்து வள ஆதார மையம்" மாநிலத்தில் தத்தெடுத்தல் திட்டத்தை, இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 மற்றும் அதன் கீழமைந்த விதிகளின் கீழ் செயல்படுத்தும் பொறுப்பான அமைப்பாகும். தத்தெடுத்தலை எளிதாக புரிந்து கொள்ள ஏதுவாக "தத்தெடுத்தல் குறித்த கையேடு" ஒன்றை மாநில தத்து வள மையம் வெளியிட்டுள்ளது. பொதுமக்களிடையே குழந்தை தத்தெடுத்தல் தொடர்பான செய்திகளை பரப்புவதற்கு அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகுகள், சிறப்பு தத்து மையங்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் பொது இடங்களில் விளம்பர பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. சட்டபூர்வமற்ற குழந்தை தத்தெடுத்தலைத் தடுக்க மருத்துவத் துறை வல்லுநர்களுக்கும், இதர செயல்பாட்டாளர்களுக்கும் விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

### 5.9.2 சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்கள்

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும், தத்து வழங்கிட 21 சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்கள் தமிழ்நாட்டில்

செயல்படுகின்றன. மேற்படி நிறுவனங்கள் மதுரை மற்றும் சேலத்தில் தலா இரண்டும், காஞ்சிபுரத்தில் மூன்றும், அரியலூர், சென்னை, கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, நாமக்கல், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருவள்ளூர், திருவண்ணாமலை மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் தலா ஒன்று என அமைந்துள்ளன.

1993 முதல் டிசம்பர் 2019 வரை இத்திட்டத்தில் தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகளின் விவரம் கீழ்க்கண்டவாறு :-

| வ. எண் | தத்தெடுப்பின் தன்மை | தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள் | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | |
| 1 | உள்நாட்டுத் தத்தெடுப்பு | 1,413 | 4,035 | 5,448 |
| 2 | வெளிநாட்டுத் தத்தெடுப்பு | 109 | 391 | 500 |
| | மொத்தம் | 1,522 | 4,426 | 5,948 |

**2019-2020 ஆம் ஆண்டில் தத்து வழங்கப்பட்ட குழந்தைகளின் விவரம் (டிசம்பர் 2019 வரை) பின்வருமாறு:-**

| வ. எண் | தத்தெடுப்பின் தன்மை | தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள் | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | |
| 1 | உள்நாட்டுத் தத்தெடுப்பு | 96 | 109 | 205 |
| 2 | வெளிநாட்டுத் தத்தெடுப்பு | 3 | 3 | 6 |
| மொத்தம் | | 99 | 112 | 211 |

## 5.10 நிதி ஆதரவுத் திட்டம் (Sponsorship)

குழந்தைகளை நிறுவனத்தில் அனுமதிப்பதை தவிர்த்து, குடும்பத்துடன் வைத்து பராமரிப்பதற்கும், அவர்களது கல்வியை தொடர்வதற்கும் குடும்பத்திற்கு நிதி ஆதரவு வழங்கப்படுகிறது. இது குழந்தைகள் பாதிக்கப்படாமல் இருக்கவும், வீட்டை விட்டு வெளியேறுவது, குழந்தை திருமணத்திற்கு கட்டாயப்படுத்தப்படுவது, கட்டாயப்படுத்தி குழந்தை தொழிலாளராக ஆக்குதல் போன்றவற்றை தடுப்பதற்கான ஒரு முயற்சியாகும். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குழந்தைக்கும் மாதம் ₹2,000/- வீதம் மூன்று ஆண்டுகளுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. 2019-2020-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் 1,229 குழந்தைகள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்காக அரசு ₹2.62 கோடி செலவிட்டுள்ளது.

## 5.11 சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் குழந்தைகள்

குற்றம் புரிந்ததாக தெரிவிக்கப்படும் நாளன்று பதினெட்டு வயது நிறைவடையாத, சட்டத்திற்கு முரணான செயல்களை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட குழந்தைகள் "சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் குழந்தைகள்" எனக் கருதப்படுவர்.

## 5.12 இளைஞர் நீதிக் குழுமங்கள்

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015-ல் வரையறுக்கப்பட்டபடி, சட்டத்திற்கு முரணாக செயல்படும் குழந்தைகள் தொடர்பான வழக்குகளை கையாளுவதற்காக 32 மாவட்டங்களில் இளைஞர் நீதி குழுமங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இளைஞர் நீதிக் குழுமமானது, பெருநகர நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் மற்றும் இரண்டு சமூகப் பணி உறுப்பினர்கள் (ஒரு பெண் சமூகப்பணி உறுப்பினர் உட்பட) ஆகியோரைக் கொண்டு செயல்படுகிறது. இளைஞர் நீதிக் குழும நடைமுறைகள் ஒரு நீதிமன்ற நடைமுறைபோல் அல்லாமல் குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் குழந்தை நேய அணுகுமுறைப்படி நடத்தப்படுகிறது.

**2020-2021 ஆம் நிதியாண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹3.57 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.13 கூர்நோக்கு இல்லங்கள் (Observation Homes)

சிறார் நீதி முறை அமைப்பில், இளைஞர் நீதி குழுமத்தின் முன்பு முன்னிலைப்படுத்தப்படும் சட்டத்திற்கு முரண்பட்ட சிறார்களுக்கு விசாரணை நடைபெறும் காலங்களில் நிறுவனம் சார்ந்த சேவையும் பாதுகாப்பும் தேவைப்படுகிறது. கூர்நோக்கு இல்லங்கள் என்பது சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாகக் கருதப்படும் சிறார்கள், இளைஞர் நீதி குழுமங்களின் முன்பு விசாரணை மேற்கொள்ளப்படும் காலங்களில் தற்காலிகமாக தங்கவைப்பதற்கான இடம் ஆகும். தமிழ்நாட்டில், தற்போது சென்னை, செங்கல்பட்டு, கடலூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், சேலம், திருநெல்வேலி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய 9 மாவட்டங்களில் கூர்நோக்கு இல்லங்கள் அரசால் நடத்தப்பட்டு வருகிறது. இவ்வில்லங்களில் தங்கும் சிறார்களுக்கு அடிப்படைத் தேவைகளான தங்குமிடம், உணவு, உடை, படுக்கை வசதிகள் மட்டுமின்றி அவர்களின் குறுகிய கால மறுவாழ்வின் ஒரு பகுதியாக கல்வி, முறைசாரா கல்வி, தொழிற்கல்வி, மருத்துவ வசதிகள் மற்றும் ஆற்றுப்படுத்துதல் சேவையும் வழங்கப்படுகின்றன. மேலும், அனைத்து கூர்நோக்கு இல்லங்களின் தொடர் கண்காணிப்பை உறுதி செய்வதற்காக, கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை அரசு வழங்கியுள்ளது.

**2020-2021 ஆம் நிதியாண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹8.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.14 சிறப்பு இல்லங்கள் (Special Homes)

தவறிழைத்ததாக கருதப்படும் சிறார்கள் உரிய விசாரணைக்கு பின் இளைஞர் நீதி குழுமத்தால் குற்றம் உறுதி செய்யப்பட்டவர்கள் என தீர்மானிக்கப்படும் நேர்வில் அவர்களுக்கு நீண்டகால மறுவாழ்வு மற்றும் பாதுகாப்பினை வழங்கும் பொருட்டு சிறப்பு இல்லங்கள் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சிறார்கள் அதிகபட்சமாக மூன்றாண்டுகள் வரை இவ்வில்லங்களில் தங்கவைக்கப்படுவார்கள். இச்சிறப்பு இல்லங்களில் சிறார்களுக்கு கல்வி, தொழிற்கல்வி, ஆற்றுப்படுத்துதல் மற்றும் இணை பாடத்திட்டங்களுக்கான வசதிகள் வழங்கப்படுகின்றன. சிறுமியர்களுக்காக சென்னையில் ஓர் அரசினர் சிறப்பு இல்லமும், சிறுவர்களுக்காக செங்கல்பட்டில் ஓர் அரசினர் சிறப்பு இல்லமும் என இரண்டு சிறப்பு இல்லங்கள் இயங்கி வருகின்றன.

**2020-2021 ஆம் நிதியாண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹2.67 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.15 பாதுகாப்பு இடம் (Place of Safety)

18 வயதிற்குள் சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்ட 18 வயதை கடந்த ஒரு நபர் அல்லது 16 வயதிலிருந்து 18 வயதிற்கு இடைப்பட்ட குழந்தை ஒரு கொடுங்குற்றத்தைச் செய்ததாக கருதப்படுபவராகவோ அல்லது தண்டிக்கப்பட்ட குற்றவாளியாகவோ இருக்கும்போது அவர் இளைஞர் நீதிக் குழுமம் அல்லது குழந்தைகள் நீதிமன்றத்தின்

ஆணையின்படி பாதுகாப்பு இடத்தில் தங்கவைக்கப்படுகிறார். தமிழ் நாட்டில் பாதுகாப்பு இடமானது வேலூரில் நிறுவப்பட்டுள்ளது.

**2020-2021 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹45.66 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.16 தமிழ்நாடு இளைஞர் நீதி நிதி (Tamil Nadu Juvenile Justice Fund)

இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015-ன் படி, குழந்தைகள் நலன் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள "தமிழ்நாடு இளைஞர் நீதி நிதி" ₹25.00 இலட்சம் குழும நிதியுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிதி அவசர தேவைகள் மற்றும் அரசின் வாலாய திட்டங்களின் கீழ் வராத ஏனைய திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு வழிவகை செய்கிறது. இந்நிதி குழந்தைகளுக்கு கல்வி, மருத்துவம், பயிற்சி, விளையாட்டு, சுயதொழிலுக்கான மூலப்பொருட்கள் அல்லது வருவாயை பெருக்குவதற்கான மூலதனமாகவும் பயன்படுத்தப்- படுகிறது. இந்நிதியின் கீழ் 2019-2020-ஆம் நிதியாண்டில் இதுவரை 20 குழந்தைகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## 5.17 குழந்தைகளுக்கான பிரத்தியேக போதை தடுப்பு மற்றும் மறுவாழ்வு மையம்

குழந்தைகளுக்கான பிரத்தியேக போதை தடுப்பு மற்றும் மறுவாழ்வு மையம் ஒன்று அரசால் ஏற்படுத்தப்பட்டு, செங்கல்பட்டில் தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சிறுவர்களிடையே குறிப்பாக சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் குழந்தைகளிடையே, சிறுவயதிலேயே உள்ள போதை பழக்கத்தினை தடுத்து தீர்வு காண இம்மையம் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2019-2020ஆம் ஆண்டில் இதுவரை 70 குழந்தைகள் பயன்பெற்றுள்ளனர்.

**2020-2021 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹24.94 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.18 நன்னடத்தை அமைப்பு (Probation System)

ஒவ்வொரு கட்டத்திலும், நன்னடத்தை பணியானது குழந்தைகளின் பங்களிப்புடன் விரைவான மறுவாழ்வு அளித்து அவர்களை குடும்பத்தினருடன் ஒருங்கிணைக்க ஒரு திறன்மிக்க கருவியாக செயல்படுகிறது. சமூகப் பாதுகாப்புத் துறையில், மாவட்டத்திற்கு ஒரு நன்னடத்தை அலுவலர் வீதம் 32 மாவட்டங்களில் நன்னடத்தை அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதிகப்படியான வழக்குகள் காரணமாக, சென்னை மாவட்டத்தில் கூடுதலாக 3 நன்னடத்தை அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

குழந்தை நலக் குழு மற்றும் இளைஞர் நீதிக் குழுமங்கள் முன் முன்னிலைப்படுத்தப்படும் வழக்குகள் மீது சரியான முடிவு மேற்கொள்ள சமூக விசாரணை அறிக்கை தயாரிப்பது நன்னடத்தை அலுவலர்கள் பணியாகும். குறிப்பிட்ட வழக்குகளில் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் சிறார்களை தொடர்ந்து கண்காணித்தல் மற்றும் குழந்தைகள் இல்லங்களிலிருந்து பயிற்சி பெற்று வெளியேறும் குழந்தைகள் பிற்காப்பு நிலை அறிதல் போன்றவை நன்னடத்தை அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நன்னடத்தை அலுவலர்களின் முக்கிய பங்கினை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு காலமுறை பயிற்சி, திறன் மேம்படுத்துதல், அவர்களின் பணியினை ஆய்வு மற்றும் கண்காணிப்பு செய்ய வேண்டியதின் அவசியத்தினை உணர்ந்து ஒரு முதன்மை நன்னடத்தை அலுவலர் மற்றும் இரு மண்டல நன்னடத்தை அலுவலர் பதவி முறையே சென்னை மற்றும் மதுரையில் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கு முறையான மறுவாழ்வு நடவடிக்கைகளை விரைந்து வழங்குவதை உறுதி செய்ய வேண்டி சமூக பாதுகாப்புத் துறையில் உள்ள நன்னடத்தை பிரிவு, தகுந்த கால இடைவெளியில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி வருகிறது. காலமுறை ஊதியத்தில் பணிபுரிந்து வரும் 35 நன்னடத்தை அலுவலர்களுடன் கூடுதலாக 29 சட்டம் சார்ந்த நன்னடத்தை அலுவலர்கள் குழந்தை பாதுகாப்பு

சேவையின் கீழ் நியமனம் செய்யப்பட்டு மாநிலத்தில் நன்னடத்தை பிரிவு திறம்பட செயல்பட்டு வருகிறது.

## 5.19 சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் குழந்தைகளுக்காக அரசு மேற்கொண்ட இதர முயற்சிகள்

### 5.19.1 காணொலி காட்சி வசதி

இளைஞர் நீதி குழுமத்தின் முன்பு முன்னிலைப்படுத்த வேண்டிய சிறார்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய சம்மந்தப்பட்ட மாவட்டத்திலுள்ள சட்டத்திற்கு முரண்பட்ட செயலில் ஈடுபட்டதாக கருதப்படும் சிறார்களை இளைஞர் நீதி குழுமங்களுக்கு நேரிடையாக முன்னிலைப்படுத்துவதை தவிர்த்து அவர்கள் தங்கியுள்ள இல்லங்கள் மற்றும் இளைஞர் நீதி குழுமங்களிடையே காணொலி காட்சி மூலமான தொடர்பு வசதியை அரசு ஏற்படுத்தி வருகிறது.

**2016-2017-**ஆம் ஆண்டில் திருநெல்வேலி அரசு கூர்நோக்கு இல்லம் மற்றும் சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்ட இளைஞர் நீதி குழுமங்களிடையே **₹38.91** இலட்சம் செலவில் காணொலி காட்சி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. **2017-2018-**ஆம் ஆண்டில் சென்னை அரசு கூர்நோக்கு இல்லம் மற்றும் காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள இளைஞர் நீதிக்

குழுமங்களிடையே ₹49.72 இலட்சம் செலவில் காணொலி காட்சி திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. எஞ்சியுள்ள இளைஞர் நீதி குழுமங்கள் மற்றும் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், கடலூர், கோயம்புத்தூர், மதுரை அரசினர் கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் வேலூர் மாவட்டத்திலுள்ள பாதுகாப்பு இடம் ஆகியவற்றிற்கிடையே ₹2.61 கோடி செலவில் அமைக்க 2019-2020-ஆம் ஆண்டில் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. தற்போது மாநிலத்திலுள்ள 32 இளைஞர் நீதிக் குழுமங்கள் மற்றும் அரசு கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் ஆகியவற்றிற்கிடையே காணொலி காட்சி வசதி உள்ளது.

### 5.19.2 குழந்தைகளுக்கான உளவியல் ரீதியான ஆற்றுப்படுத்துதல் சேவை

சட்டத்திற்கு முரண்பட்ட செயலில் ஈடுபடும் சிறார்கள் இளைஞர் நீதி அமைப்பின் கீழ் வரும் பொழுது அவர்கள் உணர்வு ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் மற்றும் போதை பழக்கத்திலிருந்து விடுபட்டதால் ஏற்படும் உடனடி தாக்கத்தாலும் பாதிக்கப்படுகின்றனர். இவ்விதமான மன மற்றும் உளவியல் ரீதியான பாதிப்பிலிருந்து மீண்டெழ அரசு கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் சிறப்பு இல்லங்களிலுள்ள குழந்தைகளுக்கு உளவியல் நிபுணர்கள் மூலமாக ஆற்றுப்படுத்துதல் சேவை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் குழந்தைகளின் உளவியல் சேவைக்காக நாளொன்றுக்கு ₹1,000/- வீதம்

ஆண்டொண்டிற்கு **180** நாட்கள் உளவியல் சேவைக்காக மதிப்பூதிய அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உளவியல் நிபுணர்களை அமர்த்த வகை செய்கிறது.

## 5.20 பிற்காப்பு நிறுவனங்கள் (After Care Organisations)

குடும்பம் மற்றும் பிற ஆதரவு இல்லாத நிலையில் உள்ள எந்த குழந்தையும் **18** வயது நிறைவடைந்து, இல்லங்களிலிருந்து வெளியேறும் போது, அவர்கள் சமூகத்துடன் ஒன்றிணைக்கப்படும் காலம் வரை சுயமாக வாழும் நிலைக்கு தங்களை மாற்றிக் கொள்ள தேவையான இடைப்பட்ட காலத்தில், பிற்காப்பு சேவை வழங்க பிற்காப்பு நிறுவனங்கள் செயல்படுகின்றன. தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் பிற்காப்பு நிறுவனங்களில் தங்கவைக்கப்படும் சிறார்களுக்கு தலா மாதம் **₹2,000/-** வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வகையில் தற்போது பிற்காப்பு நிறுவனங்களில் **196** பயனாளிகள் உள்ளனர். இவையன்றி ஆண்களுக்காக செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள ஆத்தூரில் தற்போது **21** பயனாளிகளுடனும், மதுரையில் **10** பயனாளிகளுடனும் மற்றும் வேலூரில் **8** பெண் பயனாளிகளுடனும் அரசு பிற்காப்பு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறையில் தன்னார்வ தொண்டு நிறுவனத்தால் குழந்தை பாதுகாப்பு சேவைகளின் கீழ் வயது முதிர்ந்த மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான

பிற்காப்பு நிறுவனம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் **190** பயனாளிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**2020-2021 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹2.12 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.21 குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி

முறையான கல்வி வழங்குவதற்காக அரசினர் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களின் வளாகத்திலேயே பள்ளிக் கல்வித் துறையால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள் செயல்படுகின்றன. அவ்வாறு, வளாகத்திலேயே பள்ளிகளற்ற குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள குழந்தைகள் அருகிலுள்ள பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் வரவேற்பு பிரிவுகளில் குறுகிய காலங்களுக்கு தங்க வைக்கப்படும் குழந்தைகளுக்கு முறைசாராக் கல்வி மற்றும் தொழிற்கல்வி அளிக்கப்பட்டு வருகின்றன.

நிறுவனங்களில் உள்ள குழந்தைகளின் திறன்களை மேம்படுத்த தையல், புத்தகம் கட்டுதல், திரை அச்சடித்தல், அடிப்படை கணினி பயிற்சி, பேக்கரி பொருட்கள் தயாரித்தல் போன்ற குறுகியகால தொழிற்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இதுவரை இப்பயிற்சியின் மூலம் **2019-2020**-ஆம் ஆண்டுகளில் **878** சிறார்கள் பயனடைந்துள்ளனர். மேலும், தமிழ்நாடு

திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் தையல் இயந்திரம் இயக்குபவர், மின்கம்மியர் உதவியாளர், குழாய் இணைப்பு உதவியாளர், குளிர்சாதன பழுதுபார்த்தல், இருசக்கர வாகன பழுதுபார்த்தல் ஆகிய குறுகிய காலப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இப்பயிற்சியின் மூலம் 291 சிறார்கள் பயனடைந்துள்ளனர்.

**2020-2021-ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹28.09 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.22 குழந்தைகளுக்கான கட்டணமில்லா தொலைபேசி (Childline) 1098

சைல்ட்லைன் "பத்து ஒன்பது எட்டு" என்பது இடர்பாடான சூழலில் உதவி தேவைப்படும் நிலையில் உள்ள குழந்தைகளுக்கான 24 மணி நேர தேசிய அளவிலான இலவச தொலைபேசி சேவையாகும். இந்திய அரசின் நிதியுதவி மூலம் சைல்ட்லைன் இந்தியா பவுண்டேசன் கட்டுப்பாட்டின் கீழ் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் சைல்ட்லைன் சேவை செயல்படுத்தப்படுகின்றன. 2019-2020-ஆம் ஆண்டில் இச்சேவையின் கீழ் தமிழ்நாட்டில் 24,767 உதவிக்கான அழைப்புகள் பெறப்பட்டன.

## 5.23 குழந்தை பாதுகாப்புச் சேவைகள் (Child Protection Services)

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் என்ற ஒரு குடையின் கீழ் குழந்தை பாதுகாப்புச் சேவைகளை மாநிலம் மற்றும் மாவட்ட அளவில், குழந்தைகளுக்கு வழங்கும் போதுமான அமைப்புகளை ஏற்படுத்தி அரசு வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது.

இந்தத் திட்டம் குழந்தைகளின் உரிமை மீறலை தடுப்பதை வலுப்படுத்துவதுடன், பாதுகாப்பு சேவைகளுக்கான உட்கட்டமைப்பினை மேம்படுத்துதல், இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015-ஐ செயல்படுத்திட நிதியுதவி அளித்தல், பாதுகாப்பு சேவைகளை சிறந்த தரத்திலும் பரந்த அளவிலும் அதிக அளவில் அணுகிப் பெற வழிவகை செய்தல், குழந்தைகளின் பாதுகாப்பிற்கான முதலீட்டை அதிகரிக்கவும், குழந்தைகள் உரிமைகள் மீது தொடர்ச்சியாக கவனத்தை ஈர்த்து அனைத்து குழந்தைகளும் பாதுகாப்புடன் இருப்பதற்கு இத்திட்டம் வழிவகை செய்கிறது.

இந்த நோக்கங்கள் கீழ்க்கண்டவற்றால் நிறைவேற்றப்படுகின்றன:-

- குழந்தைகள் பாதுகாப்புச் சேவைகளின் தரம் மற்றும் அணுகுமுறையை மேம்படுத்துதல்.
- இந்தியாவில் தற்போதைய நிலையில் நிலவும் குழந்தை உரிமைகள் மற்றும் குழந்தை

பாதுகாப்பு குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

- குழந்தைகள் பாதுகாப்பிற்கான கடமையையும், பொறுப்புணர்வையும் செயல்படுத்துதல்.
- குழந்தைகள் பாதுகாப்பு குறித்த தகவல் மேலாண்மைத் திட்டம், காணாமல் போன குழந்தைகளை கண்டுபிடிக்கும் திட்டம் மற்றும் குழந்தை பாதுகாப்பு சேவை கண்காணிப்பு ஆகியவற்றை உருவாக்குதல்.
- துறைகளுக்கிடையே, அனைத்து மட்டத்திலும் தகுந்த செயல்பாட்டை உறுதிப்படுத்துதல்.

## 5.24 குழந்தை பாதுகாப்புச் சேவைகளின் கீழ் செயல்படும் சேவை அளிக்கக் கூடிய கட்டமைப்புகள்

குழந்தைகள் பாதுகாப்புச் சேவைகளை சிறப்பாக நடைமுறைப்படுத்த, கீழ்க்காணும் சேவை அளிக்கக் கூடிய கட்டமைப்புகளை அரசு உருவாக்கியுள்ளது:-

- மாநிலக் குழந்தைகள் பாதுகாப்புச் சங்கம்
- மாவட்டக் குழந்தை பாதுகாப்பு அலகுகள்.
- மாநிலத் தத்தெடுப்பு வள முகமை.

குழந்தை பாதுகாப்பிற்கான பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஒருங்கிணைந்த பணியினை இச்சேவை வழங்கல் கட்டமைப்பானது

சுகாதாரம், கல்வி, நீதித்துறை, காவல்துறை மற்றும் தொழிலாளர் உள்ளிட்ட பல்வேறு துறைகளுடன் ஒரு இடைமுகமாக செயல்பட்டும், பல்வேறு நிலைகளில் புறத்தொடர்பு திட்டங்களும் செயல்பாட்டாளர்களுக்கு பயிற்சியும் அளிக்கிறது.

**2020-2021 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹24.78 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**


### 5.25 இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015-ன் கீழ் அனைத்து குழந்தை பராமரிப்பு நிறுவனங்களை பதிவு செய்தல்

இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015-ன் கீழ் அனைத்து குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்களும் பதிவு செய்ய கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அவ்வாறு பதிவு செய்யப்படாத குழந்தை பராமரிப்பு நிறுவனங்களுக்கு சட்ட ரீதியான தண்டனை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் பதிவு செய்யப்படுவதன் மூலம் அந்நிறுவனம் செயல்படுவதை முறைப்படுத்தவும் அவற்றின் செயல்பாடுகளை ஆய்வு செய்து கண்காணிக்க உதவுவதோடு குறைந்தபட்ச வசதிகள் கொண்டதாக இருப்பதை உறுதி செய்கிறது.

2014 முதல் 2019 டிசம்பர் வரை 1,182 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும்,

இக்காலக்கட்டத்தில் **869** நிறுவனங்கள் குறைந்தபட்ச தரம் / வசதிகள் இல்லாத காரணத்தினால் மூடப்பட்டுள்ளது. தமிழ்நாடு இளைஞர் நீதி விதிகள் **2017**-ன் கீழ் குறிப்பிட்டுள்ள குறைந்தபட்ச தரம் / வசதிகளுக்கான வரையறையின்படி, தங்குமிடம், கட்டிடத்தின் உறுதித்தன்மை, கட்டிட உரிமம், தீயணைப்பு வசதிகள் மற்றும் துப்புரவு வசதிகள் ஆகிய வசதிகளை பூர்த்தி செய்யும் குழந்தைகளுக்கான இல்லங்கள் மட்டுமே பதிவு செய்யப்படுகின்றன. சுமார் **49,760** குழந்தைகள் பதிவு செய்யப்பட்ட இல்லங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

**தமிழ்நாட்டில் குழந்தைகள் இல்லங்கள் பதிவு செய்யப்படுவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் (சதவீதத்தில்)**




## 5.26 குழந்தை பராமரிப்பு நிறுவனங்களின் ஆய்வு மற்றும் கண்காணிப்பு

மாநிலத்தில் செயல்படும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களை திறன்பட ஆய்வு செய்யவும் நிர்ணயிக்கப்பட்ட தரத்தினை உறுதி செய்யவும்

ஏற்கனவே ஆய்வு செய்யும் அமைப்புகளான இளைஞர் நீதி குழுமம், குழந்தை நலக் குழுமம் மற்றும் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகுடன் சேர்ந்து மாநில மற்றும் மாவட்ட அளவிலான ஆய்வுக் குழுக்களை அரசு அமைத்துள்ளது.

மாநில அளவிலான ஆய்வு குழுவில், மாநில குழந்தை பாதுகாப்பு சங்கத்தின் செயலர் தலைவராகவும், மாநில மனித உரிமை ஆணைய பதிவாளர் (சட்டம்), தமிழ்நாடு மாநில குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணைய உறுப்பினர், சுகாதார பணிகள் துறை இயக்குநர் அல்லது அவரின் பிரதிநிதி மற்றும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவன பிரதிநிதி ஆகியோர் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

மாவட்ட அளவிலான ஆய்வு குழுவானது மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலரை உறுப்பினர் செயலராகவும் குழந்தைகள் நலக் குழு / இளைஞர் நீதிக் குழு, மருத்துவ அலுவலர், மனநல நிபுணர் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவன பிரதிநிதி ஆகிய நான்கு பேரை உறுப்பினராக கொண்ட குழுவாக சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரால் அமைக்கப்பட்டுள்ளது.

## 5.27 குழந்தை பின்தொடர் முறைமை (Child Tracking System)

இந்திய அரசு தேசிய தகவல் மையத்தின் மூலம் காணாமல் போன குழந்தைகள் மற்றும் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளை கண்காணிக்கக் கூடிய

(www.trackthemissingchild.gov.in) இணைய முகப்பினை உருவாக்கியுள்ளது. குழந்தை பின்தொடர் முறைமை, காணாமல் போன குழந்தையையும், கண்டெடுக்கப்பட்ட குழந்தையையும் ஒப்பிட்டு பார்க்க வசதி செய்து தருகிறது. மேலும், இம்முறையின் மூலம் இக்குழந்தைகளின் தேடல் முன்னேற்றத்தை தொடர்ந்து கண்காணிக்க உதவுகிறது. இவ்வாறு இத்திட்டத்தின் மூலம் சரியான மேற்பார்வையும் குழந்தை நலனும் இணைய முகமை மூலம் உறுதிப்படுத்த முடிகிறது.

குழந்தை பின்தொடர் முறைமையின் கீழ் அனைத்து காவல் நிலையங்களும், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகுகள், குழந்தை நலக் குழுக்கள், இளைஞர் நீதி குழுமங்கள் மற்றும் மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் இயங்கி வரும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் ஆகிய அனைத்தும் இத்தேசிய இணைய முகமை மூலம் இணைக்கப்பட்டுள்ளது.

## 5.28 தனிநபர் பராமரிப்புத் திட்டம் (Individual Care Plan)

தனிநபர் பராமரிப்புத் திட்டம் என்பது குழந்தைகளின் முன்னேற்றம் குறித்து மதிப்பீடு செய்வதற்கு நிறுவனங்களில் உள்ள குழந்தைகளுக்கு தேவையான குறுக்கீடுகளுக்கான யுக்திகளை வடிவமைத்தல், குழந்தைகளின் மறுவாழ்வு, மறு சீரமைப்பு மற்றும் குழந்தைகளை சமூகத்துடன் ஒருங்கிணைத்தல் குறித்து திறம்பட திட்டமிடுதல் ஆகியவற்றை குழந்தை பராமரிப்பு நிறுவனங்களால்

அனைத்து குழந்தைகளுக்கும் அவ்வப்போது தயாரிக்கப்பட வேண்டிய ஆற்றல் வாய்ந்த ஓர் ஆவணமாகும்.

மாநிலத்தில் செயல்பட்டு வரும் குழந்தை பராமரிப்பு நிறுனங்களில் உள்ள பணியாளர்களுக்கு தரமான தனிநபர் பராமரிப்புத் திட்டத்தை தயாரிக்க காலமுறை பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை **1,366** பயிற்சிகள் மாவட்டம் மற்றும் மாநில அளவில் வழங்கப்பட்டுள்ளன. மேலும், **49,589** குழந்தைகளுக்கான தனிநபர் பராமரிப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. தனிநபர் பராமரிப்புத் திட்டங்கள் தொடர் சீராய்வு செய்யப்படுகிறது.

குழந்தை பாதுகாப்பு சேவைகளுக்கென மாவட்ட அளவில் மூன்று அடுக்கு கண்காணிப்பு அமைப்புகள் உள்ளன.

1. கிராம அளவிலான குழந்தை பாதுகாப்பு குழு **(Village Level Child Protection Committee)**
2. வட்டார அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழு **(Block Level Child Protection Committee)**
3. மாவட்ட அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழு **(District Child Protection Committee)**

### 5.28.1 கிராம அளவிலான குழந்தை பாதுகாப்பு குழுக்கள்

ஊராட்சி மன்ற தலைவரை தலைவராகவும், கிராம நிர்வாக அலுவலரை உறுப்பினர் செயலராகவும் சுகாதாரம், கல்வி, காவல் துறை, மகளிர் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்து தலா ஒரு உறுப்பினரையும் மற்றும் இரண்டு குழந்தைகளை உறுப்பினர்களாகவும் கொண்டு **12,579** கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### 5.28.2 வட்டார அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழுக்கள்

மாநிலத்தில் **385** வட்டார அளவிலான குழந்தை பாதுகாப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் வட்டார அளவில் குழந்தை பாதுகாப்பு சேவையினை செயல்படுத்துவதை கண்காணிக்கும். இக்குழுக்களானது ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் தலைமையில் வட்டார வளர்ச்சி அலுவலரை உறுப்பினர் செயலராகவும், குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர், வட்டார கல்வி அலுவலர், ஆரம்ப சுகாதார மருத்துவ அலுவலர் தவிர மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகின் ஓர் உறுப்பினர், மூன்று கிராம அளவிலான குழந்தை பாதுகாப்பு குழு தலைவர்கள், இரண்டு தன்னார்வத் தொண்டு நிறுவன பிரதிநிதிகள் மற்றும் மூன்று சுயஉதவி குழுக்களின் உறுப்பினர்கள் ஆகியோரை உறுப்பினர்களாக கொண்டுள்ளது.

### 5.28.3 மாவட்ட அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழுக்கள்

அந்தந்த மாவட்டம் சார்ந்த பிரத்யேக குறிகாட்டிகளின் அடிப்படையில் குழந்தை பாதுகாப்பு சேவைகள் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணிக்க அரசால் இளைஞர் நீதி சட்டத்தின் கீழ் மாவட்ட ஆலோசனை குழுக்களை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு குழுக்களாக மறுகட்டமைப்பு செய்யப்பட்டுள்ளது.

இக்குழு கீழ்க்கண்டவாறு தொகுத்தமைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர் | தலைவர் |
| 2 | மாவட்ட நீதிபதி / முதன்மை நீதித்துறை நடுவர் அல்லது நீதித்துறை நடுவர் | இணை தலைவர் மற்றும் உறுப்பினர் |
| 3 | காவல் துறை ஆணையர் / காவல் துறை கண்காணிப்பாளர் | உறுப்பினர் |
| 4 | மாவட்ட சமூக நல அலுவலர் | உறுப்பினர் |
| 5 | மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் | உறுப்பினர் |
| 6 | முதன்மை கல்வி அலுவலர், மருத்துவ கல்லூரி முதல்வர், மாவட்ட மருத்துவ அலுவலர் | உறுப்பினர்கள் |
| 7 | நன்னடத்தை அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் துறை) | உறுப்பினர் |
| 8 | கண்காணிப்பாளர் அல்லது நிறுவன பொறுப்பாளர் (அந்தந்த மாவட்டத்தில் உள்ள கூர்நோக்கு இல்லம், குழந்தைகள் இல்லம் மற்றும் சிறப்பு இல்லம்) | உறுப்பினர் |
| 9 | தொழிலாளர் அலுவலர் | உறுப்பினர் |
| 10 | மாவட்ட ஆட்சியரால் நியமிக்கப்பட்ட ஒரு மாவட்ட ஊராட்சி உறுப்பினர் | உறுப்பினர் |
| 11 | ரோட்டரி / அரிமா சங்க மாவட்ட ஆளுநர் | உறுப்பினர் |
| 12 | மாவட்ட ஆட்சியரால் நியமிக்கப்பட்ட 2 தன்னார்வத் தொண்டு நிறுவன பிரதிநிதிகள் | உறுப்பினர்கள் |

## 5.29 குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை அமைப்புகள்

குழந்தை பாதுகாப்பு சேவையின் கீழ் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள குழந்தைகளுக்கு பாதுகாப்பினை உறுதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாநிலத்தில் **1,165** நிறுவனங்களில் **6,234** கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது. இந்நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள், காவல் துறை சரிபார்ப்புக்கு உட்படுத்தப்பட்டு, பணியாளர்கள் மீது எவ்விதமான குற்ற நடவடிக்கையும் இல்லை என்பதை இதன்மூலம் உறுதி செய்யப்பட்டு வருகிறது. இதுவரை காவல்துறை சரிபார்ப்பு சான்றிதழ் **13,149** நபர்களுக்கு பெறப்பட்டுள்ளது. மேலும், **2,056** பணியாளர்கள் காவல்துறை சரிபார்ப்பு சான்றிதழுக்காக விண்ணப்பித்துள்ளனர். இயற்கை பேரிடர், விபத்து போன்ற எதிர்பாரா நிகழ்வுகளை திறம்பட கையாளும் விதமாக **672** பேரிடர் மேலாண்மை பயிற்சிகள் குழந்தை பராமரிப்பு நிறுவன பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் தொற்றுநோய் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கையாக காலமுறைப்படி நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, அவற்றின் இரசாயன மற்றும் நுண்ணுயிர் ஆய்வானது அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. தமிழக முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு திட்டத்தின் கீழ் **3,213** குழந்தைகள் பயனாளிகளாக கொண்டு வரப்பட்டுள்ளனர்.

## 5.30 குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள குழந்தைகளுக்கு ஆதார் எண் இணைப்பு, வங்கி கணக்கு தொடங்குதல்

குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள **48,599** குழந்தைகளுக்கு ஆதார் எண் பெறப்பட்டுள்ளது. **558** குழந்தைகளுக்கு ஆதார் எண்கள் பெறுவதற்கு பதிவுகள் செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள **603** குழந்தைகளுக்கு ஆதார் எண் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மாநிலத்தில் உள்ள குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள **49,760** குழந்தைகளில், இதுவரை **45,391** குழந்தைகளுக்கு வங்கிகளில் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன.

## 5.31 ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956

ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், **1956** ஆனது பெண்களை வணிக நோக்கிலான பாலியல் சுரண்டலுக்கும், கடத்தலுக்கும் உள்ளாக்குவதை தடுப்பதை நோக்கமாக கொண்டுள்ளது. இச்சட்டம், கடத்தல்காரர்கள், தீங்கிழைப்பவர்கள் மற்றும் இடைத்தரகர்களை நீதிமன்றத்தின் முன் கொண்டு வருவதோடு நீதிமன்ற வழிகாட்டுதல்களின்படி, கடத்தலில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மறுவாழ்வு வழங்கப்படுகிறது.

## 5.32 மகளிர் காப்பகங்கள் / பாதுகாப்பு இல்லங்கள்

அச்சுறுத்தலுக்குள்ளான பாதிக்கப்பட்ட பெண்கள் மகளிர் காப்பகங்களில் தங்க வைக்கப்படுகின்றனர். ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956-ன் படி அச்சுறுத்தலுக்குள்ளான அல்லது பாதிக்கப்பட்ட பெண்கள் நீதிமன்ற ஆணையின் படி இக்காப்பகங்களில் அனுமதிக்கப்படுகின்றனர். இவ்வில்லங்களில் தங்கியுள்ள மகளிருக்கு பராமரிப்பு, மருத்துவ சிகிச்சை, உளவியல் ஆலோசனை மற்றும் தொழில் பயிற்சிகள் ஆகிய சேவைகள் மறுவாழ்வுக்கென வழங்கப்படுகின்றன. பாதிக்கப்பட்ட பெண்களுக்கான நிவாரண நிதியிலிருந்து ₹10,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது.

ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956-ன் படி தமிழக அரசால் சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் பாதிக்கப்பட்ட பெண்களின் மறுவாழ்விற்காக மகளிர் காப்பகங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

பாதிக்கப்பட்ட பெண்களின் வழக்குகளை விரைந்து தீர்வு செய்யவும் அவர்களின் கண்ணியத்தை காத்திடவும், நீதிமன்றத்தின் நேரடி விசாரணைக்கு உட்படுத்தப்படுவதற்கு மாறாகவும், காணொலிக் காட்சி மூலம் விசாரணை மேற்கொள்ள மயிலாப்பூர், அரசினர் மகளிர் காப்பகத்திற்கும் சைதாப்பேட்டை பெருநகர நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் இடையே

₹**20.00** இலட்சம் செலவில் காணொலி காட்சி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**2020-2021ஆம் நிதியாண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹5.29 கோடி நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.33 மகளிர் வாழ்வொளித் திட்டம் (Ujjawala)

பெண்கள் மற்றும் குழந்தைகள் வணிகரீதியான பாலியல் தொழிலுக்காக கடத்தப்படுவது மனித உரிமைகளுக்கு எதிரான குற்றமாகும். பாதுகாப்பு மற்றும் முறையான மறுவாழ்விற்காக பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு மறுவாழ்வை உறுதி செய்வதற்காக மத்திய மற்றும் மாநில அரசுகள் உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான வணிகரீதியான பாலியல் சுரண்டலை தடுக்கவும், கடத்தப்பட்டவர்களை மீட்டு, மறுவாழ்வு அளித்து சமூகத்துடன் ஒருங்கிணைக்கவும் ஒரு விரிவான திட்டமாகும். தமிழ்நாட்டில் **5** தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **2019-2020** ஆம் ஆண்டில் **260** பெண்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

**2020-2021-ஆம் நிதியாண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹1.08 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.34 போதை தடுப்புத் திட்டம் (De-addiction Programme)

தமிழக அரசு, மத்திய அரசின் நிதியுதவியுடன் போதை தடுப்பு திட்டத்தை மாநிலத்தில் நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் குடி மற்றும் போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கு ஒருங்கிணைந்த மறுவாழ்வு மற்றும் சிகிச்சை மையங்களில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு, **21** நாட்களுக்கு இலவச சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தற்போது மாநிலத்தில் **28** மையங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்பட்டு வருகின்றன. **2019-2020** ஆம் ஆண்டில் **5,546** குடி மற்றும் போதை பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, இந்திய அரசு போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர்களுக்கு ஏற்படும் பாதகமான விளைவுகளை குறைப்பதற்கு, அதன் விளைவு குறித்து கற்பிப்பதற்கு, போதை தடுப்பு மற்றும் மறுவாழ்வு போன்ற பல்நோக்கு அணுகுமுறையை கொண்ட, போதைப் பொருள் தேவை குறைப்புக்கான தேசிய செயல் திட்டம் **(NAPDDR- National Action Plan for Drug Demand Reduction)** என்ற புதிய திட்டத்தை உருவாக்கியுள்ளது. இத்தேசிய செயல்திட்டம் **(2018-2023)** போதை தடுப்பு கல்வி, விழிப்புணர்வு ஏற்படுத்துதல், திறன் மேம்பாடு குறிப்பிடத்தக்க

குறுக்கீட்டு திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய போதை தேவை குறைப்பு செயல்திட்டத்தை செயல்படுத்த உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தினை தமிழ்நாட்டில் செயல்படுத்த இந்திய அரசு 2019-2020-ஆம் ஆண்டில் ₹2.74 கோடி நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

## 5.35 தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்

குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம், 2005-ன் பிரிவு 17(1)-ன் கீழ் தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தை தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது.

இந்த ஆணையம் ஒரு தலைவர் மற்றும் 6 உறுப்பினர்களைக் கொண்டு 18.01.2013 முதல் செயல்பட்டு வருகிறது.

இந்த மாநில ஆணையத்தின் முக்கிய நோக்கமே தற்போது நடைமுறையில் இருக்கும் குழந்தைகள் சார்ந்த பல்வேறு சட்டங்களை நடைமுறைப்படுத்தப்படுவதை மேற்பார்வை செய்தலாகும். இவ்வாணையம் குழந்தைகளின் உரிமைகள் பாதுகாப்பு மற்றும் குழந்தைகளின் நலனை திறன்பட செயல்படுத்த உறுதி செய்கிறது.

**2020-2021 ஆம் நிதியாண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ₹92.14 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.36 குழந்தை பாதுகாப்பிற்காக பிற துறைகளுடனான ஒருங்கிணைப்பு

சமூகப் பாதுகாப்புத் துறை, இதர அரசு துறைகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, இடர்பாடான சூழ்நிலையால் துன்பப்படும் மற்றும் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய குழந்தைகளை சமூகத்துடன் ஒருங்கிணைக்கின்றது.

சமூகப் பாதுகாப்புத் துறை, சமூக நலன், வருவாய் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, கல்வித் துறை, தொழிலாளர் நலன், ஊரக வளர்ச்சி துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, மருத்துவம் மற்றும் சுகாதாரம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம், ரயில்வே காவல்துறை, சைல்டு லைன், காவல்துறை, நீதித்துறை ஆகியவற்றுடன் திறம்பட ஒருங்கிணைந்து அனைத்து குழந்தைகளின் பாதுகாப்பையும், பராமரிப்பையும் உறுதி செய்கிறது.

மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு, மாவட்ட அளவிலான, மாவட்ட குழந்தை பாதுகாப்பு குழு கூட்டங்கள் காலமுறையாக நடத்தப்படுகின்றன. இதில் நீதித்துறை உட்பட அனைத்து செயல்பாட்டாளர்களும் கலந்து கொள்வார்கள்.

குழந்தைத் திருமணம், குழந்தை கடத்தல், குழந்தைகளை பிச்சையெடுக்க பயன்படுத்துதல், உடல் மற்றும் மனரீதியாக தீங்கிழைத்தல் மற்றும் குழந்தை தொழிலாளர் ஆகியோரை கண்டறிந்து பொருத்தமான

மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளன.

மாவட்ட அளவில் அரசுத் துறை மற்றும் அரசு நிறுவனங்களின் உதவியுடன் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## 5.37 பராமரிப்பும், பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளுக்காக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற புதிய முயற்சிகள்

### 5.37.1 மாநில பெண் குழந்தை பாதுகாப்பு தினம் (State Girl Child Protection Day)

இவ்வாண்டு, மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் பிறந்த தினமான பிப்ரவரி 24ஆம் தேதியை **"மாநில பெண் குழந்தை பாதுகாப்பு"** தினமாக அனுசரிக்க தமிழக அரசால் அறிவிக்கப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் அந்நாளில் மாநில மற்றும் மாவட்ட அளவில் பெண் குழந்தைகள் பாதுகாப்பு குறித்து மனித சங்கிலி, உறுதி ஏற்றல், பேரணிகள், கருத்தரங்கங்கள், பயிலரங்கங்கள் மற்றும் தெரு நாடகங்கள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டுமெனவும், மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களிலும், பள்ளிகளிலும் பெண் குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பாக ஓர் உறுதிமொழி ஏற்கப்பட வேண்டுமெனவும் ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வாறே, **24.02.2020** அன்று தமிழ்நாடு முழுவதும் **மாநில பெண் குழந்தை பாதுகாப்பு தினம்** மாநில அளவிலும்,

மாவட்ட அளவிலும் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

### 5.37.2 சிறப்பு நிதி உதவித் திட்டத் தொகுப்பு

பெற்றோர் மற்றும் பாதுகாவலர் இல்லாத பெண் குழந்தைகள், 18 வயது முடிந்து, அரசு குழந்தைகள் இல்லத்திலிருந்து வெளியே சென்ற பின்னர், அவர்களின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நிலைக்கு பாதிப்பு ஏற்படுமானால் தாய் தந்தை நிலையிலிருந்து அவர்களின் சமூக, பொருளாதார பாதுகாப்பை உறுதி செய்ய ஒரு சிறப்பு உதவித் தொகுப்பினை அரசு வழங்கும். இந்த உதவித் தொகுப்பில் மேற்கல்வி பயிலுதல், திறன் மேம்பாட்டு பயிற்சி, வேலைவாய்ப்பு, சுய தொழில் செய்தல் போன்றவை அடங்கும். அப்பெண்களுக்கு 50 வயது நிறைவடையும் வரை இவ்வுதவி வழங்கப்படும்.

அரசு இல்லங்களில் வாழும், பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் இல்லாத குழந்தைகள், 21 வயதை நிறைவு செய்யும்போது, அவர்களுக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் வீதம் அவர்களது பெயரில் வங்கியில் செலுத்தப்படும். அரசு இல்லங்களை விட்டு வெளியேரும் குழந்தைகள், சமுதாயத்தில் தங்கள் வாழ்க்கையை நிறைவாக அமைத்துக் கொள்ள இத்தொகை ஏதுவாக அமையும்.

### 5.37.3 வளர்ப்பு பெற்றோர்களுக்கு நிதி உதவி

தமிழ்நாட்டில் உள்ள பராமரிப்பு இல்லங்களில் ஆதரவற்ற மற்றும் முற்றிலும் கைவிடப்பட்ட குழந்தைகள், நல்ல குடும்ப சூழ்நிலையில் வளர்வதற்கு, தகுந்த குடும்பங்களை அடையாளம் கண்டு, அக்குழந்தைகளை சிறந்த முறையில் வளர்ப்பதற்கும், பராமரிப்பதற்கும் வளர்ப்பு பெற்றோர்களுக்கு தற்போது **3** ஆண்டுகளுக்கு மாதம் **₹2,000** வீதம் வழங்கப்படுகிறது. இத்தொகை, மாதம் **₹4,000** ஆக உயர்த்தி **5** ஆண்டுகளுக்கு வளர்ப்பு பெற்றோர்களுக்கு வழங்கப்படும்.

### 5.37.4 வேலை வாய்ப்புகளை வழங்குதல்

சமூக பாதுகாப்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் குழந்தைகள் இல்லங்கள், கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள், பிற்காப்பு இல்லங்கள் மற்றும் மகளிர் காப்பகங்களில் உள்ள இல்லவாசிகளுக்கும், காப்பகங்களில் இருந்து பயிற்சி முடித்து வெளியேறிய இல்லவாசிகளுக்கும், சமூக பாதுகாப்புத் துறையில் **'C'** மற்றும் **'D'** பிரிவில் ஏற்படும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் எல்லைக்கு உட்படாத காலிப் பணியிடங்களில் பணியமர்த்த தற்போது அரசாணை உள்ளது.

அனைத்து குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில் உள்ள, முற்றிலும் ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகள், சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்

துறையின் கீழ் இயங்கும், சமூக நலத் துறை, சமூக பாதுகாப்புத் துறை மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகங்களில் ஏற்படும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் எல்லைக்கு உட்படாத 'C' மற்றும் 'D' பிரிவு பணியிடங்களில், வயது, கல்வி மற்றும் பிற தகுதிகளுக்கு ஏற்ப, முன்னுரிமை அடிப்படையில் பணியமர்த்தப்படுவர். இதைத் தவிர, சத்துணவுத் திட்டம் மற்றும் அங்கன்வாடி மையங்களில் உள்ள பணியிடங்களிலும், தகுதிக்கு ஏற்ப, முன்னுரிமை அடிப்படையில் பணியமர்த்தப்படுவர்.

*******

## அத்தியாயம் - 6

# நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள் (SDGs)

நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகள் என்பவை உலகளாவிய **17** இலக்குகள் மற்றும் **169** குறிக்கோள்களின் தொகுப்பாகும். இது அனைவருக்கும் சிறந்த மற்றும் நிலையான எதிர்காலத்தை அடைவதற்கான வரைபடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்திய அளவில் நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்துவதை கண்காணிக்க மத்தியில் நிதி ஆயோக் செயல்படுகிறது. தமிழ்நாட்டில், சமூகநலம் மற்றும் சத்துணவுத்திட்டத் துறை, இலக்கு **5**க்கான செயல்பாட்டு துறையாகும். இது முறையே "பாலின சமத்துவத்தை அடைதல் மற்றும் அனைத்து பெண்கள் மற்றும் சிறுமியருக்கு அதிகாரம் அளித்தலை" நோக்கமாகக் கொண்டுள்ளது. நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு பாலின சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் ஆகியவை ஒருங்கிணைவது அவசியமாகும்.

அரசாணை எண்: **58,** சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் (ச.ந.3(1)) துறை, நாள்: **27.11.2019**-ன்படி சமூகநலத்துறையின் நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குப் பிரிவுடன் இணைந்து செயலாற்றுவதுடன் அவ்வப்போது பணிக்குழுக்கள்,

மாநில, மாவட்ட அலுவலகங்கள் மற்றும் இதர நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து பணிபுரிந்து இலக்குகளை எய்த உதவும்.

நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகளில், சமூகத்தில் நலிவடைந்த பிரிவினரின் நலனை உறுதி செய்திட உதவும் இலக்கு 5 சார்ந்த குறியீடுகளை அடைவதற்கு இத்துறை மாநிலத்திற்கே உரித்தான பல்வேறு திட்டங்களையும், மத்திய அரசின் நிதி உதவியுடன் கூடிய திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

**குறியீடு 5.1: மகளிர் மற்றும் பெண் குழந்தைகளுக்கு எதிரான பலவகையான பாகுபாடுகளையும் அனைத்து இடங்களிலும் முடிவுக்கு கொண்டு வருதல்.**

பெண் குழந்தைகளுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடு மற்றும் வன்முறைகளை அகற்றும் நோக்கத்துடன் இத்துறையானது **தொட்டில் குழந்தை திட்டத்தினை 1992** முதல் செயல்படுத்தி வருகிறது.

ஏழை குடும்பங்களின், பெண் குழந்தைகள் பயனடையும் வகையிலும் குழந்தை பாலின விகிதத்தை மேம்படுத்தும் வகையிலும் **முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம்** என்னும் பெண் குழந்தைகளின் பெயரிலான நீண்டகால வைப்பீட்டுத் திட்டத்தினை தமிழ் நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

குறைந்து வரும் குழந்தை பாலின விகிதத்தை மேம்படுத்தவும் மற்றும் பெண் குழந்தைகளின் பிறப்பு, படிப்பு மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்திடவும் மத்திய அரசின் **"பெண் குழந்தைகளை காப்போம்", "பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்"** திட்டம் **11** மாவட்டங்களில் **₹5.5** கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டம் மற்ற மாவட்டங்களில் தொலைத் தொடர்பு மற்றும் ஊடக செய்திகள் வாயிலாக நடைமுறை படுத்தப்பட்டு வருகிறது.

**குறியீடு 5.2: பொது மற்றும் தனியார் இடங்களில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் மற்றும் கடத்தப்படுதல் போன்ற பிற வகையான சுரண்டல்கள் உள்ளிட்ட அனைத்து விதமான வன்முறைகளை அகற்றுதல்.**

பாலினம் சார்ந்த வன்முறைகளை எதிர்கொள்ளும் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகள், பல்துறை ஒருங்கிணைப்புடன் கூடிய உதவிகளை பெற்று உடனடி தீர்வு பெற ஏதுவாக, **குழந்தைகளுக்கான கட்டணமில்லா தொலைபேசி (1098) மற்றும் பெண்களுக்கான கட்டணமில்லா தொலைபேசி (181),** ஆகியவை இத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அனைத்து மாவட்டங்களிலும் **‘சகி’ என்ற ஒருங்கிணைந்த சேவை மையங்களை** நடத்தி வருகிறது. இவை தனியார் மற்றும் பொது இடங்களில், குடும்பத்தில், சமுதாயத்தில், பணிபுரியும் இடத்தில் வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கு தற்காலிக தங்கும் வசதி, மருத்துவ உதவி, சட்ட உதவி, காவல் உதவி, துயரத்தில் உள்ள பெண்களுக்கு மனநல ஆலோசனை வழங்குதல் உள்ளிட்ட பல சேவைகளை வழங்கி வருகிறது.

சமூக பாதுகாப்புத் துறை மூலம் ஒழுக்கக் கேடான கடத்தல் (தடுப்பு) சட்டம்,1956-ன் கீழ் மீட்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு அடிப்படை வசதிகளான உணவு, உடை, தங்குமிடம் போன்றவை வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், இத்துறை வணிகரீதியான பாலியல் சுரண்டலுக்காக கடத்தப்பட்டு, பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு பராமரிப்பு, உணவு, உடை, மருத்துவம் மற்றும் சுகாதார உதவிகளை வழங்குவதற்கு **விழிப்புணர்வு/பாதுகாப்பு இல்லங்களை** நடத்தி வருவதுடன், ரொக்க உதவி ₹5,000/- அல்லது ₹10,000/- பொருளுதவி அவர்களின் சுய வேலைவாய்ப்பிற்காக தமிழ்நாடு சமூக பாதுகாப்பு நல நிதியிலிருந்து அளித்து வருகிறது.

மகளிர் உதவி மைய எண் சேவைகளை வலுப்படுத்தி, சென்னை நகரத்தின் பொதுவெளிகளை குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு பாதுகாப்பான

இடங்களாக மாற்றிட பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் உள்துறை ஆகியவற்றுடன் இணைந்து இத்துறை **"நிர்பயா நிதி"**யினை பயன்படுத்தி வருகிறது.

பெண்களின் உரிமை மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இத்துறை பல்வேறு **சமூக சட்டங்களை** செயல்படுத்துகிறது.

1. வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாத்தல் சட்டம், 2005 மற்றும் அதன் விதிகள், 2006.
2. வரதட்சணை தடைச் சட்டம், 1961.
3. வேலை செய்யும் இடத்தில் பெண்களை பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் குறைத்தல்) சட்டம், 2013.
4. தமிழ்நாடு விடுதிகள் மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தங்குமிடம் (ஒழுங்குமுறை) சட்டம், 2014 மற்றும் தமிழ்நாடு விடுதிகள் மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தங்குமிடம் (ஒழுங்குமுறை) விதிகள், 2015.
5. குழந்தை திருமணத் தடைச்சட்டம், 2006 .

மகளிர் மற்றும் பெண் குழந்தைகளின் உரிமைகளை வீட்டிலும் வெளி இடங்களிலும் பாதுகாத்திட ஏதுவாக பல்வேறு துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் சட்டங்கள், திட்டங்கள் மற்றும் சேவைகள் குறித்த விழிப்புணர்வை ஒருங்கிணைத்து வழங்கி, அவர்களை மேம்படுத்துவதற்கு ஏதுவாக மத்திய அரசின் **மகளிர்**

**சத்தி மையம்** அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், கூடுதலாக **தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்** பெண்களின் நலனைப் பாதுகாக்கவும், பெண்கள் தொடர்பான பாலின பிரச்சினைகள் குறித்து விசாரிக்கவும் செயல்பட்டு வருகிறது.

**குறியீடு 5.3: குழந்தை திருமணம், இளவயது திருமணம், கட்டாய திருமணம், பெண் உறுப்பு சிதைத்தல் உள்ளிட்ட கொடிய பழக்கங்களை ஒழித்தல்.**

குழந்தை திருமணம், ஊரகம் மற்றும் நகர்புற வேறுபாடின்றி தமிழ்நாட்டில் ஒரு சில மாவட்டங்களில் நடைமுறையில் உள்ளது. வளரிளம் பெண்களின் வாழ்க்கையில் குழந்தைத் திருமணம் என்பது அவர்களின் சுகாதாரம், எதிர்பார்ப்புகள் மற்றும் வாய்ப்புகளை சிதைப்பதாக உள்ளது. எனவே, குழந்தை திருமண தடுப்புச் சட்டத்தை இத்துறை தீவிரமாக முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. குழந்தை திருமணத்தை ஒழித்திடும் நோக்கத்தில் திருமண நிதியுதவி திட்டங்கள் பெண்ணுக்கு 18 வயது பூர்த்தியடையும் போது பயனடையும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

மேலும், **யுனிசெப் மற்றும் மாநில திட்டக்குழு** உடன் இணைந்து வளரிளம் பெண்களின் மேம்பாட்டிற்காகவும் குழந்தை திருமணம், இளவயது கர்ப்பம் ஆகியவற்றை தடுக்கவும் பல்வேறு

துறைகளை ஒருங்கிணைத்து தற்போது உள்ள நிறுவன அமைப்புகள் பொறுப்புணர்வுடனும், நலிவுற்ற பிரிவினர் எளிதில் அணுக கூடிய முறையில் செயல்படவும் இத்துறை பணியாற்றி வருகிறது.

**குறியீடு 5.4: சமூகப் பாதுகாப்பு, பொது சேவைகள் மற்றும் உள்கட்டமைப்பு வழிவகைகள் மூலம் ஊதியமற்ற பராமரிப்பு மற்றும் குடும்ப பணிகளுக்கு மதிப்பு மற்றும் அங்கீகாரம் அளித்தல் மற்றும் நாட்டிற்கு ஏற்ற வகையில் வீட்டிலும், குடும்பத்திலும் பொறுப்புகளை பகிர்ந்துக் கொள்வதை ஊக்குவித்தல்.**

ஆதரவற்ற மற்றும் விதவைப் பெண்கள், தங்கள் குழந்தைகளுடன் வாழ்வதற்கும் மற்றும் அவர்களின் கல்வி அல்லது தொழிற்பயிற்சியைத் தொடருவதற்கும் பெண்களுக்கான **சேவை இல்லங்கள்** இத்துறையின் கீழ் செயல்படுகின்றன.

சமூகத்தில் நலிவடைந்த பிரிவினரை பாதுகாக்கும் பொருட்டு வருவாய் நிர்வாக துறையின் கீழ் செயல்படுத்தப்படும் பல்வேறு **சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய திட்டங்களுக்கான** செயல்பாட்டுத் துறையாகவும் இத்துறை செயல்படுகிறது.

முதியோர் சமுதாயத்தில் மதிப்புடன் வாழவும், அவர்களின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யவும், இத்துறை **முதியோர் இல்லங்களையும், ஒருங்கிணைந்த வளாகங்களையும்,** பெற்றோர் மற்றும்

மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டத்தினையும், மூன்றாம் பாலினருக்கான சுய வேலைவாய்ப்பு திட்டங்களையும் இத்துறை செயல்படுத்தி வருகிறது.

**குறியீடு 5.5: அரசியல், பொருளாதாரம் மற்றும் பொது வாழ்வில் பெண்களின் முழுமையான பயனுள்ள பங்கேற்பு மற்றும் அனைத்து நிலைகளிலும் முடிவெடுக்கும் தலைமைக்கும் சமவாய்ப்புகள் அளித்தல்.**

அரசானது ஊரக வளர்ச்சி மற்றும் நகராட்சி நிர்வாகங்கள் மூலம் **உள்ளாட்சிகளில் பெண்களுக்கு 50 சதவிகிதம்** இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளதன் மூலம் பாலினம் சார்ந்த பிரச்சனைகளை எதிர்க்கவும், அரசு சார்ந்த நடவடிக்கைகளில் முடிவுகள் எடுக்கவும் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

அனைத்து மாவட்டங்களிலும் குறைந்த மற்றும் நடுத்தர வருமான பிரிவினைச் சார்ந்த பணிபுரியும் மகளிர், குறைந்த வாடகையில் பாதுகாப்பாக தங்கி பணிபுரிவதற்கு **மகளிருக்கான பணிபுரியும் விடுதிகளை** இத்துறை நடத்தி வருகிறது.

**கூட்டுறவு சங்கங்கள்** மூலம் பெண்களின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு பல்வேறு சிறப்பு திட்டங்களை தமிழகம் செயல்படுத்துகிறது. பெண்களுக்கு அதிகாரமளித்தல் அவர்களின் பொருளாதாரத் தேவைகளை பூர்த்தி

செய்வதுமட்டுமல்லாமல், அவர்களின் திறமையை பயன்படுத்துவதன் மூலம் அவர்களை சுயமாக செயல்பட வைத்து பாலின சமத்துவத்திற்கு வழிவகுக்கிறது.

**பாலின வரவுசெலவுத் திட்டம்** பெண்களைச் சார்ந்த திட்டமிடல், திட்டசெயலாக்கம், மதிப்பீடு மற்றும் கொள்கைகள் ஆகியவற்றின் பல்வேறு கட்டங்களில் பாலின முன்னேற்றத்தை முதன்மையாகக் கொண்டு செயல்படுகிறது. தமிழகம் 2020-2021 வரவுசெலவுத் திட்டத்தில் பாலினத் திட்டங்களுக்காக ₹78796.16 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இது மொத்த ஒதுக்கீட்டில் 38.83 சதவிகிதம் ஆகும்.

**குறியீடு 5.6: மக்கட் தொகை வளர்ச்சி குறித்த பன்னாட்டு மாநாட்டில் ஒப்புக் கொண்டவாறு, பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரம் மற்றும் உரிமைகளை அனைவருக்கும் உறுதிப்படுத்துதல்.**

மக்கள் நல்வாழ்வு துறையானது வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களின் மறுவாழ்வு மற்றும் பெண்களின் கருவுறுதல் மற்றும் கருவினை தொடரும் உரிமையினை பாதுகாக்கும் விதத்திலும் முக்கிய பங்களித்து வருகிறது. மக்கள் நல்வாழ்வு துறையானது, அனைவருக்கும் ஆரோக்கியம் என்ற குறிக்கோளுடன் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடையும் விதத்தில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்கு 1 மற்றும் 2-ன் நோக்கமான 'வறுமை' மற்றும் 'பசி' ஆகியவற்றை ஒழிப்பதற்கு இத்துறை சத்துணவுத் திட்டம் வாயிலாக, 5-15 வயதிற்குட்பட்ட 48,56,783 பள்ளி பயிலும் குழந்தைகளின் பசியினை நீக்கிட 43,246 மதிய சத்துணவுக்கூடங்களை செயல்படுத்தி இடைநிற்றலை தடுத்து உயர்கல்வியை தொடர துணை நிற்கிறது. இத்திட்டம், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வறுமையின் தீவிரத்தை குறைத்து அவர்களின் குழந்தைகள், குழந்தை தொழிலாளராக உருவாகாமல் பள்ளிகளுக்கு அனுப்ப உதவுகிறது.

6 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்து, சுகாதாரம் மற்றும் முன்பருவ கல்வியின் தேவைகளை நிறைவேற்றிட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் என்னும் சிறப்பு மிக்க திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வளரிளம் பெண்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டச்சத்து குறித்து நடவடிக்கைகளை இத்திட்டம் மேற்கொண்டு வருகிறது.

இத்துறையானது இலக்கு 5 மற்றும் இதர தொடர்புடைய இலக்குகளில் குறிப்பிட்டுள்ள நோக்கங்களை அடைவதில், பல துறைகளுடன் ஒருங்கிணைந்து, புதிய உத்திகளை புகுத்தி சமுதாயத்தில் பாலின சமத்துவத்தை கொணர்வதில், முழுமுனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

துறையின் திட்டங்கள் மற்றும் சேவைகள் பெற்றிட பொது மக்களுக்கு அனைத்து நிலைகளிலும், நீடித்த

நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம், அனைத்து மக்களும் அமைதி மற்றும் வளம் பெற்றிட தேசிய இயக்கத்தில் பங்கேற்க உறுதி செய்யப்படுகிறது.

*****

## அத்தியாயம் - 7

# சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்கள்

**7.1** சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு தேசிய அளவில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரான மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள், விதவைகள், விவசாயத் தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் 50 வயதைக் கடந்த ஆதரவற்ற மற்றும் திருமணமாகாத ஏழைப் பெண்கள் ஆகியோருக்கு இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. 17.05.2011 முதல் அனைத்து வகையான ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை ₹500-லிருந்து ₹1,000/-ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் பெரும்பான்மையான மக்களுக்கு குறிப்பாக முதியோர்களுக்கும், மாற்றுத் திறனுடையவர்களுக்கும் சென்றடைய ஏதுவாக, இத்திட்டத்திற்கான விதிமுறைகள் வெகுவாக தளர்த்தப்பட்டுள்ளன. 05.02.2020 அன்றுள்ளவாறு, 31,63,247 பயனாளிகள் பல்வேறு திட்டங்களின் மூலம் கீழ்க்காணுமாறு பயன் பெற்று வருகின்றனர்.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பயனாளிகள் எண்ணிக்கை (5.2.2020 அன்றுள்ளவாறு) |
|---|---|---|
| 1 | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 13,53,736 |
| 2 | இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 61,863 |
| 3 | இந்திராகாந்தி விதவையர் ஓய்வூதியத் தேசியத் திட்டம் | 5,62,334 |
| 4 | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | 2,86,931 |
| 5 | ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம் | 4,59,588 |
| 6 | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் - ஓய்வூதியத் திட்டம் - | 2,95,711 |
| 7 | ஆதரவற்ற / கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் திட்டம் | 1,15,091 |
| 8 | 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | 23,382 |
| 9 | இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதிய திட்டம் | 4,611 |
| | மொத்தம் | 31,63,247 |

## சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்ட விவரங்கள்

| வ. எண். | திட்டத்தின் பெயர் | வயது வரம்பு | மத்திய அரசின் பங்கீடு | மாநில அரசின் பங்கீடு |
|---|---|---|---|---|
| 1 | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 60 வயது முதல் 79 வயது வரை | ₹200/- | ₹800/- |
| | | 80 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது | ₹500/- | ₹500/- |
| 2 | இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 18 வயது முதல் 79 வயது வரை | ₹300/- | ₹700/- |
| 3 | இந்திராகாந்தி விதவையர் ஓய்வூதியத் தேசியத் திட்டம் | 40 வயது முதல் 79 வயது வரை | ₹300/- | ₹700/- |
| 4 | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது | -- | ₹1000/- |
| 5 | ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம் | 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது | -- | ₹1000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| **6** | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் / ஓய்வூதியத் திட்டம் | **60** வயது மற்றும் அதற்கு மேற்பட்டவயது | -- | **₹1000/-** |
| **7** | ஆதரவற்ற / கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் திட்டம் | **30** வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது | -- | **₹1000/-** |
| **8** | **50** வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | **50** வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது | -- | **₹1000/-** |
| **9** | இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதியத் திட்டங்கள் | வழங்கப்படும் ஓய்வூதியத் திட்டங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வயது வரம்பு | -- | வழங்கப்படும் ஓய்வூதியத் திட்டங்க்ளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிதிப்பங்கீடு இதற்கும் பொருந்தும். |

## 7.2 நிதி ஒதுக்கீடு

தகுதியுடைய நிலுவையில் உள்ள அனைத்து விண்ணப்பதாரர்களும் ஓய்வூதியம் பெறும்பொருட்டு **5** இலட்சம் பயனாளிகளுக்கு அரசு கூடுதலாக நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தின் கீழ் **1,56,854** புதிய

தகுதியான பயனாளிகள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

**2020-2021 ஆம் ஆண்டில் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களுக்கு ₹4,306.76 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 7.3 தகுதி வரம்பு தளர்வு

சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் ஓய்வூதியம் பெறுவதற்கான "ஆதரவற்றோர்" என்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் **29.01.2020** அன்று பின்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது:-

- அசையா சொத்து மதிப்பு தொடர்பான தகுதி வரம்பு **₹50,000** லிருந்து **₹1,00,000** ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- அசையா சொத்தின் மதிப்பினை கணக்கிடும் போது, அரசு திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட இலவச வீடு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியம் பெற ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையை நீக்கியும், ஊனத்தின் தன்மை **60** சதவிகிதத்திலிருந்து **40** சதவிகிதமாக குறைத்தும் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் பயன்பெற வருமான

வரம்பை 3 இலட்சமாக உயர்த்தியும் உத்திரவிடப்பட்டுள்ளது.

மத்திய அரசின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் மூன்று ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் ஓய்வூதியம் பெற கீழ்க்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்:-

| வ.எண் | திட்டத்தின் பெயர் | தகுதிகள் |
|---|---|---|
| 1 | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | தகுதி - ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>வருமானம்-வறுமைக்கோட்டிற்குக் கீழ் இருத்தல் வேண்டும்.<br>வயது-60 மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும். |
| 2 | இந்திராகாந்தி விதவையர் ஓய்வூதியத் தேசியத் திட்டம் | தகுதி - ஆதரவற்ற விதவையாக இருத்தல் வேண்டும்.<br>வருமானம் - வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருத்தல் வேண்டும்<br>வயது-40 மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும். |
| 3 | இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | ஊனம் நிலை - 80 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும்.<br>வருமானம் - வறுமைக்கோட்டிற்கு கீழ் இருத்தல் வேண்டும்.<br>வயது-18 மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும். |

தமிழ்நாடு அரசின் முழு நிதி ஆதாரத்துடன் செயல்படுத்தப்படும் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் பயன்பெற கீழ்க்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தகுதிகள் |
|---|---|---|
| 1 | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | தகுதி-வேலையற்றவராக இருத்தல் வேண்டும். தனியார் வேலை மற்றும் சுயதொழில் செய்பவராக இருப்பின் ஆண்டு வருமானம் ₹3.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>வயது-18 மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும்.<br>ஊனம் நிலை-40 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும். |
| 2 | ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம் | தகுதி- ஆதரவற்ற விதவையாக இருத்தல் வேண்டும்.<br>வயது-18 மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும்.<br>அசையா சொத்தின் மதிப்பு ₹1,00,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |
| 3 | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்/ஓய்வூதியத் திட்டம் | தகுதி-ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>வயது-60 மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும்.<br>நிலமற்ற விவசாயத் தொழிலாளியாக இருத்தல் வேண்டும்.<br>அசையா சொத்தின் மதிப்பு ₹1,00,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |
| 4 | ஆதரவற்ற / கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் திட்டம் | தகுதி-ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>வயது-30 மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும்.<br>சட்ட பூர்வமாக விவாகரத்து அல்லது குறைந்தது 5 ஆண்டுகள் கணவனால் கைவிடப்பட்டவரக இருத்தல் வேண்டும் அல்லது நீதிமன்றத்திலிருந்து சட்டப்பூர்வமாக பிரிவு சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அசையா சொத்தின் மதிப்பு ₹1,00,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |
| 5 | 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | தகுதி- ஆதரவற்ற திருமணமாகாத பெண்ணாக இருத்தல் வேண்டும்.<br>வயது-50 மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும்.<br>அசையா சொத்தின் மதிப்பு ₹1,00,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |

**80** வயதைக் கடந்து ஓய்வூதியம் பெற்று வரும் **2.19** இலட்சம் பயனாளிகளின் சிரமத்தினை போக்கும் வகையில், அப்பயனாளிகளின் வீட்டிற்கே சென்று இந்திய அஞ்சல் துறையின் மின் பண அஞ்சல் **(eMO)** மூலம் ஓய்வூதியம் ஜனவரி **2019** முதல் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கென, ஆண்டுக்கு **₹1.09** கோடி கூடுதலாக செலவிடப்படுகிறது.

### 7.4 ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படும் இதர பயன்கள்

ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகைகளின் போது, சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் ஓய்வூதியம் பெறும் **31.63** இலட்சம் பயனாளிகளில் ஆண் ஒருவருக்கு ஒரு வேட்டியும், பெண் ஒருவருக்கு ஒரு சேலையும் வழங்கப்படுகிறது.

### 7.5 நிவாரணத் திட்டங்கள்

#### 7.5.1 விபத்து நிவாரணத் திட்டம்

அறிவிக்கப்பட்ட **44** வகை தொழில்களில் ஈடுபட்டு வரும் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பத்தினரின், **18**-லிருந்து **59** வயத்திற்கு உட்பட்ட வருமானம் ஈட்டும் முதன்மையான நபர் விபத்தில் மரணமடைந்து விட்டால், அவரின் குடும்பத்திற்கு இத்திட்டத்தின் கீழ் தேசிய குடும்ப நல நிதியிலிருந்து நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை **30.12.2015** முதல் **₹15,000**-லிருந்து **₹20,000** ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

### 7.5.2 நலிந்தோர் நிவாரணத் திட்டம்

வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களில் **18**லிருந்து **59** வயதிற்குட்பட்ட வருவாய் ஈட்டும் முதன்மையான நபர் இயற்கை மரணம் அடைந்து விட்டால், அக்குடும்பத்திற்கு இத்திட்டத்தின் கீழ் தேசிய குடும்ப நல நிதியிலிருந்து நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது. இந்நிவாரணத் தொகை **30.12.2015** முதல் **₹10,000-**லிருந்து **₹20,000/-**ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

## 7.6 சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் மூலம் வழங்கப்படும் ஓய்வூதியத்தை பெற இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்கும் முறை

அரசு நலத் திட்டங்களை செயல்படுத்துவதில் தற்போது உள்ள அமைப்புகளை சீராக்கவும், அரசு நல உதவிகள் பெறுவதை எளிதாக்கவும் பொது சேவை மையம் / இ-சேவை மையம் மூலமாக ஒரு பக்க படிவத்தில், இணையம் வழியே விண்ணப்பிக்கும் திட்டத்தை, சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய திட்டங்களின் கீழ் ஓய்வூதியம் பெற, வருவாய்த் துறை அறிமுகப்படுத்தி உள்ளது. இணையம் வழி சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் முதலில் சரிபார்க்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அனுப்பப்படும். கிராம நிர்வாக அலுவலர் விண்ணப்பத்தை சரிபார்த்த பின்னர் உயர் அதிகாரிக்கு ஓய்வூதியம் ஒப்பளிப்பதற்காக அனுப்புவார். இத்திட்டத்தின் மூலம் விண்ணப்பத்தின்

நிலையை இணைய வழியே அறிய முடியும். இத்திட்டம் உயர் அலுவலர்களின் பொறுப்புடைமை, வெளிப்படைத் தன்மை மற்றும் நிலுவையில் உள்ள மனுக்களை கண்காணிப்பது ஆகியவற்றை உறுதி செய்து மேம்படுத்தப்பட்ட நிர்வாகத்திற்கு வழிவகுக்கிறது. தற்போது மாற்றுத் திறனாளிகளுக்கான ஓய்வூதியத் திட்டம் இணைய வழி விண்ணப்பத்தின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பிற ஓய்வூதியத் திட்டங்களுக்கும் இணைய வழி விண்ணப்பத்தினை விரிவுபடுத்த தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் வாயிலாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**Dr.V.சரோஜா,**
**சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர்**

## இணைப்பு - 1

### சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையால் கடைபிடிக்கப்படும் முக்கியமான நாட்களின் விவரங்கள்

| | | |
|---|---|---|
| **1.** | ஜனவரி **24** | தேசிய பெண் குழந்தைகள் தினம் |
| **2.** | பிப்ரவரி **24** | மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்புத் தினம் |
| **3.** | மார்ச் **8** | சர்வதேச மகளிர் தினம் |
| **4.** | ஏப்ரல் **15** | மூன்றாம் பாலினர் தினம் |
| **5.** | ஜீன் **12** | குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினம் |
| **6.** | ஜீன் **15** | முதியோர்களுக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினம் |
| **7.** | அக்டோபர் **1** | சர்வதேச முதியோர் தினம் |
| **8.** | நவம்பர் **14** | குழந்தைகள் தினம் |
| **9.** | நவம்பர் **20** | சர்வதேச குழந்தை உரிமைகள் தினம் |
| **10.** | நவம்பர் **26** | வரதட்சணை எதிர்ப்பு தினம் |

## இணைப்பு - 2

### வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு - 2020-2021
### மானியக் கோரிக்கை எண்.45
### சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

**2020-2021-**ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மொத்த ஒதுக்கீடு **₹5,93,512.51 இலட்சம்.**

| 2020-2021 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு | | |
|---|---|---|
| கணக்குத் தலைப்பு | | (₹இலட்சத்தில்) |
| வருவாய் பகுதி | | ஒதுக்கீடு |
| 2059 | பொதுப் பணிகள் | 258.30 |
| 2225 | சமூக நல இயக்ககம் | 38.05 |
| 2235 | சமூகப் பாதுகாப்பு இயக்ககம் | 16,536.08 |
| 2235 | சமூக நல இயக்ககம் | 1,15,756.88 |
| 2235 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம் | 16,467.16 |
| 2236 | தலைமைச் செயலகம் | 35.69 |
| 2236 | சமூக நல இயக்ககம் | 1,89,072.61 |
| 2236 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம் | 2,49,914.85 |
| 2251 | தலைமைச் செயலகம் | 614.53 |

| | | |
|---|---|---|
| 2551 | சமூக நல இயக்ககம் | -- |
| | **வருவாய் பகுதி மொத்தம்** | **5,88,694.15** |
| **மூலதனப் பகுதி** | | |
| 4235 | சமூக நல இயக்ககம் | .01 |
| 4235 | சமூகப் பாதுகாப்பு இயக்ககம் | 845.49 |
| 4236 | சமூக நல இயக்ககம் | .01 |
| 4236 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம் | 3,947.84 |
| | **மூலதனப்பகுதி மொத்தம்** | **4,793.35** |
| **கடன் பகுதி** | | |
| 7610 | அரசு பணியாளர்களுக்கான கடன்கள் | 25.01 |
| | **கடன் பகுதி மொத்தம்** | **25.01** |
| | **முழு மொத்தம்** | **5,93,512.51** |

## முழு மொத்தம்

| | | |
|---|---|---|
| வருவாய் பகுதி | : | ₹ **5,88,694.15** இலட்சம் |
| மூலதனப் பகுதி | : | ₹ **4,793.35** இலட்சம் |
| கடன் பகுதி | : | ₹ **25.01** இலட்சம் |
| மொத்தம் | : | ₹ **5,93,512.51** இலட்சம் |
| | | அல்லது |
| | | ₹ **5,935.13** கோடி |

**2020-2021-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்த் துறை மானியக் கோரிக்கை எண்.41-ன் கீழ் ₹4,306.76 கோடி சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

*******